<u>**க.து.ந.க.எண்.டி1/107/2004–14**</u>

<u>**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.07.2014 நாளிட்ட குறிப்பு**</u>

தீர்மான எண்.474/2014 **பொருள் எண்.01**

<u>**கல்வித்துறை – சமுதாயக் கல்லூரி, ஆழ்வார்பேட்டை(கிழக்கு) வளாகத்தில் –ரொட்டி தயாரிக்கும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் (MOU) 10 ஆண்டுகள் அளிக்கப்பட்டது – மேலும் 07.08.2014 முதல் 06.08.2017வரை 3 ஆண்டுகள் நீட்டிக்க அனுமதி**</u>

சென்னை மாநகராட்சி, மண்டலம்–10, பீமண்ணன் பேட்டையில் இயங்கி வரும் சமுதாயக் கல்லூரி(கிழக்கு)யில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு சென்னை கிழக்கு சுழற்சங்கம், சென்னை சியுலினரி இன்ஸ்டியுட்(CCI) இணைந்து ரொட்டி தயாரிக்கும் பயிற்சி தருவதற்கு மாமன்ற தீர்மானத்தின்படி (மன்றத்தீர்மான எண்.123/2004, நாள்.24.06.2004) புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் (MOU) மூலம் 10 ஆண்டுகள் ஆகஸ்டு 2004 முதல் ஆகஸ்டு 2014 வரை நடத்த ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தம் 06.08.2014 அன்றுடன் முடிவடைகிறது.

ரொட்டி தயாரிக்கும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையில் முதலில் 7ஆண்டுகளும் பின்னர் 3 ஆண்டுக்கு நீட்டிப்பு செய்து ஒப்பந்தம் செய்யப்பட்டது. இவ்வொப்பந்தம் 06.08.2014 அன்றுடன் முடிவடையும் நிலையில் துணை ஆணையர்(கல்வி) அவர்களின் அனுமதி பெற்று சில கூடுதல் விவரங்கள் கேட்டு சென்னை சுழற்சங்கத்திற்கு (கிழக்கு) கடிதம் அனுப்பப்பட்டு பதில்கள் பெறப்பட்டது.

இப்பயிற்சியில் பயன்பெற்ற பயனாளிகளின் விவரம்:

| வ.எண் | வருடம் | மாணவர்களின் சேர்க்கை | பயிற்சி முடித்த மாணவர்களின் எண்ணிக்கை | வேலைவாய்ப்பு பெற்ற விவரம் |
|---|---|---|---|---|
| 1. | 2005–06 | 55 | 18 | 18 |
| 2. | 2006–07 | 40 | 37 | 37 |
| 3. | 2007–08 | 12 | 09 | 09 |
| 4. | 2008–09 | 53 | 18 | 18 |
| 5. | 2009–10 | 35 | 33 | 33 |
| 6. | 2010–11 | 06 | 04 | 04 |
| 7. | 2011–12 | 15 | 05 | 05 |
| 8. | 2012–13 | 14 | 10 | 10 |
| 9. | 2013–14 | 19 | 05 | 04 |
| | மொத்தம் | 249 | 139 | 138 |

ரொட்டி தயாரிக்கும் பயிற்சி திட்டத்தினை நீட்டிப்பதற்கு 30.05.2014 அன்று துணை ஆணையர்(கல்வி) அவர்களின் கருத்துரு பெறப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்திற்கு செலவிடப்படும் அனைத்து தொகையினை சென்னை கிழக்கு சுழற்சங்கமே செலவிடுகிறது. இதனால் சென்னை மாநகராட்சிக்கு எந்த இழப்பீடும் இல்லை.

எனவே,

அ. சமுதாய கல்லூரி கிழக்கு வளாகத்தில் ரொட்டி தயாரிக்கும் பயிற்சி திட்டத்தினை மேலும் 3 ஆண்டுகள் 2014 முதல் 2017 (07.08.2014 முதல் 06.08.2017)வரை நீடிப்பதற்கும்,

ஆ. இத்திட்ட பயிற்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்து கொள்ளவும்,

மேற்கண்ட ‘அ’ மற்றும் ‘ஆ’ ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.27/2014, நாள்12.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ4/2463/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.475/2014 **பொருள் எண்.02**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–7, வார்டு–83ல் கொரட்டூர் கிராமம் பழைய சர்வே எண்.189 – 0.81.0 ஹெக்டேர் நிலத்தில் அமைந்துள்ள ஸ்ரீஆதிகேசவ பொருமாள் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான காலி நிலத்தில் அம்மா உணவகம் அமைக்க அனுமதி**

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்கள் முதன்மை செயலர் / ஆணையருக்கு அனுப்பிய குறிப்புரையில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் கிராமம், மண்டலம்–7, வார்டு–83 ல் அம்மா உணவகம் நடத்த உச்தேசிக்கப்பட்டு இடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடமோ அல்லது கட்டிடங்களோ இல்லை என்பதால் கொரட்டூர் கிராமம் பழைய புல எண்.189–ல் கிராமம், 0.81.0 ஹெக்டேர் நிலம் அமைந்துள்ள ஸ்ரீஆதிகேசவ பொருமாள் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான இடம், காலியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 17.07.2014–ஆம் நாளிட்ட குறிப்புரையில் மேற்படி கிராம பழைய சர்வே எண்.189.0.81.0 ஹெக்டேர் நிலம் ஸ்ரீஆதிகேசவ பொருமாள் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான காலி இடத்தில் அம்மா உணவகம் அமைக்க முன்நுழைவு அனுமதியும் மற்றும் நிலஉரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார்.

தனி வட்டாட்சியர்/நிமஉது–இன் குறிப்பில் கொரட்டூர் கிராமம் மேற்படி புல எண்.189, கிராம கணக்குகளில் பட்டா எண்.1174, ஸ்ரீஆதிகேசவ பெருமாள் கோயில் தர்கால தர்மாகர்த்தா என பதிவாகியுள்ளது. இதன் மொத்த பரப்பு 0.81.0 ஹெக்டர் நன்செய் வகைப்பாடு உடையது இப்புலம் காலியாக உள்ளது எனவும், இதன் ஜக்பந்தி கீழ்கண்டவாறு உள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு – புல எண்.385, 461 (அக்கரகாரம் குடியிருப்புகள்)

தெற்கு – புல எண்.190, 191 (காலி இடம் மற்றும் குடியிருப்புகள்)

கிழக்கு – புல எண்.188 (குடியிருப்பு)

மேற்கு – வடக்கு ரெயில்வே ரோடு (வினாயகர் கோயில் கிணறு மற்றும் காலியிடம்)

மேற்கண்ட ஜக்பந்தி உள்ள நிலம் இந்து அறநிலையத்துறைக்கு சம்மந்தப்பட்ட அருள் மிகு ஆதிகேசவ பெருமாள் கோயிலுக்கு சொந்தமான நிலம் என விளம்பர பலகை வைக்கப்பட்டுள்ளது. இப்புலத்தில் மேற்கு புறம்பாக வடக்கு தெற்காக உயர்மின்அழுத்த கம்பி செல்லுகிறது. ஒரு டிரான்ஸ்பாம் மற்றும் காவல் துறை சேவை மையம் உள்ளதாகவும் இவைகளுக்கிடையே அம்மா உணவகம் கட்டுவதற்கு போதுமான வசதி இல்லை என்பதால். இப்புலத்தின் தெற்கு பகுதியில் 60×60 =3600 ச. அடி பரப்பு விசாலமாக உள்ளது. இந்த இடத்திற்கு இந்து அறநிலையத்துறையிடம் முன்னுழைவு அனுமதி கோர பரிந்துரை செய்துள்ளார்.

ஸ்ரீஆதிகேசவ பெருமாள் கோயிலுக்கு சொந்தமான காலியாக உள்ள 3600 ச.அடி பரப்புள்ள நிலத்தை சென்னை மாநகர முனிசிபல் விதி 74(சி) –ன் படி குத்தகைக்கு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என்பதால் தற்போது காலியாக உள்ள மேற்படி நிலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அம்மா உணவகம் நடத்த இலவசமாகவோ அல்லது பெயரளவில் குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ (ச.அடிக்கு ரூ.1/– வீதம்) அல்லது நில உரிமை மாற்றம் அடிப்படையிலேயோ இந்து அறநிலையத்துறையிடமிருந்து ஒதுக்கீடு கோருவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.416/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ12/2199/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.476/2014 **பொருள் எண்.03**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம் 12, வார்டு–161, ஆலந்தூர் எம்.கே.என். சாலையில் தமிழக அரசின் இந்து சமய அறநிலைய துறைக்கு சொந்தமான அருள்மிகு சுப்பிரமணியசாமி கோவிலுக்கு சொந்தமான இடம்– அம்மா உணவகம் அமைக்க அனுமதி**

12–வது மண்டல அலுவலரின் குறிப்பில் மண்டலம் 12, வார்டு–161, ஆலந்தூர் எம்.கே.என். சாலையில் மெட்ராஸ் கேப் என்ற பெயரில் உணவு விடுதி ஒன்று குத்தகை அடிப்படையில் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான அருள்மிகு சுப்பிரமணியசாமி கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் 1200 ச.அடி பரப்பில் இயங்கி வந்ததாகவும் தற்போது அவ்விடம் காலியாக உள்ளது என்றும் மேற்படி இடத்தில் அம்மா உணவகம் அமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு 161–வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார் என்று தெரிவித்து மேற்படி நிலத்தை நிலம் மற்றும் உடைமைத்துறை மூலமாக கையகப்படுத்தவோ அல்லது நீண்டநாள் குத்தகை அடிப்படையில் பெறுவதற்கு 12–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.62, நாள்.12.6.2014–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம் 12, வார்டு–161, ஆலந்தூர் எம்.கே.என். சாலையில் இந்து சமய அறநிலைய துறைக்கு சொந்தமான அருள்மிகு சுப்பிரமணியசாமி கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் ஏற்கனவே மெட்ராஸ் கேப் என்ற பெயரில் நடத்தி வந்த உணவு விடுதி தற்போது காலி செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகர முனிசிபல் விதி 74(சி)–ன்படி பிறத்துறை நிலங்களை மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் குத்தகைக்கு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என்பதால் தற்போது காலியாக உள்ள மேற்படி நிலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அம்மா உணவகம் நடத்த இலவசமாகவோ அல்லது பெயரளவில் வாடகை அல்லது குத்தகைக்கோ (ச.அடிக்கு ரூ.1 /– வீதம்) அல்லது நில உரிமை மாற்றம் அடிப்படையிலோ இந்து சமய அறநிலைய துறையிடமிருந்து ஒதுக்கீடு கோருவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.418/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2583/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.477/2014 **பொருள் எண்.04**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – வட்டார அலுவலகம் (தெற்கு) – மண்டலம்–13, வார்டு–170ல் சிட்கோவுக்கு சொந்தமான இடம் – அம்மா உணவகம் அமைக்க அனுமதி**

வட்டார இணை ஆணையர்(தெற்கு) அவர்கள் ‘‘சிட்கோ’’ வுக்கு சொந்தமான இடத்தில் அம்மா உணவகம் அமைத்தல் தொடர்பாக தடையின்மைச் சான்று பெறுவதற்கு நிலம் மற்றும் உடைமைத்துறையின் துறை ரீதியான பரிசீலனை பெறுவது தொடர்பாக கருத்துரு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

தனிவட்டாட்சியரின் குறிப்பில், மண்டலம்–13, வார்டு–170, ஆலந்தூர் கிராமம், பிளாக் எண். 3, டி.எஸ்.எண். 2/1, சிட்கோவுக்கு சொந்தமான இடத்தில் அம்மா உணவகம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது எனவும், இப்புலம் கிண்டி பேருந்து நிலையத்திற்கு எதிரில் கத்திபாரா சாலை, நடைப்பாதை மற்றும் சர்வீஸ் சாலைக்கு இடையில் உள்ளது என்றும், கிண்டி பேருந்து நிலையம் எதிரில், ஏற்கனவே 4 சிற்றுண்டி கடைகள் இயங்கி வருகின்றது எனவும், இப்பகுதி பயணிகள் அதிகம் வந்து போகும் இடமாகவும் உள்ளது என்றும், தொழிற்சாலைகள் மத்திய தொழிற்கல்வி பயிற்சி நிலையங்கள் நிறைந்த பகுதியாக உள்ளது எனவும், கத்திபாரா சாலை மற்றும் சர்வீஸ் சாலைக்கு இடையில் 4 சிற்றுண்டி கடைகளை அடுத்து காலியிடங்கள் உள்ளன என்றும், இந்த காலி இடத்தில் அம்மா உணவகம் அமைக்க (11.96 X 19.94) ச.மீ இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது எனவும், தற்போது இவ்விடத்தில் இரு சக்கர வாகனங்களை நிறுத்தி உள்ளன எனவும், இப்புலத்தின் நாற்புற எல்லைகள் விவரம் வடக்கில் – காலியிடம் மற்றும் மரங்கள், தெற்கில் – சிற்றுண்டிக் கடைகள், மேற்கில் – கத்திபாரா சாலை, கிழக்கில் – சர்வீஸ் சாலையும், இப்புலம் சிட்கோ நிறுவனத்தினர் கட்டுப்பாட்டில் உள்ளதால் சிட்கோ நிறுவன மேலாண்மை இயக்குநரிடம் தடையில்லா சான்று பெற்று அம்மா உணவகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் மண்டலம் 13, வார்டு–170ல், சிட்கோ நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தில் அம்மா உணவகம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடத்தில் அருகில் ஏற்கனவே சிற்றுண்டி கடைகள் இருப்பதால் மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் அம்மா உணவகம் அமைப்பதால் பொதுமக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள்.

எனவே, சென்னை மாநகர முனிசிபல் விதி 74(சி)–ன்படி பிறத்துறை நிலங்களை மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் குத்தகைக்கு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என்பதால் தற்போது காலியாக உள்ள மேற்படி நிலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அம்மா உணவகம் நடத்த இலவசமாகவோ அல்லது பெயரளவில் வாடகை அல்லது குத்தகைக்கோ (ச.அடிக்கு ரூ.1 /– வீதம்) அல்லது நில உரிமை மாற்றம் அடிப்படையிலோ சிட்கோ நிறுவனத்திடமிருந்து ஒதுக்கீடு கோருவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.409/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ4/1753/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.478/2014 **பொருள் எண்.05**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–4, பகுதி–11, கோட்டம்–44 ல் – நொட்டால் தோட்டம், 2–வது தெரு – பழைய வரிவசூல் அலுவலகம் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு மாத வாடகை நிர்ணயம் செய்யக்கோரி அனுமதி**

44–வது வட்ட மாமன்ற உறுப்பினர் அவர்கள் வணக்கத்திற்குரிய மேயரிடம் அளித்துள்ள கடிதத்தில் 44–வது வார்டு நெட்டால் தோட்டம் பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் உணவுப்பொருள் அங்காடிக்காக மிகவும் சிரமப்பட்டு 2 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று வருவதாகவும், மேலும் நொட்டல் தோட்டம் 2–வது தெருவில் 44–வது வார்டு அலுவலகத்தின் அருகாமையில் ஓர் காலியான அலுவலகம் உள்ளதாகவும், அந்த அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் தற்போது 44–வது வார்டு அலுவலகத்தில் ஒன்றாக பணிபுரியதால் அந்த அலுவலகம் காலியாக உள்ளதாக தெரிவித்துள்ளார். தற்போது பயன்பாட்டில் இல்லாத பழைய வரிவசூல் அலுவலகத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளார்.

சென்னை மாநகராட்சி மண்டலம்–4, பகுதி–11, கோட்டம்–44 ல் உள்ள நெட்டால் தோட்டம் 2–வது தெருவில் அமைந்துள்ள பழைய வரிவசூல் அலுவலகத்தை நுகர்பொருள் அங்காடியாக மாற்றவும், 4–வது வார்டு குழு எண்.320/2014, நாள்.12.02.2014–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுப்ரமணிய சிவா கூட்டுறவு பண்டக சாலை நியாயவிலைக்கடை தலைவரின் கடிதத்தில் கடை எண்.2 (CF012) ஏற்கனவே, நெட்டால் தோட்டத்தெருவில் இயங்கி தற்பொழுது அம்பேத்கார் சாலை பெரியார் நகரில் இயங்கி வருவதாகவும், இக்கடைக்கு இணைக்கப்பட்ட குடும்ப அட்டைகள் நெட்டால் தோட்டத் தெரு மற்றும் வீரபாண்டியன் தெருவில் உள்ளவை எனவும், தெரிவிக்கப்பட்டது. எனவே, 44–வது வட்ட நெட்டால் தோட்டம் 2–வது தெருவில் பல்நோக்கு திட்ட கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு பயன்படுத்தாமல் உள்ளதாகவும், அந்த கட்டிடத்தை சிவா கூட்டுறவு பண்டக சாலை நியாயவிலைக்கடை எண்.2 (CF012) ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4–வது மண்டல அலுவலர் குறிப்பில் மண்டலம்–4, பகுதி–11, கோட்டம்–44ல் உள்ள நொட்டல் தோட்டம் 2–வது தெருவில் அமைந்துள்ள பழைய வரிவசூல் அலுவலகத்தை நுகர்பொருள் அங்காடிக்கு ஒதுக்கீடு செய்யுமாறு தெரிவித்தள்ளார். மேலும், 20.08.2014–ஆம் நாளிட்ட 4–வது மண்டல உதவி வருவாய் அலுவலர் அவர்கள் மேற்படி இடத்தில் வாடகையாக ஒரு சதுர அடிக்கு ரூ.15/– என தோரயமாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மன்ற தீர்மான எண்.312/2013, நாள்.22.05.2013–ல் பொது மக்கள் நலன் கருதி வியாபாரம் நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிக கழக நியாயவிலைக்கடைகளுக்கு இனிவரும் காலங்களில் சதுரடிக்கு வாடகை ரூ.5/– என்றே நிர்ணயம் செய்யலாம் என்றும் மன்றம் தீர்மானித்துள்ளது.

எனவே, மண்டலம்–4, வார்டு–44 மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 296 ச. அடி கொண்ட பழைய வரிவசூல் அலுவலகத்தை சுப்பிரமணிய சிவ கூட்டுறவு பண்டகசாலைக்கு நியாயவிலை கடை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்யவும் மாத வாடகையாக ஒரு சதுர அடிக்கு ரூ.5/– என்று நிர்ணயம் செய்வதற்கும், 12 மாத வாடகையினை முன்பணமாக செலுத்தவும் மற்றும் கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்ய இருப்பின் மாநகராட்சியாக முன் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் ஆகிய நிபந்தனைகளுடன் சுப்பிரமணிய சிவ கூட்டுறவு பண்டக சாலைக்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.417/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ12/2585/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.08.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.479/2014 **பொருள் எண்.06**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–12, வார்டு–162 ல் – நோபல் தெருவில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நூலகக் கட்டிடம் – நியாய விலைக்கு இட ஒதுக்கீடு செய்ய அனுமதி**

காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை பொது மேலாளரின் 24.08.2013 நாளிட்ட கடிதத்தில், எம்.கே.என். ரோடு, எம்.ஜி.ஆர். நகர் மீனம்பாக்கத்தில் நியாய விலை கடை செயல்பட்டு வருவதாகவும், இக்கட்டிடம் மோசமான நிலையில், நியாய விலைக்கடை செயல்படாத அளவில் உள்ளது என்றும் நோபல் தெருவில் அரசாங்கத்திற்கு சொந்தமான செயல்படாத உள்ள நூலக கட்டிடத்தினை மேற்படி இடத்தில் செயல்பட்டு வரும் நியாயவிலைக்கடைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இதனைத் தொடர்ந்து 162–வது வார்டு மாமன்ற உறுப்பினர் மேற்படி நூலகக்கட்டிடத்தில் பொது மக்கள் உபயோகப்படுத்தும் வகையில் நியாயவிலைக்கடை செயல்பட உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

12–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.93, நாள்.18.7.2014ல் வார்டு–162ல் நோபல் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நூலகக் கட்டிடம் உபயோகப்படுத்தப்படாமல் பூட்டப்பட்ட நிலையில் உள்ளதால், இக்கட்டிடத்தில் நியாயவிலைக்கடை நடத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இந்நூலகக்கட்டிடத்தின் பரப்பளவு 630 சதுரஅடி என 12–வது மண்டல உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மன்ற தீர்மான எண்.312/2013, நாள்.22.05.2013–ல் பொது மக்கள் நலன் கருதி வியாபாரம் நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிக கழக நியாயவிலைக்கடைகளுக்கு இனிவரும் காலங்களில் சதுரடிக்கு வாடகை ரூ.5/– என்றே நிர்ணயம் செய்யலாம் என்றும் மன்றம் தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில் மேற்படி அரசு நிறுவனமான காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலைக்கு நியாயவிலை கடைகள் நடத்த மண்டலம்–12, வார்டு–162, நோபல் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 630 ச.அடி கொண்ட நூலக கட்டிடத்தை மாத வாடகையாக ரூ.630×5=3150/– செலுத்த வேண்டும் என்றும், 12 மாத முன்பணம் 3150×12=ரூ.37,800/– தொகையினை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இக்கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.406/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/0936/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.480/2014 **பொருள் எண்.07**

**மண்டலம் –13, வார்டு–180, டி.யு.சி.எஸ். கீழ் இயங்கும் நியாய விலைக்கடைகளுக்கு மாற்று இடமாக சென்னை மாநகராட்சியின் கட்டிடம் ஒதுக்கீடு செய்ய அனுமதி**

இணை பதிவாளர், டி.யு.சி.எஸ்.லிட் அவர்களின் கடித எண்.ந.க.எண்.2282/91/பி2, 03.03.2014 நாளிட்ட டி.யு.சி.எஸ்.(வது) நிறுவனத்தின் கடிதத்தில் தரமணி 1 மற்றும் 3 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டுவரும் தனி நபர் கட்டிடம் சாலையை விட 2 அடி பள்ளத்தில் அமைந்துள்ளது. இதனால் இங்கு வந்து செல்லும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பணிபுரியும் நிறுவன பணியாளர்களுக்கும் சிரமமாக உள்ளது. இதன் பொருட்டு மண்டலம்–13, வார்டு–180ல் தாமிரபரணி தெருவில், சென்னை மாநகராட்சியினால் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை விரைவில் ஒதுக்கீடு செய்து வழங்கும்படியும், இதற்காக மாநகராட்சி கோரும் நியாயமான மாத வாடகை மற்றும் வாடகை முன்பணத்தினை செலுத்த இசைவினை தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட கட்டிடம் ஒதுக்கீடு செய்ய இயலுமாயின் அதன் விவரங்கள் பயன்பாட்டுத்தன்மை, பரப்பளவு வரைபடம் உள்ளிட்ட விவரங்களுடன் கூடிய அறிக்கையை அளிக்குமாறு 13–ஆவது மண்டல அலுவலரை கோரப்பட்டது.

13வது மண்டல அலுவலரின் குறிப்பில், மூலதன நிதியிலிருந்து தரமணி தாமிரபரணி தெருவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தினை வாடகை நிர்ணயம் செய்து கடை எண். 1க்கு–19.68 ச.மீ மற்றும் கடை எண். 3க்கு 19.68ச.மீ மற்றும் ஒப்பனை அறை 2.67 ச.மீ மொத்தம் 42 ச.மீ பரப்பளவு கொண்ட கட்டுமான பகுதியையும் மற்றும் காலியிடம் (237.65 ச.மீ – 42 ச.மீ = 195.65 ச.மீ பரப்பளவு கொண்ட பகுதியை ஒப்படைக்கவும், மேற்கண்ட இரண்டு நியாய விலை கடைகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட நாள் முதல் வாடகை வசூல் மற்றும் முன்பணம் வசூல் செய்வதற்கும், மேற்கண்டுள்ள அதன் விவரங்கள் பயன்பாட்டுதன்மை, பரப்பளவு, வரைபடம் உள்ளிட்ட விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும், இக்கட்டிடத்திற்கான வாடகை மற்றும் முன்பணம் பெறுவது தொடர்பான அறிக்கையை உடனே அளிக்குமாறு கோரியுள்ளார்.

13வது மண்டல அலுவலரின் குறிப்பில், மேற்கண்ட இடத்தினை வழங்குவதற்கு 13வது மண்டல வார்டு குழு, தீர்மானம் எண்181/2010, நாள் 29.4.2010 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் மேற்கண்ட இடத்தினை தற்போது வழங்குவதற்கு வருகின்ற வார்டுகுழுவில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புமாறு 13வது மண்டல அலுவலரை கோருவதற்கு துணை ஆணையர்/வமநி அவர்களின் குறிப்பு சமர்பிக்கப்பட்டது.

இது தொடர்பாக இவ்வலுவலக குறிப்பில் துணை ஆணையரின் மேற்குறிப்பில் 2014 ஆண்டில் கோரிக்கை பெறப்பட்டது ஆனால் வார்டு குழு தீர்மானம் 2010ல் நிறைவேற்றப்பட்டது எனவும், இது சம்பந்தமாக தொலைபேசி மூலம் அறிக்கை பெற்று மீண்டும் குறிப்பு சமர்பிக்குமாறு கோரியுள்ளார்.

எனவே, இதுகுறித்து மண்டலத்தில் உள்ள செயற் பொறியாளரிடம் தொலைபேசி மூலம் பல முறை கோரப்பட்டதில், பகுதி–39, வார்டு– 180வது உதவி செயற் பொறியாளர் நேரில் வந்து நிலம் மற்றும் உடைமைத்துறை உதவி செயற் பொறியாளரிடம் கலந்து ஆய்வு செய்யப்பட்டது.

13வது மண்டல அலுவலரின் குறிப்பில் மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக 15.7.2014 நாளிட்ட கடிதத்தில் வார்டு குழு மண்டலம்–13 தீர்மான எண்.181/2010, நாள் 29.4.2010 என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், அது தவறுதலாக தட்டச்சு செய்யும்போது ஏற்பட்ட பிழையாகும் என்றும், அதற்கு பதிலாக மன்றத்தீர்மான எண். 181/2010 என்றே எடுத்துக் கொள்ளுமாறும் அதன் நகலினை இணைக்கப்பட்டுள்ளது எனவும், இதனை ஏற்றுக்கொண்டு உடனடியாக வாடகை நிர்ணயம் செய்து தரும்படியும் கோரியுள்ளார்.

இதன்அடிப்படையில், தாமிரபரணி தெருவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தில் கடை எண். 1க்கு–19.68 ச.மீ மற்றும் கடை எண். 3க்கு 19.68ச.மீ மற்றும் ஒப்பனை அறை 2.67 ச.மீ மொத்தம் 42 ச.மீ பரப்பளவு கொண்ட கட்டுமான பகுதியையும் வழங்கவும், மேற்கண்ட இரண்டு நியாய விலை கடைகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட நாள் முதல் மன்றத் தீர்மானம் எண். 312/2013, நாள் 22.5.2013 ன் படி சதுர அடிக்கு ரூ. 5/– என மாத வாடகை தொகை மற்றும் 12 மாத முன்பணம் வாடகை செலுத்த வேண்டும் என்றும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யயிருப்பின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் திருவல்லிக்கேணி கூட்டுறவு நிறுவனத்திற்கு நியாய விலை கடை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.419/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண்.எ3/6699/14**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.08.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.481/2014 **பொருள் எண்.08**

**வருவாய் துறை – சர் பிட்டி தியாகராயர் கலை அரங்கம் வணிக வரித் துறைக்கு இலவசமாக முன் பதிவு செய்தது – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

திரு. அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப. இணை ஆணையாளர்(வ.வ.)அமுலாக்குதல்–1, வணிக வரித் துறை அவர்களால் 5.8.2014 மாலை 3 மணி முதல் 5 மணி வரை வணிக வரித் துறை அலுவலர்களின் e-governance project தொடர்பான Sensitization கூட்டம் சென்னை மாநகராட்சி சர் பிட்டி தியாகராயர் கலையரங்கத்தில் இலவசமாக நடத்துவதற்கு அனுமதி வேண்டி கடிதம் அளிக்கப்பட்டது.

வணிக வரித் துறைக்கு சர் பிட்டி தியாகராயர் கலை அரங்கத்தில் 5.8.2014 அன்று இலவசமாக நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

வணிக வரித் துறைக்கு 5.08.2014 அன்று சர் பிட்டி தியாகராயர் கலையரங்கத்தில் இலவசமாக நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்கியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.410/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி5/2107/2014**

**முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 28.08.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.482/2014 **பொருள் எண்.09**

**மதிப்பீடு**

வார்டு எண் : 58 மண்டலம் : 5

சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகையில் தற்போது வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகம், துணை மேயர் அலுவலகம், ஆணையர் அலுவலகம், இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் அலுவலகங்கள் இயங்கிவருகின்றன. ரிப்பன் மாளிகையில் பின்புறம் உள்ள பிற கட்டிடங்களில் வருவாய்த்துறை, கல்வித்துறை, சுகாதாரத்துறை, பொறியில் துறைகள், பொதுத்துறை சட்டக் குழுமம், மின்சாரத்துறை, மத்திய கணக்கு குழுமம், நிதி நிர்வாகப்பிரிவு, மழை நீர் வடிகால் துறை போன்ற துறைகள் செயல்பட்டு வருகின்றன.

தற்போது ரிப்பன் மாளிகை வளாகத்தின் வடக்கு பகுதியில் கீழ்தளம் தரைதளம் 5 தளங்கள் கொண்ட இணை அலுவலக கட்டடம் கட்டப்பட்டு பணி முடியுறும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட அனைத்து துறைகளும் தற்போது ரிப்பன் மாளிகை வளாகத்தின் வடக்கு பகுதியில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் அனைத்து துறைகளும் இயக்கப்பட உள்ளதால் அனைத்து துறைகளுக்கும் தேவையான நவீன மேஜைகள் மற்றும் நாற்காலிகள் உள்ளிட்ட அலுவலக தளவாடங்கள் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட டைரக்டரேட் ஜெனரல் ஆப் சப்ளைஸ் அன்டு டிஸ்போசல்ஸ் அவர்கள் அரசு அலுவலகத்திற்கு தேவைப்படும் தளவாட பொருட்களை திருவாளர்கள்.கோத்ரெஜ் நிறுவனத்திடமிருந்து DGS&D விலையில் கொள்முதல் செய்ய தோராய திட்ட மதிப்பீடு ரூ.2,94,05,785/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

துறைத்தலைவர்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ள மேஜைகளை அப்படியே பயன்படுத்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது அலுவலர்கள் பயன்படுத்தி வரும் தளவாட பொருட்கள் இயந்திரப்பொறியியல் துறை மூலமாக ஏலம் விடப்படும். திருவாளர்கள். கோத்ரெஜ் நிறுவனம் அரசு அலுவலகங்களுக்கு தளவாட பொருட்களை DGS&D விலையில் விற்பனை செய்ய மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட டைரக்டரேட் ஜெனரல் ஆப் சப்ளைஸ் அன்டு டிஸ்போசல்ஸ் நிறுவனம் அனுமதித்துள்ளது. மேலும் DGS&D விலையை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் சென்னை மாநகராட்சிக்கு ரூ.85,00,000/- செலவு குறைவாக உள்ளது.

மேற்கண்ட தளவாட பொருட்களை திருவாளர்கள்.கோத்ரெஜ் நிறுவனத்திடமிருந்து DGS&D விலையில் கொள்முதல் செய்ய ரூ.2,94,05,794.00/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே தொன்னூற்று நான்கு இலட்சத்து ஐந்தாயிரத்து எழுநூற்று தொன்னூற்று நான்கு மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீட்டிற்கு தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘**19.09.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். **397/14** நாள் **19.09.2014**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘**19.09.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**407/2014**, நாள்.**19.09.2014**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மி. து.ந.க.எண்.சி.மே2/ பி3/ 11951/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.483/2014 **பொருள் எண்.10**

**மறு மின்னனு ஒப்பம் – 800 எண்ணிக்கையில் கையடக்க கம்பியில்லா தொடர்பு சாதனம் வழங்கி 806 – 870 MHZ அலைவரிசை உரிமமளிக்கப்பட்ட கற்றை அகலத்தில் துண்டிப்பில்லா , கம்பியில்லா சேவை 6 அலைவரிசைகள் மூலம் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 426 ச.கி.மீ. பகுதி முழுவதும் தொடர்பு கொள்ளும் வகையில் மேற் கூறிய சாதனங்கள் முலம் அளிக்க – 08.08.2014 அன்று தொழில் நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது –ஒப்பங்கள் ஏற்க பரிந்துரைத்தல் – அனுமதி**

| | | |
|---|---|---|
| 1 | செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | 800 எண்ணிக்கையில் கையடக்க கம்பியில்லா தொடர்பு சாதனம் வழங்கி ,806 – 870 MHZ அலைவரிசை உரிமமளிக்கப்பட்ட கற்றை அகலத்தில் துண்டிப்பில்லா , கம்பியில்லா சேவை 6 அலைவரிசைகள் மூலம் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 426 ச.கி.மீ. பகுதி முழுவதும் தொடர்பு கொள்ளும் வகையில் மேற் கூறிய சாதனங்கள் முலம் அளிக்க |
| 2 | மதிப்பீடு | ரூ. 1,70,00,000 /- |
| 3 | தேவைப்படும் இடம் | சென்னை மாநகராட்சி பகுதிகளில் |
| 4 | மின் பண்டக சாலையின் இருப்பு | இல்லை |
| 5 | ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி | |
| அ | மாநகராட்சி ஒப்பந்த மலரில் வெளியிட்ட நாள் | 03.07.2014 |
| ஆ | பத்திரிக்கைகளில் வெளியிட்ட நாள் | 03.07.2014– தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், நமது எம் ஜி ஆர், |
| 6 | ஒப்ப முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்ற நாள் மற்றும் விபரங்கள் | – |
| 7 | ஒப்பத்தில் பங்குபெறுவதற்கான இறுதி நாள் | 08.08.2014 |
| 8 | ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 30 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| 9 | ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 08.08.2014 |
| ஆ | ஒப்பம் திறக்கப்பட்ட நாள் | 08.08.2014 |
| 10 | விற்பனை செய்யப்பட்ட ஒப்ப நமூனாக் களின் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் முலம் இந்த ஒப்பத்தில் பங்கேற்றனர் |
| 11 | பெறப்பட்ட ஒப்பங்களின் எண்ணிக்கை | 2 |
| 12 | செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பத் தொகை | ரூ. 1,70,000/- |
| **13** | **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் குறித்த விவரங்கள்** | |

| SLNO | | M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd | M/s Quickcalls (P) Ltd |
|---|---|---|---|
| 1 | TWO BIDS technical bid and financial bid to be submitted | Submitted | Submitted |
| 2 | EMD / NSIC / SSI CERTIFICATE | | |
| 3 | Manufacturer or their authorized dealer | Authorised dealer of Motorola.ISO Of motorola submitted. Valid till 29.09.2016 | Authorised dealer of Motorola.ISO Of motorola submitted. Valid till 29.09.2016 |
| 4 | same line of work at-least for two years .(11-12 & 12-13) | Work Order: Chennai Petroleum Corporation Ltd Rs. 18090200 19.05.2011. Indian Oil dt: 26.08.2013 Rs: 4472000/- Bharat Petroleum Corporation Ltd dt: 14.05.2014 Rs: 323400 | Corporation of Chenai dt: 15.11.2011, dt: 20.01.2012 Rs: 347204.88/- Hindustan Petroluem Ltd dt: 26.09.2011.Advance Stamp receipt from Chennai Corporation dt 19.07.2012 for Rs: 116640/- |

| | | | |
|---|---|---|---|
| 5 | annual minimum financial turnover of not less than 100% times of the value put to tender in any one financial year in the preceding “Five” years (2008-09 to 2012-13) | Rs 5488.35 in Lakhs for the year 13-14 | Rs 49590001.62 for the year 2012 |
| 6 | Satisfactorily completed contract orders (for the item for which bid is called) in the last two years: 100 % (Single order) of the tender value to Indian Government organisations | Chennai Petroleum Corporation Ltd Rs. 18090200 | Not Submitted |
| 7 | working capital sufficient to finance at least 25% of value of tender | Letter dt 08.08.2014 from Corporation bank staing that Working capital limit Rs 17000000 | Letter dt 04.08.2014 from Corporation bank staing that Balance for this Ac is Rs: 4349855/- |
| 8 | He should submit the audited balance sheet for last five years.(2008-09 to 2012-13) | Submitted (09-10, 10-11, 11-12, 12-13, 13-14) | Submitted (09-10, 10-11, 11-12, 12-13, 13-14) |
| 9 | Latest TIN return enclosed | Jun-14 | Jun-14 |
| 10 | Annexure A to G | Digitally signed and submitted A,B,C,D,E,F,G | Digitally signed and submitted A,B,C,D,E,F,G |
| 11 | Declare the quantity you can supply out of the tender quantity | > 1000 nos | > 1000 nos |
| 12 | Brand and model | Motorola & Kenwood | Motorola & Kenwood |
| 13 | Valid PMRTS Operating License Copy issued by the Ministry Of Communication, New Delhi | Submitted valid till 31.12.2014 | Submitted valid till 31.12.2014 |

மின்னனு ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆவணம் 08.08.2014 அன்று திறக்கப்பட்டு பரிசிலிக்கப்பட்டது. நிறுவனமான M/s Quickcalls (P) Ltd தங்களின் மின்னனு ஒப்பத்தில் தகுதி பெருவதற்கான ஆவணங்கள் 1. பூர்த்தி செய்யப்பட்ட பணி ஆணையின் ஆவணம் அளிக்கவில்லை. மற்றொரு நிறுவனமான M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd தொழில்நுட்ப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கோப்பு ஒப்பங்கள் குழுமத்தின் பார்வைக்காக 21.08.2014.. அன்று நடந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று நடைபெற்ற ஒப்பங்கள் குழுமத்தில் M/s Quickcalls (P) Ltd போதிய ஆவணங்கள் சமர்பிக்காத காரணத்திற்காக நிராகரித்து மற்றும் M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd நிறுவனம் தகுந்த தொழில்நுட்ப ஆவணங்களை சமர்பித்து நிதி ஆவணங்கள் திறப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd நிறுவனத்தின் நிதி ஆவணம் 22.08.2014 அன்று திறக்கப்பட்டது.

| 14 | **தொழில் நுட்ப ஆவணங்களில் தேர்வு பெற்ற நிறுவனங்கள்** M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd நிறுவனத்தின் **நிதி ஆவணம்** 22.08.2014 அன்று திறக்கப்பட்டன. | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Bidder Name: | ARYA OMNITALK WIRELESS SOLUTIONS P LTD | | | | | | | |
| | | | | | QUOTED RATE | | | |
| Sl. No. | Item Description | Item Code / Make | Qty | Units | Basic Price Inclusive of Excise Duty (in. Rs.) | VAT Amount | Total Amount Excluding Tax In Rs. () for one year | Total Amount Including Tax In Rs. For one year |
| 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 | 9 | 10 |
| 1.00 | Supply of hand held radio sets with out caller ID as per technical specification | item1 | 790.00 | Nos | 13080.00 | 654.00 | 10333200.00 | 10849860.00 |
| 2.00 | Supply of hand held radio sets with caller ID as per technical specification | item2 | 10.00 | Nos | 17252.00 | 862.60 | 172520.00 | 181146.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3.00 | Airtime subscription charges for providing uninterupted wireless service in 806- 870 MHz licensed bandwith for the above sets with 6 seperate frequencies for (unlimited usage) for coverage for entire stretch of 426 sq km by the PMRTS service provider as per technical specification for 12 Months | item3 | 800.00 | nos per month | 552.52 | 68.29 | 5304192.00 | 5959776.00 |
| Total in Figures | | | | | | | 15809912.00 | **16990782.00** |

| | |
|---|---|
| குறைந்த ஒப்ப புள்ளி அளித்த நிறுவனம் | M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd, நிறுவனம் குறைந்த ஒப்ப புள்ளி அளித்துள்ளது |
| 'துறையால் விலை குறைப்பு கேட்கப்பட்ட விவரம் | M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd, நிறுவனம் **25.08.2014** நாளிட்ட கடிதம் மூலம் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளனர் |

இக்கோப்பு ஒப்பங்கள் பரிசீலிக்கும் குழுமத்தின் பார்வைக்கு **26.08.2014** அன்று நடந்த கூடத்தில் வைக்கப்பட்டது. அக்கூடத்தில் M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd நிறுவனத்தின் குறைந்த ஒப்பப்புள்ளி ஏற்க பரிந்துறைக்கப்பட்டது.

**பரிந்துரைக்கப்படும் நிறுவனம்**

**800** எண்ணிக்கையில் MOTOROLA / KENWOOD கையடக்க கம்பியில்லா தொடர்பு சாதனம் வழங்கி ,**806 – 870** MHZ அலைவரிசை உரிமமளிக்கப்பட்ட கற்றை அகலத்தில் துண்டிப்பில்லா , கம்பியில்லா சேவை **6** அலைவரிசைகள் மூலம் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட **426** ச.கி.மீ. பகுதி முழுவதும் தொடர்பு கொள்ளும் வகையில் மேற் கூறிய சாதனங்கள் முலம் அளிக்க M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd கையடக்க கம்பியில்லா தொடர்பு சாதனங்களுக்கு ரூ 11031006 /- (வரிகள் உள்ளிட்டு) என அளித்துள்ளது. திட்டமதிப்பீட்டு தொகையோடு ரூ **12000000/–** ஒப்பிடுகையில் (-)8.07% குறைவாக அளித்துள்ளனர் மற்றும் வான்வழிநேரத் தொகை (Airtime Charges) ஓரண்டிற்கு ரூ **5959776/–** (வரிகள் உள்ளிட்டு) என கணக்கிடப்பட்டுள்ளது. BOQயில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட **426** ச.கி.மீ. பகுதி முழுவதும் தொடர்பு கொள்ளும் வகையில் **36** மாதங்களுக்கு **806 – 870** MHZ உரிமளிக்கப்பட்ட கற்றை அகலத்தில் தனித்தனியாக **6** அலைவரிசை கொண்ட (Unlimited Usage) வான்வழி சந்தாதொகை கட்டணத்தொகையை விலைப்புள்ளியாக அளிக்குமாறு PMRTS (Public Mobile Radio Trunking Services) சேவை நிறுவனத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd கோரப்பட்டது என கேட்கப்பட்டுள்ளது. இதர்ணங்க M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd ரூ **17879328/–** (வரிகள் உள்ளிட்டு) என அளித்துள்ளது. ஒரு வருட காலத்திற்கு மட்டுமே நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள காரனத்தினால், சேவை நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியின் அடிப்படையில் **12** மாத காலத்திற்கு கணக்கிடப்பட்ட தொகை ரூ **5959776 /–** (வரிகள் உள்ளிட்டு) ஆகும். திட்டமதிப்பீட்டு தொகையோடு ரூ **5000000/–** ஒப்பிடுகையில் (+)19.19% அதிகமாக அளித்துள்ளனர். M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd அளித்த மொத்த ஒப்பத்தொகை ரூ **16990782 /–** (வரிகள் உள்ளிட்டு). திட்டமதிப்பீட்டு தொகையோடு ரூ **17000000/–**ஒப்பிடுகையில் (-)0.054% குறைவாக உள்ளதால் ஏற்பதற்காக பரிந்துரைக்கப்படுகிறது

| **<u>பரிந்துரைக்கப்படும் நிறுவனத்தின் விவரம்</u>** | | |
|---|---|---|
| செல்லத்தக்க காலம் | | **90** நாட்கள் |
| ஆயத் தீர்வை | | உள்ளிட்டது |
| உள்ளூர் வரிகள்/மத்திய விற்பனை வரிகள் | | உள்ளிட்டது |
| பொருள் வழங்கும் / பணி மூடிக்கும் காலம் | | **1** வருடங்கள் |
| பிணை வைப்புத் தொகை | | ரூ **340000/–** |
| பணம் பட்டுவாடா | | 100 % of payment will be made against supply and acceptance of the material. |

**01)** **800** எண்ணிக்கையில் MOTOROLA / KENWOOD கையடக்க கம்பியில்லா தொடர்பு சாதனம் வழங்கி ,**806 – 870** MHZ அலைவரிசை உரிமமளிக்கப்பட்ட கற்றை அகலத்தில் துண்டிப்பில்லா , கம்பியில்லா சேவை **6** அலைவரிசைகள் மூலம் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட **426** ச.கி.மீ. பகுதி முழுவதும் தொடர்பு கொள்ளும் வகையில் மேற் கூறிய சாதனங்கள் முலம் அளிக்க M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd கையடக்க கம்பியில்லா தொடர்பு சாதனங்களுக்கு ரூ.11031006/- (வரிகள் உள்ளிட்டு) என அளித்துள்ளது. திட்டமதிப்பீட்டு தொகையோடு ரூ**12000000/–**ஒப்பிடுகையில் (-)8.07% குறைவாக அளித்துள்ளனர் மற்றும் வான்வழிநேரத் தொகை (Airtime Charges) ஓரண்டிற்கு ரூ **5959776/–** (வரிகள் உள்ளிட்டு) என கணக்கிடப்பட்டுள்ளது.

02) BOQயில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 426 ச.கி.மீ. பகுதி முழுவதும் தொடர்பு கொள்ளும் வகையில் 36 மாதங்களுக்கு 806 – 870 MHZ உரிமளிக்கப்பட்ட கற்றை அகலத்தில் தனித்தனியாக 6 அலைவரிசை கொண்ட (Unlimited Usage) வான்வழி சந்தாதொகை கட்டணத்தொகையை விலைப்புள்ளியாக அளிக்குமாறு PMRTS (Public Mobile Radio Trunking Services) சேவை நிறுவனத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd கோரப்பட்டது என கேட்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd ரூ 17879328/– (வரிகள் உள்ளிட்டு) என அளித்துள்ளது. ஒரு வருட காலத்திற்கு மட்டுமே நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள காரனத்தினால், சேவை நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியின் அடிப்படையில் 12 மாத காலத்திற்கு கணக்கிடப்பட்ட தொகைரூ 5959776 /– (வரிகள் உள்ளிட்டு) ஆகும். திட்டமதிப்பீட்டு தொகையோடு ரூ 5000000/– ஒப்பிடுகையில் (+)19.19% அதிகமாக அளித்துள்ளனர். M/S Arya Omnitalk Wireless Solutions (P) Ltd அளித்த மொத்த ஒப்பத்தொகை ரூ 16990782/– (வரிகள் உள்ளிட்டு). திட்டமதிப்பீட்டு தொகையோடு ரூ 17000000/–ஒப்பிடுகையில் (-)0.054% குறைவாக உள்ளது. 800 எண்ணிக்கையில் கையடக்க கம்பியில்லா தொடர்பு சாதனம் வழங்கி, 806 – 870 MHZ அலைவரிசை உரிமமளிக்கப்பட்ட கற்றை அகலத்தில் துண்டிப்பில்லா , கம்பியில்லா சேவை தனித்தகியாக 6 அலைவரிசைகள் (ஒரு வருடத்திற்கு) மூலம் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 426 ச.கி.மீ. பகுதி முழுவதும் தொடர்பு கொள்ளும் வகையில் மேற் கூறிய சாதனங்கள் ரூ 16990782 /– (வரிகள் உள்ளிட்டு) மதிப்பிற்கு பணி ஆணை வழங்கவும்;

எனவே, மேற்கண்ட பணிக்கான செலவினத்தை மின்துறையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) &(2)–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 398/14 நாள் 19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.408/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/0358/2014</u>**

## <u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.09.2014 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.484/2014 **பொருள் எண்.11**

**<u>ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – வார்டு – 2ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள் ஸ்ரீவெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியாணை அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி</u>**

மண்டலம் –1, வார்டு –2 ல் கத்திவாக்கம் பிரதான சாலை நேரு நகரிலிருந்து வள்ளுவர் நகர் சாலை வரை 1200மிமீ க்கு 1200மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்காக இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரான திருவாளர்கள் ஸ்ரீவெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்_ அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.2,01,09,465.60பை – யானது 2013–2014ம் ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,15,43,972.12யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (–) 6.66% குறைவாகும். எனவே 24.07.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ஒப்ப விழுக்காட்டை குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி ஒப்பந்ததாரார் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.2,01,09,465.20 மற்றும் ஒப்ப சதவீதம் (–) 6.66% குறைவு ஆகும். மேலும் 31.05.2014 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 17.30% குறைவாக உள்ளது 14.08.2014 அன்று நடைபெற்ற உயர் மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் தீர்மான எண்.3/2014–2015ன் படி இவ்ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் ஸ்ரீவெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013–2014ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (–) 6.66% குறைவு என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் ஸ்ரீவெங்கடேஸ்வரா அவர்களுக்கு ரூ.2,01,09,465.60பை மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்க வேண்டியிருப்பதினால் மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி ஒப்பத்தாரருக்கு பணி ஆணை வழங்கியதற்கும் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) (2)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.401/14 நாள்.19.09.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

> “19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.411/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/0359/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.08.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.485/2014 **பொருள் எண்.12**

**ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – வார்டு – 2ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள் ஸ்ரீவெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியாணை அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி**

மண்டலம் –1, வார்டு –2 ல் கத்திவாக்கம் பிரதான சாலையில் அண்ணா நகரிலிருந்து நேரு நகர் சாலை வரை 1200மிமீ க்கு 1200மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் (Precast ) மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்காக ஒரு ஒப்பம் பெறப்பட்டன இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரான திருவாளர்கள் ஸ்ரீவெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.2,00,75,065.20பை– யானது 2013 – 2014ம் ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,15,43,972.12யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரார் அளித்துள்ள ஒப்பத்தொகை(–) 6.82% குறைவாகும் எனவே, 24.07.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் தான் ஒப்ப விழுக்காட்டை குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி ஒப்பந்ததாரார் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.2,00,75,065.20 மற்றும் ஒப்ப சதவீதம் (–) 6.82% குறைவாக உள்ளது. மேலும் 31.05.2014 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 17.44% குறைவாக உள்ளது 14.08.2014 அன்று நடைபெற்ற உயர் மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் தீர்மான எண்.4/2014–2015ன் படி இவ் ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் ஸ்ரீவெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013–2014ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (–) 6.82% குறைவு என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் ஸ்ரீவெங்கடேஸ்வரா அவர்களுக்கு 2,00,75,065.20பை மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்க வேண்டியிருப்பதினால் மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி ஒப்பத்தாரருக்கு பணி ஆணை வழங்கியதற்கும் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) (2)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 402/14 நாள் 19.09.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.412/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/5738/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 01.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.486/2014 **பொருள் எண்.13**

**<u>ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – வார்டு – 192ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள் ஜுனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியாணை அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி</u>**

மண்டலம்–15, வார்டு–192 ல் வைத்தியலிங்கம் சாலையில் கிழக்கு கடற்கரை சாலை முதல் தெற்கு பக்கிங்காம் கால்வாய் வரை 1500மிமீ க்கு 1500மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் (Precast ) மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்காக மூன்று ஒப்பம் பெறப்பட்டன இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் ஜுனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.1,73,48,160.60பை– ஆகும். 2013 – 2014ம் ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத்தொகையான ரூ.1,93,16,051.72யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரார் அளித்துள்ள ஒப்பத்தொகை (–)10.19% குறைவாகும் எனவே, 24.07.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் தான் ஒப்ப விழுக்காட்டை குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி ஒப்பந்ததாரார் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,73,48,160.60 மற்றும் ஒப்ப சதவீதம் (–) 10.19% குறைவு ஆகும். மேலும் 24.07.2014 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)20.08% குறைவாக உள்ளது 14.08.2014 அன்று நடைபெற்ற உயர் மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் தீர்மான எண்.2/2014–2015ன் படி இவ் ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் ஜுனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013–2014ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (–)10.19% குறைவு என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் ஜுனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ரூ.1,73,48,160.60பை மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்க வேண்டியிருப்பதினால் மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி ஒப்பத்தாருக்கு பணி ஆணை வழங்கியதற்கும் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) (2)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.403/14 நாள்.19.09.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.413/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/5734/2014**

## முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 01.09.2014 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.487/2014 **பொருள் எண்.14**

**ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – வார்டு – 193ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள் ஜுனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியாணை அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி**

மண்டலம் –15, வார்டு –193 ல் இன்டஸ்டிரியல் எஸ்டேட் மற்றும் குமாரகுரு நிழற்சாலையில் மகாத்மா காந்தி சலை முதல் பள்ளிக்கரணை மார்ஷ்லேண்ட் வரை வரை 1200மிமீ க்கு 1200மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் (Precast ) மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்காக மூன்று ஒப்பம் பெறப்பட்டன இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரான திருவாளர்கள் ஜுனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.1,24,83,294.09பை– ஆகும் 2013 – 2014ம் ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத்தொகையான ரூ1,38,75,105.68யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரார் அளித்துள்ள ஒப்பத்தொகை (–) 10.03% குறைவாகும் எனவே, 24.07.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் தான் ஒப்ப விழுக்காட்டை குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி ஒப்பந்ததாரார் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,24,83,249.09 மற்றும் ஒப்ப சதவீதம் (–) 10.03% குறைவு ஆகும். மேலும் 24.07.2014 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)22.46% குறைவாக உள்ளது 14.08.2014 அன்று நடைபெற்ற உயர் மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் தீர்மானஎண்.1/2014–2015ன்படி இவ்ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் ஜுனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013–2014ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (–) 10.03% குறைவு என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் ஜுனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு 1,24,83,294.09பை மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்க வேண்டியிருப்பதினால் மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி ஒப்பத்தாரருக்கு பணி ஆணை வழங்கியதற்கும் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1)&(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 404/14 நாள் 19.09.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

> “19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.414/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/1879/2009</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.488/2014 **பொருள் எண்.15**

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 2 – ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி</u>**

சிப்பம் 2 – ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜீனியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பக்காலம் 20 மாதங்கள் ஆகும். அதாவது 23.06.2013ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும். மேலும், இயற்கை இடர்பாடுகள் மற்றும் பல்வேறு காரணங்களுக்காக இரண்டு முறை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. அதன்படி, 01.01.2014 வரை ஆறு மாத காலம் பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

மேலும், சிப்பம் 2 – ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகள் பருவமழையின் காரணமாகவும் மற்றும் உள்ளாட்சி தேர்தல் காரணமாகவும் மற்றும் பல்வேறு காரணங்களுக்காக இப்பணிகள் முடிவடையாததாலும் இப்பணிகளுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், இப்பணிக்கு மூன்றாம் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாடு செய்வதற்கு மன்றத்தீர்மானத்தின்படி, மேற்கண்ட பணிக்கு 30.06.2014 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் கடிதத்தில், சிப்பம் 2 – ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணியிடங்களில் ஓட்டேரி நல்லா கால்வாயில் நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, போக்குவரத்துத்துறையின் அனுமதி மற்றும் சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் கழிவுநீர் தொடர்ச்சியாக செல்வது இடையூறுகள் போன்ற காரணங்களுக்காக இப்பணிகள் முடிவடையாததால் மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுற்கும் கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் அமைக்கும் பணிகள் முடிவடையாததாலும் இப்பணிக்கு டிசம்பர்' 2014 வரை மன்ற தீர்மான எண்.366/2014, நாள்.26.06.2014ன் மூலம் காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது, மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜீனியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு 01.07.2014 முதல் 31.12.2014 வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜீனியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 2 ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு 01.07.2014 முதல் 31.12.2014 வரை ஆறு மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.405/14 நாள்.19.09.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.415/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.14 ந.க.எண்.இ1/3397/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.08.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.489/2014 **பொருள் எண்.16**

**சத்துணவு கூட கட்டிடத்தை இடிக்க அனுமதி**

| வரிசை எண் | வார்டு எண்–183 | மண்டலம்–14 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–14, பகுதி–41, வார்டு–183ல் வடக்கு இளங்கோ நகரில் உள்ள பழைய பழுதடைந்த சத்துணவு கூட கட்டிடம் . |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1983ம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரை தளம்– 650 ச.அடி (துரைதளம் மட்டும்) |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1325 ச.அடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.34,214.04/– |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | ஆம். |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக சத்துணவு கூடம் மற்றும் உடற்பயிற்சி கூட கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டித்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–14 |
| 10. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், மற்றும் நாள். | மண்டலம்–14 வார்டு குழு தீர்மான எண்.406, நாள்.12.06.2014 |

எனவே, மண்டலம்–14, பகுதி–41, வார்டு–183 வடக்கு இளங்கோ நகரில் உள்ள பழுதடைந்த சத்துணவு கூட கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.28/2014, நாள்12.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 396/14 நாள் 19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.12.ந.க.எண்/2986/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.490/2014 **பொருள் எண்.17**

**பொதுக்கழிப்பிடக் கட்டடிடத்தை இடிக்க அனுமதி.**

| வரிசை எண் | வார்டு எண்—160 | மண்டலம்—12 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்—12, வார்டு—160ல் எம்.கே.என். சாலையில் (டி.என்.இ.பி. அருகில்) உள்ள பொதுக் கழிப்பிடக் கட்டிடம் . |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1993ம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரை தளம்—455 ச.அடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 455 ச.அடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.60000/— |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | அதிகமாக இல்லை |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | அம்மா உணவகம் அமைக்க |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பொதுமக்கள் பயன்பாடு அதிகமாக இல்லை |
| 9. | கட்டித்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்—12 |
| 10. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், மற்றும் நாள். | மண்டலம்—12 வார்டு குழு தீர்மான எண்.92, நாள்.18.07.2014 |

எனவே, மண்டலம்—12, வார்டு—160ல் எம்.கே.என் சாலையில் (டி.என்.இ.பி அருகில்) உள்ள பொதுக் கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 36/14 நாள் 19.09.2014—ன் படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.415/14 நாள்/19.09.2014—ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.அ.7.ந.க.எண்.இ1/5909/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.491/2014 **பொருள் எண்.18**

**<u>மண்டலம்–7, வார்டு–86 – அம்பத்தூர் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகம் – தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை அத்திப்பட்டு பகுதியில் இருந்து அள்ளி சென்று கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டும் பணி – ஒப்பந்ததாரரை கொண்டு பணி மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்ததாரர் திரு. D. பூபாலன், அவர்களுக்கு பணி ஆணை வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலம்–7ல் 15 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கு தினமும் சுமார் 335 மெ.டன் அளவு குப்பை சேகரிக்கப்பட்டு லாரிகள் மூலம் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் தினமும் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இங்கு சேகரிக்கப்படும் குப்பைகளை தினமும் பெரிய கொள்ளளவு கொண்ட லாரிகளை கொண்டு தனியார் மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. எனவே இதனை கருத்தில் கொண்டு அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்றும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ. 32891975/– க்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டது.

ஒப்பந்த அறிவிப்பு 07.08.2014 அன்று ஆங்கில நாளிதழ் (INDIAN EXPRESS) தமிழ் நாளிதழான நமது எம்.ஜி.ஆர் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலரில் 07.08.2014 அன்று பிரசுரிக்கப்பட்டது.

மேலும் மண்டலம்–7 (அம்பத்தூர்)ல் எடுக்கப்படும் குப்பையின் அளவு தினமும் 335 மெ.டன்னாக ஒப்பத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி ஆவணத்தில், குப்பை எடுக்கும் ஒப்பந்ததாரர் தனியாக சொந்தமாக 15 வண்டிகள் அல்லது அதற்கு மேலும் 12 முதல் 15டன் திறன் கொண்ட வண்டிகள் வைத்து இருக்க வேண்டும். அந்த வாகனங்கள் ஜனவரி2005 ஆம் ஆண்டிற்கு பிறகு பதிவு செய்யப்பட்டவைகளாக இருக்க வேண்டும், அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், மதிப்பீட்டு தொகையில் 70 சதவீதத்திற்கு நிகரான பணி இதற்கு முன்பு ஒப்பந்ததாரர் மேற்கொண்டு இருக்க வேண்டும், இல்லையெனில் சம்பந்தபட்ட ஒப்பந்ததாரின் ஒப்பம் நிரகாரிக்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோரப்பட்டது.

இதன் அடிப்படையில் இப்பணிக்கு ஒப்ப நாளான 22.08.2014 அன்று கலந்து கொண்ட மூன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில் நுட்ப ஒப்பம் திறக்கப்பட்டன.

பங்கேற்ற ஒப்பந்ததாரர்கள்

1. திரு. D. பூபலான்
2. திருவாளர்கள். நெல்லை மோட்டார்ஸ்
3. திருவாளர்கள். தாமோதரன் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ்

இவர்களில் தொழில்நுட்ப ஒப்ப ஆவணங்கள் சரிபார்த்ததில் திரு. D. பூபாலன் அவர்கள் தகுதி பெற்று விலைப்புள்ளி ஒப்பத்தில் (Price Bid) பங்கேற்க தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எனவே இதனை தொடர்ந்து விலைப்புள்ளி ஒப்பம் (Price Bid) 26.08.2013 அன்று ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டது அதன் விவரம் பின்வருமாறு.

| வ எண் | அலுவலக மதிப்பீடு | | | திரு. D. பூபாலன் அவர்களின் ஒப்ப விவரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை (மெ.டன்) | விலை / மெ.டன் | மொத்த தொகை | எண்ணிக்கை (மெ.டன்) | விலை / மெ.டன் | ஒப்பத் தொகை |
| 1. | 1,22,275 மெ.டன் | ரூ.269/– | ரூ. 3,28,91,975/– | 1,22,275 மெ.டன் | ரூ.289/– | ரூ.3,53,37,475 |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. D. பூபாலன் அவர்களிடம் 26.08.2014 அன்று விலைகுறைப்பு கோரப்பட்டது.

மேலும் திரு. D. பூபாலன் அவர்கள் 26.08.2014 நாளிட்ட கடிதத்தில் ஒரு டன்னுக்கு ரூ.277/– வீதம் விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இதனை தொடர்ந்து மீண்டும் விலை குறைப்பு அளிக்குமாறு கேட்கப்பட்டது. எனவே ஒப்பந்ததாரர் திரு. D. பூபாலன் அவர்கள் 27.08.2014 நாளிட்ட கடிதத்தில் ஒரு டன்னுக்கு ரூ.269/– வீதம் விலைகுறைப்பு செய்து அலுவலக விலைக்கே பணியினை செய்ய கடிதம் அளித்துள்ளார். மீண்டும் இதே பணிகாக திரு. D. பூபாலன் ஒப்பந்ததாரர் அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதற்கு 03.09.2014 நாளிட்ட கடிதத்தில் ஒரு டன்னுக்கு ரூ.262/– வீதம் விலை குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இதன்படி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.3,20,36,050/– ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2013–14 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (–) 2.60% குறைவாக உள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை ஒப்பந்ததாரர் திரு.D.பூபாலன் அவர்களுக்கு பணியின் அவசரம் அவசியம் கருதி 2013–14ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி அலுவலக மதிப்பீட்டு தொகையை விட (–) 2.60% குறைவாக உள்ளதால் அதற்குண்டான ஒப்பத்தொகை ரூ.3,20,36,050/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிச்சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2) ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 414/14 நாள் 19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.423/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 35127 / 2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.492/2014 **பொருள் எண்.19**

**<u>பணியமைப்பு</u>**

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், வருவாய் நிர்வாகம், சென்னை–5, அவர்களின் கடிதம் எண். பணி–1 (3) / DC 85/2014, நாள்: 01.08.2014ன் படி, திருமதி.எ.இ.கல்பனா, துணை ஆட்சியர், அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் துணை ஆட்சியர் (நிர்வாகம்) ஆக அயற்பணியில் 27.08.2014 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 35126 / 2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.493/2014 **பொருள் எண்.20**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண்.3213, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 27.08.2014ன் படி, திரு.கே.சௌரிராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் / முதல் பதிவாளர், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம், சென்னை அவர்கள், சென்னை மாநகராட்சி, மண்டலம் – 4ல் மண்டல அலுவலராக அயற்பணியில் 28.08.2014 பிற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**பொ.சு.து.ந.க.எண். சி1/ 6038/2011**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.494/2014 **பொருள் எண்.21**

**வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட தகுதி வாய்ந்த நபர்களை கொண்டு மருத்துவ அலுவலர் பதவிக்கான பணி நியமனம் வழங்கப்பட்டதில் பணியில் சேராத நபர்களின் பணியாணை ரத்து செய்தும் பணிதுறப்பு செய்த நபரை விடுவித்தமைக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்பிட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டு பட்டியலில் இடம்பெற்றுள்ள நபர்களுக்கு நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைப்பு விடப்பட்டது. அதில் கலந்து கொண்ட நபர்களில் கீழ்கண்ட நபர்களை மருத்துவ அலுவலர்களை பணி நியமனம் செய்து பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது.

| வ.எண் | மருத்துவ அலுவலர்களின் பெயர்கள் | இனம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | டாக்டர். ஆர்.ராஜேஷ் குமார் | MBC(P) (GL) | பணியில் சேரவில்லை |
| 2 | டாக்டர். மோ. மகிமா அலிஷியா | BC(P) (GL) | 28.02.2014 அன்று பணியில் சேர்ந்துள்ளார் |
| 3 | டாக்டர். முகமது ரிஸ்வான் | GT(NP) (GL)(BCM) | 02.07.2014 அன்று பணியில் சேர்ந்துள்ளார் |
| 4 | டாக்டர்.கலைவாணி | MBC(NP) (GL) | 04.03.2014 அன்று பணியில் சேர்ந்துள்ளார் |
| 5 | டாக்டர்.வெ.சங்கரலட்சுமி | GTW(NP) | பணி துறப்பு கடிதம் அளித்துள்ளார். |
| 6 | டாக்டர்.கே.வி.விஜயகுமார் | GT(P) (GL) | பணியில் சேரவில்லை |
| 7 | டாக்டர்.பி.நிர்மலா | SC(NP) (GL) | பணியில் சேரவில்லை |

மேற்கண்ட பட்டியலில் பணிநியமன உத்தரவு வழங்கப்பட்ட 7 மருத்துவ அலுவலர்களில் வரிசை எண்.2–ல் டாக்டர். மோ. மகிமா அலிஷியா, வரிசை எண்.3–ல் டாக்டர். முகமது ரிஸ்வான் மற்றும் வரிசை எண்.4–ல் டாக்டர். கலைவாணி ஆகிய 3 நபர்கள் மட்டுமே மருத்துவ அலுவலர்களாக பணியில் சேர்ந்துள்ளனர்.

வரிசை எண்.1–ல் டாக்டர்.ஆர்.ராஜேஷ்குமார், வரிசை எண்.6ல் டாக்டர்.கே.வி.விஜயகுமார், மற்றும் வரிசை எண்.7–ல் டாக்டர்.பி.நிர்மலா ஆகிய 3 நபர்கள் பணியில் சேரவில்லை.

வரிசை எண்.5ல் டாக்டர். வெ.சங்கரலட்சுமி அவர்கள் பணிதுறப்பு கடிதம் அளித்துள்ளார்.

பணியில் சேராத மருத்துவ அலுவலர்களுக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டும் இந்நாள்வரை எந்தவித விளக்கமும் பெறப்படவில்லை.

இதன் தொடர்ச்சியாக பணியில் சேராத 3 மருத்துவ அலுவலர்களின் பணிநியமன ஆணையை ரத்து செய்தும், பணிதுறப்பு கடிதம் அளித்துள்ள மருத்துவ அலுவலரை பணியிலிருந்து விடுவித்தும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 12.08.2014 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டது. எனவே, பணியில் சேராத மூன்று மருத்துவ அலுவலர் பணி நியமன ஆணையை ரத்து செய்திடவும், பணி துறப்பு செய்த மருத்துவ அலுவலரை பணியிலிருந்து விடுவித்திடவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்5/1952/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.495/2014 **பொருள் எண்.22**

**திருமதி.எம்.ஆர். லதாமகேஸ்வரி, நகர சுகாதார செவிலியர் அவர்கள் மதுரை மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலுக்கு அனுமதி**

மதுரை மாநகராட்சியில் நகர சுகாதார செவிலியராக பணியாற்றி வரும் திருமதி.எம்.ஆர்.லதாமகேஸ்வரி என்பவர், தனது கணவர் மற்றும் குழந்தைகள் சென்னையில் வசித்து வருவதாகவும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனக்கு சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் கோரியதின் பேரில் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானத்தில் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டு மாமன்ற தீர்மான எண்.268, நாள்–31.10.2012ன்படி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் பணி செய்து வரும் பணியாளர்களை மற்றொரு மாநகராட்சிக்கு மாறுதல் செய்வதற்கான உத்தரவு அரசிடமிருந்து பெறப்பட வேண்டும். சென்னை நகர முனிசிபில் சட்ட விதி ACT.1919 பத்தி 97(a)(b)லும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித எண்.27274/மாந–3/96–1 நாள்.08.07.1996லும் மதுரை மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல்/மனமொத்த பணியிட மாறுதலுக்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் நகர சுகாதார செவிலியர் பதவியில் 30 காலிப்பணியிடங்கள் உள்ளன. இக்காலிப்பணியிடத்தில் மதுரை மாநகராட்சியிலிருந்து ஒருவழி பணியிட மாறுதல் கோரும் திருமதி.எம்.ஆர்.லதா மகேஸ்வரி நகர சுகாதார செவிலியர் என்பவரை கொண்டு நிரப்பலாம்.

**பணிமாறுதலுக்கான நிபந்தனைகள் பின்வருமாறு.**

1. இப்பணியாளர் மாறுதலுக்கு பிறகு சென்னை மாநகராட்சியில் தனது பதவிக்கான பணி மூப்பு பட்டியலில் கடைசியில் இடம் பெறுவார்
2. பணி செய்துவரும் மாநகராட்சியில் கடைசியாக பெற்று வந்த ஊதியத்துடன் நடைமுறையில் அவ்வப்போது வழங்கப்படும் படிகளையும் பெற அனுமதிக்கப்படுவார்.
3. பணியாளர் தனது சம்பளத்துடன் சென்னை மாநகராட்சி பணியாளர்களின் சம்பளத்தை ஒப்பிட்டு ஊதிய முரண்பாடு கோர இயலாது.
4. இப்பணியாளரின் பொது வைப்பு நிதி, குடும்ப நல சிறப்பு வைப்பு நிதி மற்றும் கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டம் போன்றவைகள் முடிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.
5. பணியாளர் பணி செய்து வரும் மாநகராட்சியில் பணிபுரிந்த நாட்களுக்கான ஓய்வூதியம் மற்றும் விடுப்பு கால தொகை ஆகியவை கணக்கிட்டு சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்பட வேண்டும்.
6. பணியாளர் தனது வேண்டுகோளின் அடிப்படையில் மாறுதல் கோருவதால் பயணப்படி மற்றும் பணியில் சேருவதற்கான பணியேற்பிடைக் காலம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.
7. பணியாளர் மாறுதல் பெற்றவுடன் சென்னை மாநகராட்சி ஆணையரின் அனுமதி பெற்ற பின்னரே பணியில் சேர அறிவுறுத்தப்படுவார்.

மேற்தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் திருமதி.எம்.ஆர்.லதா மகேஸ்வரி, நகர சுகாதார செவிலியர் அவர்களை, மதுரை மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் வர அனுமதிக்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி அரசாணை பெற அனுமதி வேண்டப்படுகிறது

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்5/0689/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**496/2014** **பொருள் எண்.23**

**திருமதி.ஆர்.வனஜா, நகர சுகாதார செவிலியர் அவர்கள் திருவள்ளூர் நகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலுக்கு அனுமதி**

திருவள்ளூர் நகராட்சியில் நகர சுகாதார செவிலியராக பணியாற்றி வரும் திருமதி.ஆர்.வனஜா, என்பவர் தனது குடும்பம் மற்றும் குழந்தைகள் சென்னையில் வசித்து வருவதாகவும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனக்கு சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் கோரியதின் பேரில் சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிடமாறுதலில் செல்ல திருவள்ளூர் நகராட்சி நகர மன்றத் தீர்மானத்தில் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டு தீர்மானம் எண்.**436**, நாள் – **30.08.2012** படி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளது.

நகராட்சியில் பணி செய்து வரும் பணியாளர்களை மற்றொரு மாநகராட்சிக்கு மாறுதல் செய்வதற்கான உத்தரவு அரசிடமிருந்து பெறப்பட வேண்டும். சென்னை நகர முனிசிபில் சட்ட விதி ACT.1919 பத்தி **97** (c)லும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித எண்.**27274**/மாந–**3/96–1** நாள்.**08.07.1996**லும் நகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் நகர சுகாதார செவிலியர் பதவியில் **30** காலிப்பணியிடங்கள் உள்ளன. இக்காலிப்பணியிடத்தில் திருவள்ளூர் நகராட்சியிலிருந்து ஒருவழி பணியிட மாறுதல் கோரும் திருமதி.ஆர்.வனஜா, நகர சுகாதார செவிலியரை கொண்டு நிரப்பலாம்.

**பணிமாறுதலுக்கான நிபந்தனைகள் பின்வருமாறு.**

1. இப்பணியாளர் மாறுதலுக்கு பிறகு சென்னை மாநகராட்சியில் தனது பதவிக்கான பணி மூப்பு பட்டியலில் கடைசியில் இடம் பெறுவார்
2. பணி செய்துவரும் நகராட்சியில் கடைசியாக பெற்று வந்த ஊதியத்துடன் நடைமுறையில் அவ்வப்போது வழங்கப்படும் படிகளையும் பெற அனுமதிக்கப்படுவார்.
3. பணியாளர் தனது சம்பளத்துடன் சென்னை மாநகராட்சி பணியாளர்களின் சம்பளத்தை ஒப்பிட்டு ஊதிய முரண்பாடு கோர இயலாது.
4. இப்பணியாளரின் பொது வைப்பு நிதி, குடும்ப நல சிறப்பு வைப்பு நிதி மற்றும் கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டம் போன்றவைகள் முடிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.
5. பணியாளர் பணி செய்து வரும் நகராட்சியில் பணிபுரிந்த நாட்களுக்கான ஓய்வூதியம் மற்றும் விடுப்பு கால தொகை ஆகியவை கணக்கிட்டு சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்பட வேண்டும்.
6. பணியாளர் தனது வேண்டுகோளின் அடிப்படையில் மாறுதல் கோருவதால் பயணப்படி மற்றும் பணியில் சேருவதற்கான பணியேற்பிடைக் காலம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.
7. பணியாளர் மாறுதல் பெற்றவுடன் சென்னை மாநகராட்சி ஆணையரின் அனுமதி பெற்ற பின்னரே பணியில் சேர அறிவுறுத்தப்படுவார்.

மேற்தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் திருமதி.ஆர்.வனஜா, நகர சுகாதார செவிலியர் என்பவரை, திருவள்ளூர் நகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் வர அனுமதிக்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி அரசாணை பெற அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்1/2694/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.497/2014 **பொருள் எண்.24**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர் திருமதி. S. சரஸ்வதி, மருத்துவ அலுவலர் திரு.வி.க.நகர் மண்டலம் அவர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக 10.11.1989ல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி 23.09.1956 வயது முதிர்வு ஓய்வு நாள் 30.09.2014.

இவர் கீழ்கண்டுள்ளபடி பணியில் சேர்ந்து பணிவரன்முறை (ம) தகுதிக்காண் பருவம் முடித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. மருத்துவ அலுவலர் | மன்ற தீர்மான எண் 1517 நாள் 27.05.94ன் படி 10.11.1989 முதல் பணிவரண்முறைபடுத்தப்பட்டுள்ளது. | மன்ற தீர்மான எண் 1517 நாள் 27.05.1994ன் படி 10.11.1991 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. |

டாக்டர் திருமதி. S. சரஸ்வதி, மருத்துவ அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 18.08.2014 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என சான்றளிக்கப்படுகிறது.

அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை. சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை. கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது 30.09.2014 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்து தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்யது கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி வகுப்பு–2 என்பதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே, டாக்டர் திருமதி S. சரஸ்வதி, மருத்துவ அலுவலர் அவர்களை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அவரை 30.09.2014 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.6 ந.க.எண்.அ3/ 2321 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.498/2014 **பொருள் எண்.25**

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–6 சுகாதாரத்துறையில், செம்பியம் யுனானி மருந்தகத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்த டாக்டர். சாயிதாபேகம் அவர்களை **31/03/2014** அன்று **28/03/2014** நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, மன்றத்தின் பின்னேற்பாணைக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதியளிக்கப்பட்டது.

டாக்டர். சாயிதாபேகம், மருத்துவ அலுவலர் அவர்களின் பிறந்த தேதி **07.03.1956** ஆகும். தனியர் வகுப்பு II–ஐ சார்ந்தவர். எனவே வயது முதிர்வு ஓய்வு பெரும் நாள் **31/03/2014** ஆகும். டாக்டர். சாயிதாபேகம், மருத்துவ அலுவலர் அவர்கள், சேலம் மாநகராட்சியில் **21/06/1989** அன்று மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார். மருத்துவ அலுவலர் பதவியில் **22/06/1991** முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு ஆணை எண்.**11** (பல்வகை) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**07/01/1993**, நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.**24138/82**, நாள்.**19/02/1993**–ன்படி, ஒரு வழி பணியிடமாறுதலில் சேலம் மாநகராட்சியில் இருந்து **28/02/1993** அன்று பிற்பகல் விடுவிக்கப்பட்டு **09/03/1993** அன்று முற்பகல் சென்னை மாநகராட்சி புளியந்தோப்பு யுனானி மருந்தகத்தில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார்.

டாக்டர். சாயிதாபேகம், மருத்துவ அலுவலர் **21/06/1999** அன்று தேர்வுநிலையும் **21/06/2009** அன்று சிறப்பு நிலையும் பெற்றுள்ளார். தனியர் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. தமிழ் மொழி தேர்வு **6** முறை எழுதியும், தேர்ச்சி பெறாததால், தமிழ் மொழி தேர்விலிருந்து விலக்களித்து **31/12/2009** நாளிட்ட மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மன்ற தீர்மானம் **31/12/2009** அன்று நிறைவேற்றப்பட்டதால் தேர்வு நிலை / சிறப்பு நிலை மற்றும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் வழங்கி **31/12/2009** அன்று முதல் பணப்பயன்கள் வழங்கப்பட்டது. இருப்பினும், தனியர் **01/04/1999** முதல் **31/12/2009** வரை பணப்பயன்கள் வழங்க கோரி அரசுக்கு கடிதம் அளித்துள்ளதால், **19/11/2013** நாளிட்ட அரசு துணை செயலாளர் நகராட்சி நிர்வாகம் அவர்கள் தனியரின் பணிப்பதிவேட்டினை அனுப்புமாறு தெரிவித்ததையொட்டி **05/12/2013** அன்று பணிப்பதிவேடு அனுப்பப்பட்டது. தனியர் ஓய்வு பெறுவதையொட்டி **14/03/2014** அன்று நேரில் சென்று பணிப்பதிவேட்டினை கோரி பெறப்பட்டது. எனவே, மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு டாக்டர். சாயிதாபேகம் அவர்களை வயது முதிர்வில் ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டது. **16/05/2014** நாளிட்ட அரசாணையின்படி, தனியருக்கு **01/04/1999** முதல் **31/12/2009** வரை வழங்கப்படாமல் இருந்த வருடாந்திர ஊதிய உயர்வுகளுக்கான பணப்பயன்களை வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர். சாயிதாபேகம், மருத்துவ அலுவலர், **31/03/2014** அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றவர் மீது **11/03/2014** நாளிட்ட விழிப்பு அலுவலரின் குறிப்பின்படி, விழிப்பு குழுமத்தில், எந்தவித விசாரணையும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்க கடிதத்தின்படி, தனியர் மீது கடன்தொகை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும், தனியர் மீது எந்தவித துறை பூர்வமான குற்றச்சாட்டுகளும் நிலுவையில் இல்லை. தணிக்கை பிரிவின் அறிக்கையின்படி, முன்பண நிலுவை விவரம் மற்றும் தணிக்கை தடை ஏதுமில்லை. தனியர் சேலம் மாநகராட்சியில் பணிபுரிந்த காலத்தில், தணிக்கைத்தடை மற்றும் முன்பண நிலுவை ஏதும் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, டாக்டர். சாயிதா பேகம், மருத்துவ அலுவலர் அவர்களை நியமனக்குழுவின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு **31/03/2014** அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டவருக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.வ.அ.ந.க.எண்.அ1/4368/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.499/2014 பொருள் எண்.26

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.ஆர்.உமாபதி, கண்காணிப்புப் பொறியாளர்(பொது), வட்டார துணை ஆணையர்(வடக்கு) அலுவலகம், அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.07.2014 அன்று பிற்பகல் முதல் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 31.07.2014 நாளிட்ட அரசாணையின்படி வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

திரு.ஆர்.உமாபதி, அவர்கள் சென்னை மாநகராட்சியில் ஓவர்சீயராக 09.10.1975 அன்று பணியில் சேர்ந்துள்ளார். தற்போது கண்காணிப்புப் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 23.01.2014 முதல் வட்டார துணை ஆணையர்(வடக்கு) அலுவலகத்தில் பணிபுரிந்து 31.07.2014 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் சென்றார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பதவி | மண்டலம்/ துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 01 | ஓவர்சீயர் | பணித்துறை | 09.10.1975 | 30.11.1975 |
| 02 | ஓவர்சீயர் | மண்டலம்–09 | 01.12.1975 | 30.05.1979 |
| 03 | இளநிலை பொறியாளர் | மழைநீர் வடிகால் துறை | 31.05.1979 | 25.07.1979 |
| 04 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–09 | 26.07.1979 | 30.08.1981 |
| 05 | இளநிலை பொறியாளர் | பணித்துறை | 01.08.1981 | 31.08.1981 |
| 06 | இளநிலை பொறியாளர் | பணித்துறை | 01.09.1981 | 30.07.1984 |
| 07 | இளநிலை பொறியாளர் | பணித்துறை | 31.07.1984 | 29.09.1984 |
| 08 | உதவி பொறியாளர் | பணித்துறை | 30.09.1984 | 27.04.1988 |
| 09 | உதவி பொறியாளர் | பணித்துறை | 28.04.1988 | 22.09.1988 |
| 10 | உதவி பொறியாளர் | மண்டலம்–08 | 23.09.1988 | 31.03.1992 |
| 11 | உதவி பொறியாளர் | மண்டலம்–08 | 01.04.1992 | 25.03.1994 |
| 12 | உதவி பொறியாளர் | பணித்துறை | 26.03.1994 | 27.02.2000 |
| 13 | உதவி செயற்பொறியாளர் | பேருந்து சாலைகள் துறை (மாற்றுப் பணி திடக்கழிவு மேலாண்மை துறை) | 28.02.2000 | 09.03.2000 |
| 14 | உதவி செயற்பொறியாளர் | திடக்கழிவு மேலாண்மை துறை | 10.03.2000 | 17.11.2009 |
| 15 | செயற்பொறியாளர் | திடக்கழிவு மேலாண்மை துறை | 18.11.2009 | 30.06.2013 |
| | கண்காணிப்புப் பொறியாளர்(பொ) | திடக்கழிவு மேலாண்மை துறை | 01.07.2013 | 22.01.2014 |
| 16 | கண்காணிப்புப் பொறியாளர்(பொது) | வட்டார துணை ஆணையர்(வடக்கு) அலுவலகம் | 23.01.2014 | 31.07.2014 |

தனியர் உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளராக மண்டலம்/துறைகளில் பணிபுரிந்த காலங்களில் தனியர் மீது ரூ.3,22,115/–ற்கு தணிக்கை தடை உள்ளது என 16.07.2014 நாளிட்ட நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உள்ள தணிக்கைத்தடையை தவிர்த்து மற்ற துறைகளில் திரு.ஆர்.உமாபதி, கண்காணிப்புப் பொறியாளர்(பொது) அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

திரு.ஆர்.உமாபதி, கண்காணிப்புப் பொறியாளர்(பொது), வட்டார துணை ஆணையர்(வடக்கு) அலுவலகம், அவர்கள் மீது கூட்டுப்பொறுப்பில் உள்ள தணிக்கை தடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.3,22,115/—மற்றும் இவர் மீது பிற தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், தனியரை **31.07.2014** நாளிட்ட அரசாணை மற்றும் **31.07.2014** நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு தனியரை **31.07.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

எனவே, திரு.ஆர்.உமாபதி, கண்காணிப்புப் பொறியாளர்(பொது), வட்டார துணை ஆணையர்(வடக்கு) அலுவலகம், அவர்களை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **31.07.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்கப்பட்ட செயலுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண் அ2/9166/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்14.05.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.500/2014 **பொருள் எண்.27**

**38 சென்னை உயர்நிலை , 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 10 மத்திய மண்டலப்பள்ளிகளுக்கு தேவையான மொத்தம் 80 நகல் எடுக்கும் கருவி Canon IR – 2420L with DADF Digital A3 Photo Copier + With Network (Printing & Scanning )2014–2015 ஆம், கல்வியாண்டில் ரூ. 73,32,444/– தொகையில் (வரி உட்பட) Canon India pvt, Ltd., என்ற நிறுவனத்தில் DGS & D தொகையில் விலைப்புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2014 – 2015 ஆம் கல்வியாண்டின் நிதி நிலை அறிக்கை வரிசை எண் :18 - ல் 38 சென்னை உயர்நிலை, 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 10 மத்திய மண்டலப்பள்ளிகளுக்கு தேவையான **“நகல் எடுக்கும் இயந்திரம்** (Photo Copying Machine)” – வழங்கலாம் என கருதப்பட்டுள்ளது.

சென்னைப் பள்ளிகள் சிறந்த உள் கட்டமைப்பு வசதிகளுடனும் மற்றும் அனைத்து கல்வி உபகரண வசதிகளுடனும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மாற்றமும் பெற்று வருகின்றன. இவ்வகையில் பள்ளி அளவிலான வாரத்தேர்வுகள், மாதத்தேர்வுகள் நடத்திட ஏதுவாக வினாத்தாள்களை நகல் எடுக்க வேண்டியுள்ளது. அலுவலக கடிதங்கள், அரசு ஆணைகள் ஆகியனவும் நகல் எடுக்க வேண்டியுள்ளது. இதற்காக நகலகங்களைத் தேடிப் போவதால் நேர விரயமும், பண விரயமும் ஏற்படுகின்றன. இதைத் தவிர்த்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. எனவே இப்பணிகளுக்கு நகல் எடுக்கும் இயந்திரம் மிகவும் அவசியதானதாக தேவைப்படுகிறது.

அதனடிப்படையில் 38 சென்னை உயர்நிலை, 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 10 மத்திய மண்டலப்பள்ளிகளுக்கு தேவையான மொத்தம் 80 நகல் எடுக்கும் கருவிகள் Canon IR – 2420L with DADF Digital A3 Photo Copier + With Network (Printing & Scanning) 2014-2015 ஆம் கல்வியாண்டில் தோராயமாக ரூ. 73,32,444/- தொகையில் **Canon India pvt,Ltd.,** நிறுவனத்தில் **DGS & D** தொகையில் விலைப்புள்ளி மூலம் கீழ்கண்டுள்ளவாறு கொள்முதல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

**2014 – 2015 ஆம் கல்வியாண்டில் 38 சென்னை உயர்நிலை, 32 சென்னை மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 10 மத்திய மண்டலப்பள்ளிகளுக்கு தேவைப்படும் நகல் எடுக்கும் கருவியின் விவரங்கள்:**

| வ. எண் | சென்னை பள்ளிகள் | ஒரு நகல் எடுக்கும் கருவியின் விலை (ரூ) | மொத்த மதீப்பீடுகள் (ரூ) |
|---|---|---|---|
| 1 | 38 – சென்னை உயர்நிலைகள் | 38 X 91,655.55 | 34,82,910 |
| 2 | 32 - சென்னை மேல்நிலைப் பள்ளிகள் | 32 X 91,655.55 | 29,32,978 |
| 3 | 10 மத்திய மண்டலப் பள்ளிகள் | 10 X 91,655.55 | 9,16,556 |
| | | மொத்தம் | 73,32,444 |

எனவே,

1) 2014 - 2015 ஆம், கல்வியாண்டில் 38 சென்னை உயர்நிலை, 32 மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 10 மண்டல மையப்பள்ளிகளுக்கு தேவையான மொத்தம் 80 நகல் எடுக்கும் கருவிகள் Canon IR – 2420L with DADF Digital A3 Photo Copier+With Network (Printing&Scanning) 2014-2015 ஆம் கல்வியாண்டில் ரூ.73,32,444/- தொகையில் (வரி உட்பட) Canon India pvt,Ltd., என்ற நிறுவனத்தில் **DGS & D** தொகையில் விலைப்புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கும்,

2) அத் தொகையினை (ரூ.73,32,444/-(வரி உட்பட) Canon என்ற நிறுவனத்தின் பெயருக்கு காசோலையாக வழங்கவும்,
3) அச் செலவினத்தை துறை குறியீடு எண்: E –பிரிவு எண் : 80– 82-01 கணக்கு குறியீடு எண் : 410-60-08-00 அலுவலக தளவாடங்கள் – நகல் எடுக்கும் கருவிகள் என்ற மூலதன தலைப்பில் (Capital Budget) செலவு மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 12.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.29/2014–ன்படி நிலைக்குழு(கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.432/2014ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண். அ1 /17799 /2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.501/2014 **பொருள் எண்.28**

**<u>கல்வித்துறை – சென்னைப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம், உட்கட்டமைப்பு மற்றும் பள்ளிகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பதற்கான தேவைகளை அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்ள அனுமதி – தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சியின் கீழ் **32** மேல்நிலைப் பள்ளிகள், **38** உயர்நிலைப் பள்ளிகள், **92** நடுநிலைப்பள்ளிகள் மற்றும் **122** தொடக்கப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. சுமார் **85,000** மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் நிர்வாகப் பணிகள் மற்றும் அலுவலகப் பணிகளும் நடந்து வருகின்றன. இப்பணிகள் செவ்வனே நடைபெறுவதற்கு பள்ளிகளில் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளிகளின் பாதுகாப்பும் மிகவும் அவசியமாகும்.

அனைத்துப் பள்ளிகளிலும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியமாகும்.

ஆகவே, பள்ளித் தலைமையாசிரியர்களே தங்கள் பள்ளிக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு வசதிகளையும் **01.10.2014** முதல் **31.03.2015** வரை மேற்கொள்ளவும், மேலும் அவர்களுக்கு தேவைப்படும் நிதியை காவலர் செலவுகள் (Security Expenses) என்ற நிதி ஒதுக்கீட்டில் பெற்று கல்வி அலுவலர் மூலம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1. பள்ளிகளில் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளி சார் உட்கட்டமைப்பு பொருட்களின் பாதுகாப்புத் தேவைகளை சந்தித்திட மாணவ/மாணவியர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே நேரடியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை இக் கல்வி ஆண்டு முழுவதும் மேற்கொள்ள அனுமதியும்,
2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதியும்,
3. இச்செலவினங்களுக்காக ரூ.**1,68,42,000/–** (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) வழங்க அனுமதியும்,
4. இத்தொகையை தொடக்க/நடுநிலைப்பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண். **80–80–82–07, 220–11–03–11** Security Expenses என்ற தலைப்பில் ரூ.**1,21,38,000/–** மற்றும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீடு எண். **80–82–01, 230–11–03–12** Security Expenses என்ற தலைப்பில் ரூ.**47,04,000/–** பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட **1** முதல் **4** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் **12.09.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.09.2014** அன்று தீர்மானஎண். **30/2014–**ன்படி நிலைக்குழு(கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.09.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.09.2014** அன்று தீர்மான எண்.**426/2014**ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.க.கு.ந.க.எண்.அ12/2227/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.502/2014 **பொருள் எண்.29**

**சென்னை மாநகராட்சியிலிருந்து வாலாஜா நகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதலுக்கு அனுமதி**

திரு.ஆர்.பரந்தாமன், இளநிலை உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் ப.க.கு. ‘அ’ பிரிவு) அவர்கள் தனது தந்தைக்கு வயதாகிவிட்டது. அவருக்கு 28.05.2001ல் பித்தபையில் கேன்ஸர் கட்டி அறுவை சிகிச்சை வேலூர் (CMC) மருத்துவமனையில் செய்துக் கொண்டார். தன் தாய் 21.02.2008ல் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இறந்துவிட்டார். அதனால் என் தந்தை தனியாக மருத்துவமனை செல்ல இயலவில்லை. அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல தன்னை தவிர வேறு ஆள் இல்லை. தான் படியம்பாக்கம் கிராமத்தில் நிரந்தரமாக குடியிருந்து வருவதாகவும், தன் கிராமத்திற்கும் வாலாஜா நகராட்சிக்கும் 7 கிலோ மீட்டர் தூரம் உள்ளதாகவும், தான் சென்னையில் தனியாக வசித்து வருவதாகவும், தன் பிள்ளைகள் மனைவி கிராமத்தில் வசிக்கின்றனர். ஆகவே, சிலநேரம் தன் சொந்த ஊருக்கு செல்ல வேண்டி உள்ளது. தன் தந்தை உடல்நிலை சரியில்லாத நிலையின்போது பணிக்கு வர இயலாது விடுப்பு எடுக்கும் சூழ்நிலை உள்ளது. மேலும், அடிக்கடி விடுப்பு கேட்பதால் என்னுடைய பணிகள் தடைபடுகிறது. உயர் அதிகாரிகளிடம் மன உளைச்சலுக்கு ஆளாகிறேன் என்றும், எனவே தான் சென்னைக்கு வந்து செல்வதனால் 230 கிலோ மீட்டர் பயணம் செய்ய உள்ளது. ஆகையால் 230 கிலோ மீட்டர் பயணம் செய்வதால் முதுகு வலி ஏற்படுவதாலும் தன்னை கருணை மனம் கொண்டு வாலாஜா நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் மூலம் செல்ல அனுமதி வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு.ஆர். பரந்தாமன், இளநிலை உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் சுகாதாரம் /ப.க.கு.) அவர்கள் சென்னை மாநகராட்சியில் 16.06.1998 அன்று தோட்டப் பணியாளராக (Gardener) பணியில் சேர்ந்தார். இப்பதவியில் 16.06.1998 முதல் பணிவரன் முறைப் படுத்தியும், 16.06.2000 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் 09.12.2010 பிற்பகல் அன்று இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று 09.12.2010 பிற்பகல் பணியில் இணைந்தார். இளநிலை உதவியாளர் பதவியில் 09.12.2010 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. 16.06.1998 முதல் இந்நாள் வரை 16 வருடங்கள், 2 மாதங்களுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறார். தனியர் தற்பொழுது இளநிலை உதவியாளர் பதவியில் ரூ.8550+2400 த.ஊ. என அடிப்படை ஊதியம் பெற்று வருகிறார். தனியர் மீது எந்தவித விசாரணை மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை.

தனியர் கீழ்கண்டுள்ள கல்வித்தகுதி பெற்றுள்ளார்.

கல்வித் தகுதி – பத்தாம் வகுப்பு தேர்ச்சி (SSLC)

மேலும், சென்னை மாநகராட்சி முனிசிபல் விதி 97(C)ன்படி தமிழ்நாடு அரசு கடித எண்.27274/மா.ந.5/96/1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 08.07.1996ன்படி சென்னை மாநகராட்சி அலுவலர் மாநகராட்சிக்கும் / நகராட்சிக்கு மாறுதல் செய்வது குறித்து பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும் மற்றும் நிபந்தனைகளும் கீழ்கண்டவாறு வழி வகுக்கப்பட்டுள்ளது.

1. இப்பணியாளர் மாறுதலுக்கு பிறகு வாலாஜா நகராட்சியில் தனது பதவிக்கான பணியில் இளையவராக கருதப்படுவார்.
2. இவர் சென்னை மாநகராட்சியில் கடைசியாக பெற்றுவரும் ஊதியத்துடன் நடைமுறையில் உள்ள அவ்வப்போது வழங்கப்படும் அரசாணைகளின்படி, படிகளையும் பெற அனுமதிக்கப்படுவார்.
3. இவர் தனது ஊதியத்தினை வாலாஜா நகராட்சி பணியாளர்களுடன் ஒப்பிட்டு ஊதிய முரண்பாடு கோர இயலாது.
4. இப்பணியாளரின் பொது வைப்பு நிதி, சிறப்பு சேமநலநிதி மற்றும் கூட்டு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஆகிய கணக்குகளை சென்னை மாநகராட்சியில் முடிக்கப்பட்டு வாலாஜா நகராட்சிக்கு மாற்றப்பட வேண்டும்.

5. தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த நாட்களுக்கான ஓய்வூதியம் மற்றும் விடுப்புக்கால சந்தா தொகை (Leave Salary Contribution and Pensionary Contribution) ஆகியவைகளை கணக்கிட்டு வாலாஜா நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.
6. இவர் தனது வேண்டுக்கோளின்படி ஒருவழி மாறுதலில் செய்வதால் பயணப்படி மற்றும் பணியில் சேருவதற்கான பணியேற்பிடை காலம் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் தனியரை நகராட்சிக்கு ஒருவழி மாறுதல் மூலம் விதிகளுக்குட்பட்டு மன்றத்தின் அனுமதி பெற்று பணியிட மாற்றம் செய்யலாம்.

எனவே, திரு.ஆர். பரந்தாமன், இளநிலை உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் அவர்களை வாலாஜா நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.பொ.தொ.ந.க.எண்.W2/249/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.503/2014 **பொருள் எண்.30**

**சென்னை மாநகராட்சி பணியிலிருந்து மதுரை மாநகராட்சி ஒரு வழி பணியிட மாறுதலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையின் கீழ்வரும் பொது தொழிற்சாலையில் பணிபுரியும் திரு.சாமுவேல் தொழிலாளி அவர்கள் மாற்று திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட 1 % பணியிடங்களின் அடிப்படையில் சிறப்பு அதிகாரி அவர்களின் மன்றத் தீர்மான எண்.1547/1995, நாள்.05.07.1995–இன்படியும், ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும் தொழிலாளியாக (கண்பார்வையற்ற மாற்று திறனாளி) பொது தொழிற்சாலையில் 14.07.1995 முதல் பணி நியமனம் செய்யப்பட்டு மாற்றுப்பணி அடிப்படையில் தற்போது ரிப்பன் மாளிகை, இளநிலை பொறியாளர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் நாற்காலி பின்னும் பணியினை செய்து வருகின்றார். தனியர் 4800–10000+ தர ஊதியம் 1650 என்ற விகிதத்தில் அடிப்படை ஊதியமாக ரூ. 9970/– பெற்று வருகிறார்.

தனியருக்கு தொழிலாளர் பதவியில் பணிவரன் முறை மற்றும் தகுதி காண் பருவம் முடித்தவராக ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவர் மீது எவ்வித குற்றச்சாட்டுகளோ ஒழுங்கு நடவடிக்கையோ நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

இயந்திர பொறியியல் துறையின் கீழ்வரும் பொது தொழிற்சாலையில் பணிபுரியம் திரு. எஸ். சாமுவேல், தொழிலாளி (கண்பார்வையற்ற மாற்ற திறனாளி) அவர்கள், 01.07.2013, 12.12.2013,07.08.2014 மற்றும் 30.07.2014 நாளிட்ட கடிதங்களில் தான் கண்பார்வையற்றவர் எனவும், தனக்கு உதவிக்கு ஆட்கள் இல்லாத காரணத்தால் சென்னை மாநகராட்சியிலிருந்து தனது சொந்த ஊரான மதுரை மாநகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்து தரும்படி கேட்டுக் கொண்டுள்ளார். தனியரின் 07.03.2012 நாளிட்ட கோரிக்கை குறித்து 30.04.2012 அன்று மதுரை மாநகராட்சிக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் 31.08.2012 ஆணையர், மதுரை மாநகராட்சி அவர்களின் கடிதத்தில் மதுரை மாநகராட்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான பணியிடம் எதுவும் தனியாகவோ, பணிவிதிகளிலோ ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினால் திரு. எஸ். சாமுவேல், தொழிலாளி (கண்பார்வையற்ற மாற்ற திறனாளி) க்கு பணியிட மாற்றம் வழங்க இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், தனியர் மீண்டும் தனக்கு பணியிட மாற்றம் அளிக்க கோரி அரசு செயலாளர், மாற்று திறனாளிகள் நலத்துறை, தலைமை செயலகம், சென்னை–9 அவர்களுக்கும், சென்னை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கும் பணியிட மாற்றம் வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

28.10.2013 நாளிட்ட முதன்மை செயலர், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் கடித எண்.ந.க.எண்.3262/மா.தி.ந.3.1/2013 நாள் 28.10.2013–ல் தெரிவித்துள்ளபடியும் 11.11.2013 நாளிட்ட உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளபடியும் சொந்த மாவட்டங்களில் பணியிடமாறுதல் கோரி மாற்றுத் திறனாளிகள் விண்ணப்பித்தால் முன்னுரிமை தந்து பணியிட மாற்றம் வழங்கும்படி தெரிவித்துள்ளதால், திரு. எஸ். சாமுவேல், தொழிலாளி (கண்பார்வையற்ற மாற்ற திறனாளி) அவர்களின் கோரிக்கையின்படி உதவிக்கு ஆட்கள் எவரும் இல்லாத பட்சத்தில் தனியரது சொந்த ஊரான மதுரை மாநகராட்சியின் தொழிலாளர் பதவியில் மாற்றுத் திறனாளிகளுக்கான காலிபணியிடம் இருப்பின், முன்னுரிமை தந்து தனியரை பணியில் அமர்த்துமாறும் 28.02.2014 நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் கடிதம் மூலம் ஆணையர், மதுரை மாநகராட்சிக்கு தெரிவிக்கப்பட்டது, நினைவூட்டல் கடிதம் 23.07.2014 நாளிட்ட மேற்பார்வை பொறியாளர் (சாலை (ம) பாலங்கள்) வாயிலாகதெரிவிக்கப்பட்டது, e-mail மூலமும் மதுரை மாநகராட்சிக்கு 14.08.2014, 18.08.2014 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. இதை தவிர செயற் பொறியாளர் (இயந்திரப் பொறியியல் துறை) சென்னை மாநகராட்சி அவர்கள் மதுரை மாநகராட்சி ஆணையரிடம் மற்றும் அலுவலர்களிடம் பலமுறை 14.08.2014, 18.08.2014, 19.08.2014, 20.08.2014, 21.08.2014, 22.08.2014, 25.08.2014, 26.08.2014, 27.08.2014 ஆகிய நாட்களிலும் தொடர்பு கொண்டு உரையாடினார்.

30.07.2014 நாளிட்ட தனியர் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு சமர்ப்பித்த மனுவிற்கு பதில் அளித்தபோது மன்ற தீர்மானம் பெறுவதற்கு கோப்பு நடவடிக்கையில் உள்ளது என்று தகவல் அளிக்கப்பட்டது.

ஆகவே, தனியர் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாற்றம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/21219/ 2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.504/2014 **பொருள் எண்.31**

**2014–2015ம் ஆண்டுக்கான கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| 01 | பதவியின் பெயர் | மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், வகுப்பு–1பி |
| 02 | மைய நாள் | 01.04.2014 |
| 03 | ஊதிய விகிதம் | ரூ.15600–39100+6600தர ஊதியம் |
| 04 | ஊட்டப்பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | **மண்டல சுகாதார அலுவலர்:**<br>1. MBBS Degree with Diploma in Public Health.<br>2. A pass in Account Test for Executive Officer.<br>3. Must have served as Zonal Health Officer/Superintendent Communicable Disease Hospital at least for a period of 2 years. |
| 05 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 04<br>மொத்தம் – 04<br>(அ) தற்காலிக பணியிடம் – 00<br>(ஆ) நிரந்தர பணியிடம் – 04<br>2. மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் – 01<br>3. 01.04.2014 முதல் 31.03.2015 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 00<br>4. பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப் பணியிடம் – 01<br>5. 5 சதவீதம் விடுப்பு காலிப் பணியிடம் – 00<br>6. மொத்தம் காலிப்பணியிடம் – 02 |
| **06** | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம். | கடைசியாக 01.04.2013ஐ மைய நாளாக கொண்டு மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு அத்தெரிவுப்பட்டியலில் மூப்புநிலை அடிப்படையில் இடம்பெற்ற அலுவலர்களுக்கு கூடுதல் சுகாதார அலுவலர் பதவி உயர்வு அறிக்கப்பட்டது. |

7. பணிமூப்பின்படி மண்டல சுகாதார அலுவலர்களின் விவரம்:–

| **வ எண்** | **பெயர் திருவாளர்கள்** | **தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள்** | **தெரிவுப் பட்டயலில் சேர்க்க லாமா ?** | **மந்தன அறிக்கை விவரம்** | **தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம் (ஆட்சேபனை ஏதேனும் இருப்பின்)** |
|---|---|---|---|---|---|
| 01 | டாக்டர்.என்.எ. செந்தில்நாதன் | 29.06.1992 | ஆம் | 16.08.09முதல் 30.09.10வரை (நன்று)<br>30.09.10முதல் 15.11.10வரை (நன்று)<br>15.11.10முதல் 06.06.11வரை (நன்று)<br>27.07.11முதல் | தனியர் தனது பணிகளை கவனிக்காமல் அலட்சியமாக இருந்ததால் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு இறுதி ஆணையாக தனியரது ஊதிய உயர்வினை 3 மாதங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 15.11.2012ல் ஆணை வழங்கப்பட்டது. தனியாரின் பணிப்பதிவேட்டின் பதிவின்படி இவரது ஊதிய உயர்வு நாள் 01.07.2013 ஆகும் என்பதால் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | **09.04.12**வரை (நன்று) **25.04.12**முதல் **30.09.12**வரை (நன்று) **17.10.2012** முதல் **31.03.2013** வரை (நன்று) | **01.07.2013**லிருந்து தண்டனைக் காலம் நடப்பில் இருந்ததால் தனியரின் பெயரை **01.04.2013**ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப் பட்டியலில் சேர்க்காமல் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது தனியருக்கு வழங்கப்பட்ட தண்டனை **31.10.2013** அன்று முடிவடைந்துவிட்டதால் **தனியரின் பெயரை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதியுடையவராகிறார்.** |
| 02 | டாக்டர். எ.பிரபாவதி | **09.07.1999** | இல்லை | இல்லை | தனியர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக **தற்காலிகமாக பதவி உயர்வுக்கு விருப்பமின்மை தெரிவித்துள்ளதால் இவரது பெயரை பதவி உயர்வுக்கு 3 வருடங்களுக்கு பரிசீலிக்க இயலாது.** |
| 03 | டாக்டர். ஜி.ராஜ்குமார் | **16.07.1999** | ஆம் | **09.04.09**முதல் **30.09.10**வரை (மிக நன்று) **30.09.10**முதல் **15.11.10**வரை (மிக நன்று) **15.11.10**முதல் **06.06.11**வரை (மிக நன்று) **27.07.11**முதல் **24.05.12**வரை (நன்று) **24.05.12**முதல் **30.09.12**வரை (மிக நன்று) **15.10.12** முதல் **01.07.2013** வரை (சிறந்த பணி) **03.07.13** முதல் இன்று வரை (சிறந்த பணி) | சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை மண்டலம்–**10**ல் உள்ள எரியூட்டு மைதானத்தில் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.**3,43,220**யை கையாடல் செய்த செயலினை கண்காணிக்கத் தவறியதற்காக டாக்டர். ஜி.ராஜ்குமார் மண்டல சுகாதார அலுவலர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதியாணையாக ஆணையரது செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ**2/8643/2002**, நாள்:**04.08.2009**ன் படி இவரது ஊதிய உயர்வினை **3** ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆணையர் அவர்களின் **04.08.2009** நாளிட்ட ஆணையின்படி தனியரின் ஊதிய உயர்வினை **01.07.2010** லிருந்து **30.06.2013** வரை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்யப்படவேண்டும். இதன்படி **30.06.2013** வரை தனியரின் தண்டனைக்காலம் நடப்பில் இருந்ததால் இவரது பெயரை **01.04.2013**ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலில் சேர்க்காமல் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது தனியருக்கு வழங்கப்பட்ட தண்டனை **30.06.2013** அன்று முடிவடைந்துவிட்டதால் **தனியரின் பெயரை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதியுடையவராகிறார்.** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | டாக்டர். எஸ்.மகாலக்ஷ்மி | 30.05.2008 | இல்லை | 21.09.07 முதல் 29.05.08 வரை (சிறந்த பணி) 30.05.08 முதல் 30.09.10 வரை (சிறந்த பணி) 27.07.11 முதல் 09.04.12 வரை (சிறந்த பணி0 24.05.12 முதல் 30.09.12 வரை (சிறந்த பணி) | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி பதவி உயர்வுக்கு முழு தகுதிகள் பெற்றுள்ளார். எனினும் காலிப்பணியிடம் இன்மையால் தனியரின் பெயரை **தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது.** |

அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3) துறை, நாள்:06.10.2009ன்படி சென்னை மாநகராட்சியில் வகுப்பு–1Bன் கீழ் வரும் பதவிகளை பணி நியமனம் செய்துக் கொள்ள சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது:–

அ). 01.04.2014ஐ மைய நாளாக கொண்டு கீழ்கண்ட 2 மண்டல சுகாதார அலுவலர்களின் பெயர்களைக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

| வ.எண் | பணிமூப்பு பட்டியலில் வரிசை எண். | பெயர் | மண்டல சுகாதார அலுவலர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| **01** | 01 | டாக்டர்.என்.எ.செந்தில்நாதன், | **29.06.1992** |
| **02** | 03 | டாக்டர்.ஜி.ராஜ்குமார் | **16.07.1999** |

ஆ). மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள டாக்டர்.என்.எ.செந்தில்நாதன், மண்டல சுகாதார அலுவலரின் 01.04.2009 முதல் 15.08.2009 வரை மற்றும் 01.04.2013 முதல் 31.03.2014வரையிலான காலத்திற்கு மந்தன அறிக்கை கிடைக்கப்பெறாததால் இக்காலத்திற்கான மந்தன அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர், ரூ.15600–39100+6600தர ஊதியம் என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலி பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்தவும்,

இ). மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.2 உள்ள டாக்டர்.ஜி.ராஜ்குமார், மண்டல சுகாதார அலுவலர் அவர்களுக்கு ரூ.15600–39100+6600தர ஊதியம் என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் மைய நாளுக்கு பின்பு ஏற்படவுள்ள காலி பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்தவும்.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/20626/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.505/2014 **பொருள் எண்.32**

**2014–2015 ஆண்டிற்கான உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் 01.06.2014ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்படவுள்ளது. உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளின்படி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | உதவி கோட்ட மின் பொறியாளர் |
| 2 | மைய நாள் | 01.06.2014 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.15600–39100 + தர ஊதியம் 5400 |
| 4 | காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies) | 1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 18<br>2) அரசாணை எண்.95, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 14.10.2012 தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் – 6<br>(அ) தற்காலிக பணியிடம் – –<br>(ஆ) நிரந்தர பணியிடம் – 24<br>3) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 1<br>4) மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் – 1<br>(நீதிமன்ற ஆணையின்படி நிறுத்தி வைக்ககப்பட்ட காலிப்பணியிடம்)<br>5) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் – 2<br>6) 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் – 1<br>––––<br>5<br>–––– |
| 5 | வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | <u>இளநிலை/உதவி பொறியாளர் (மின்சாரம்)</u><br>(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம். உதவி பொறியாளர் பதவியில் 5 ஆண்டுகள் பணி முடித்தவர்கள்.<br>(ஆ) பட்டயம் மாநில குழு தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தால் பட்டய பொறியாளர்களை பொறுத்தமட்டில் 15 ஆண்டுகள் பணி முடித்தவர்களை கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது. பட்டயப் பொறியாளர்களை பொறுத்தமட்டில் உதவி மேற்பார்வையாளர், டெஸ்டர் மற்றும் ஓவர்சியர் ஆகிய பதவிகளில் மொத்தமாக 15 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களை உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்யலாம்.<br>(இ) பொதுத் பணித்துறை சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? | 01.06.2013ஐ மைய நாளாகக் கொண்டு உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான 9 நபர்கள் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, 24.01.2014 நாளிட்ட மன்றத் தீர்மான எண்.86/2014ன்படி 7 நபர்களுக்கு உதவி கோட்ட மின் பொறியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது. |

அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள்: 06.10.2009ல், சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவிகளை பணிநியமனம் செய்து, உறுதியாக்கம் வழங்க மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு வழங்கியுள்ளது.

உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி, உதவி பொறியாளர் பதவியில் 5 ஆண்டுகள் பணி முடித்தவர்கள் மற்றும், இளநிலை பொறியாளர்களை பொறுத்தமட்டில் 15 ஆண்டுகள் பணி முடித்தவர்களை கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுவருகிறது. பட்டயப் பொறியாளர்களை பொறுத்தமட்டில் பணிவிதிகளில் இளநிலை பொறியாளர் பதவியில் 15 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டுமென குறிப்பிடப்படவில்லை. எனவே, பட்டயப்படிப்பு முடித்தவர்களில் தனியர்கள் உதவி மேற்பார்வையாளர், டெஸ்டர் மற்றும் ஓவர்சியர் ஆகிய பதவிகளில் மொத்தமாக 15 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களை உதவி கோட்ட மின்பொறியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்க பணிவிதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 01.06.2013ஐ மைய நாளாகக் கொண்டு உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான 9 நபர்கள் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, 24.01.2014 நாளிட்ட மன்றத் தீர்மான எண்.86/2014ன்படி 7 நபர்களுக்கு மட்டும் உதவி கோட்ட மின் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. தெரிவுப்பட்டியலில் சேர்க்கப்படாத திரு.பா.பார்த்தசாரதி, இளநிலை பொறியாளர் என்பவர் தன்னுடைய பெயரை தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.3ல் திரு.எம்.ஆர்.பாஸ்கரன், உதவி பொறியாளர் என்பவரின் பெயருக்கு முன்னால் இடம்பெற செய்து, தனக்கு பதவி உயர்வு வழங்கும்படி உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண்.2610/2014ல் தடையாணை வழங்கும்படி வேண்டியுள்ளார். உயர்நீதிமன்றம் தனது 30.01.2014 நாளிட்ட தீர்ப்பில், **“There shall be a direction to the respondents to keep one post vacant in the cadre of Assistant Divisional Engineer (Electrical) till then.”** என ஆணையிட்டுள்ளது. அதன்படி 7 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கி 1 காலிப்பணியிடத்தை நீதிமன்ற ஆணையின்படி நிரப்பாமல் நிறுத்திவைக்கப்பட்டது (மற்றொரு காலிப்பணியிடம் விடுப்பு காலிப்பணியிடம் ஆகும்).

மேலும், உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிப்பது தொடர்பாக கீழ்கண்ட விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது :–

மன்ற தீர்மான எண்.349/2014, நாள்.26.06.2014ன்படி, சென்னை மாநகராட்சி (மின்துறை சார்பான) பணிவிதிகளில், மின்துறை உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு 3:1 விகிதாசாரம் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதின் பொருட்டும், மேலும், மின்துறையில் பட்டப்படிப்பு படித்த உதவி பொறியாளர்களுக்கு 5 வருடங்கள் பணிஅனுபவமும், பட்டய படிப்பு படித்த இளநிலை பொறியாளர்களுக்கு 10 வருடங்கள் பணி அனுபவமும், உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வுக்கு கடைப்பிடிக்கப்படவும், சென்னை மாநகராட்சி மின் துறை உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் The Chennai Corporation Engineering Service Rules 1969-ன் பணி விதிகளை திருத்தி மாற்றி அமைக்கவும், உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியின் பெயரை உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) எனவும் மாற்றி அமைக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திருவாளர்கள்.என்.சிவபதி மற்றும் எஸ்.சிங்காரவேலு, உதவி பொறியாளர்கள்(மின்சாரம்) ஆகியோர் தங்களுக்கு உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வு வழங்குமாறு கோரியுள்ளனர். இவ்விரண்டு உதவி பொறியாளர்களும் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் (Electronics and Communication Engineering) பட்டப்படிப்பு படித்துள்ளனர். இவர்கள் சென்னை மாநகராட்சி மின்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் கம்பியிள்ள தொடர் அமைப்பில் உபகரணங்கள் பராமரிப்பது தொடர்பாக நியமனம் செய்யப்பட்டு மின்துறையில் இருந்த உதவிபொறியாளர் காலிப்பணியிடங்களில் 29.08.2008 முதல் ஈர்க்கப்பட்டனர். பின்னர் மன்றத் தீர்மானம் எண்.580/2008, நாள்:29.10.2008ன்படி 22.08.1996 முதல் உதவி பொறியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளனர். இவ்விரண்டு உதவி பொறியாளர்களும் உதவி கோட்ட மின் பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்க கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கில் The Chennai Corporation Engineering Service Rules 1969ல் உள்ள பணிவிதிகளையும் கல்வி தகுதியினையும் அதாவது A degree in Electrical Engineering என்ற கல்வி தகுதியினை பின்பற்றி உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்படுவதாக தெரிவித்து எதிர் உறுதி மனு தாக்கல் (Counter - Affidavit) செய்யப்பட்டுள்ளது என்றும் மன்றத் தீர்மானம் எண்.349/2014, நாள்:26.06.2014ன்படி உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு மேற்கண்டவாறு சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் 1969ல் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியின் பெயர் மாற்றம் மற்றும் கல்வி தகுதி, பணிஅனுபவம், விகிதாச்சாரங்கள் மற்றும் சதவிகிதம் ஆகிய மாற்றங்கள் செய்து அரசுக்கு பரிந்துரைசெய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் திருவாளர்கள் என்.சிவபதி மற்றும் எஸ்.சிங்காரவேலு, உதவி பொறியாளர்கள் ஆகியோர் பயின்றுள்ள பட்டப்படிப்பான எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் (Electronics and Communication Engineering) பட்டப்படிப்பையும் உதவி கோட்ட

மின் பொறியாளர் பதவிக்கு கல்வித்தகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும் 03.09.2014 நாளிட்ட குறிப்பின் மூலம் கண்காணிப்புப் பொறியாளர்(மின்சாரம்)(பொ) அவர்கள் தெரிவித்துள்ளார்.

எனவே, இம்முறையும் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க முந்தைய பணிவிதிகளின்படியே தெரிவுப்பட்டியல் தயாரித்திட, கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) (பொ.) அவர்கள் மூப்புப்பட்டியல் தயாரித்து சமர்ப்பித்துள்ளார். அதன்படி 2014 ஆம் ஆண்டிற்கான உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது,

| | |
|---|---|
| நீதிமன்றத்தின் ஆணையின்படி நிறுத்திவைக்கப்பட்ட காலிப்பணியிடம் | – 1 |
| பதவி உயர்வினால் ஏற்படகூடிய காலிப்பணியிடம் | – 2 |
| ஓய்வுபெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – 1 |
| மொத்தம் | – 4 |

இப்பதவிக்கு இவ்வாண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்க மின்துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பணிமூப்பின்படி 15 ஆண்டு பணிமுடித்த இளநிலை பொறியாளர்களின் விவரம் மட்டும் பெறப்பட்டுள்ளது. 5 ஆண்டு பணிமுடித்த உதவி பொறியாளர்கள் எவரும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

01.06.2014 அன்று மைய நாளாகக் கொண்டு மின்துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் பணிமூப்பின்படி இளநிலை பொறியாளர்களின் விவரம் பின்வருமாறு :–

| வ எண் | பெயர் (திருவாளர்கள்) மற்றும் பதவி | சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள் (உதவி மேற்பார்வையாளராக) | தற்போதுள்ள பதவியில் சேர்ந்த நாள் | 15 ஆண்டு காலம் பணி நிறைவு செய்த நாள் | தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | ஆர். சங்கரன், இளநிலை பொறியாளர் | 23.12.1987 | 23.06.1995 | 22.12.2002 பி.ப. | தகுதி பெற்றுள்ளார். |
| 2. | ஆர். ரவி, இளநிலை பொறியாளர் | 05.07.1988 | 23.06.1995 | 04.07.2003 பி.ப. | தகுதி பெற்றுள்ளார். |
| 3. | பி.பார்த்தசாரதி, இளநிலை பொறியாளர் | 27.11.1989 | 23.06.1995 | 26.11.2004 பி.ப. | தகுதி பெற்றுள்ளார். |
| 4. | எஸ்.திருப்பதி, இளநிலை பொறியாளர் | 20.03.1990 | 23.06.1995 | 19.03.2005 பி.ப. | தகுதி பெற்றுள்ளார். |
| 5. | டி. சௌந்தரராஜ், இளநிலை பொறியாளர் | 09.04.1990 | 23.06.1995 | 08.04.2005 பி.ப. | தகுதி பெற்றுள்ளார். |

மேற்படி பட்டியலில் இடம்பெற்றுள்ள 5 இளநிலை பொறியாளர் (மின்சாரம்) மீது இன்றைய நாளில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை மற்றும் இவர்களில் எவருக்கும் தண்டனை வழங்கப்பட்டு தண்டனை நிலுவையில் இல்லை என்றும், 5 ஆண்டு பணிமுடித்த உதவி பொறியாளர்கள் எவரும் இல்லை என்றும் கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) (பொ.) அவர்களால் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு கீழ்கண்ட 5 இளநிலை பொறியாளர்கள் முழுத்தகுதி பெறுகிறார்கள்:–

| வ எண் | பெயர் (திருவாளர்கள்) மற்றும் பதவி | சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள் | தற்போதுள்ள பதவியில் சேர்ந்த நாள் | தகுதி கால பணி முடித்த நாள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1. | ஆர். சங்கரன், இளநிலை பொறியாளர், மண்டலம்–5. | 23.12.1987 | 23.06.1995 | 22.12.2002 பி.ப. | பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | ஆர். ரவி,<br>இளநிலை<br>பொறியாளர்,<br>மின்துறை. | 05.07.1988 | 23.06.1995 | 04.07.2003<br>பி.ப. | பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |
| 3. | பி.பார்த்தசாரதி,<br>இளநிலை<br>பொறியாளர்,<br>மண்டலம்–9. | 27.11.1989 | 23.06.1995 | 26.11.2004<br>பி.ப. | பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |
| 4. | எஸ்.திருப்பதி,<br>இளநிலை<br>பொறியாளர்,<br>மண்டலம்–1. | 20.03.1990 | 23.06.1995 | 19.03.2005<br>பி.ப. | பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |
| 5. | டி. சௌந்தரராஜ்,<br>இளநிலை<br>பொறியாளர்,<br>மண்டலம்–5. | 09.04.1990 | 23.06.1995 | 08.04.2005<br>பி.ப. | பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர். |

மேற்காணும் பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து நபர்களும் பட்டய படிப்பு (மின்சாரம் மற்றும் மின்னணுவியல் பொறியியல்) தேர்ச்சி மற்றும் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் பொது பணித் தேர்வு பாகம்–1 மற்றும் 2 முழுவதுமாக தேர்ச்சி பெற்றுள்ளதால், இவர்களது பெயரினை பணிவிதிகளின்படி பரிசீலிக்கலாம்.

எனவே மேற்கூறியவைகளின் அடிப்படையில், பின்வரும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அ) உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வுக்கு, பின்வரும் 5 இளநிலை பொறியாளர்களின் (மின்சாரம்) பெயர்களை கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | இளநிலை பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1. | ஆர். சங்கரன்,<br>இளநிலை பொறியாளர்,<br>மண்டலம்–5. | 23.06.1995 |
| 2. | ஆர். ரவி,<br>இளநிலை பொறியாளர்,<br>மின்துறை. | 23.06.1995 |
| 3. | பி.பார்த்தசாரதி,<br>இளநிலை பொறியாளர்,<br>மண்டலம்–9. | 23.06.1995 |
| 4. | எஸ்.திருப்பதி,<br>இளநிலை பொறியாளர்,<br>மண்டலம்–1. | 23.06.1995 |
| 5. | டி. சௌந்தரராஜ்,<br>இளநிலை பொறியாளர்,<br>மண்டலம்–5. | 23.06.1995 |

ஆ) உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு ரூ.15600–39100+தர ஊதியம் 5400 என்ற ஊதிய விகிதத்தில் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வு அளித்திடவும்

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மி.து.ந.க.எண்.அ1/5679/2010**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.506/2014 பொருள் எண்.33

**மின்துறையில் தொழில்நுட்ப பதவிகள் ஒரு நபர் குழு பரிந்துரையின் அடிப்படையில் பயிற்சி திறனுள்ள உதவியாளர் (Skilled Assistant Grade - II) பதவி நியமனமுறையில் திருத்தம் செய்ய அனுமதி**

26.08.2010 நாளிட்ட அரசாணை எண்.338 நிதித்துறை(ஊதியக்குழு), நாள் 26.08.2010–ன்படி தொழில் நுட்ப பணியாளர்களின் ( I.T.I. சான்றிதழ் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில்) பதவிகளுக்கு 31.10.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண்.708/2013, நாள் 31.10.2013–ல் திருத்திய துணை விதிகள் கீழ்காணுமாறு நிறைவேற்றப்பட்டது.

**Revised the Bye-laws as per the G.O.Ms.No.338. Finance Dept. dt; 28.6.2010**

| Sl. No. | Present Designation and Scale of pay | Re-designated as and revised scale of pay | Method of Appointment | Educational Qualification | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | **Lighting Inspector**<br>Pre-revised scale of pay Rs.4000-6000<br>Existing Scale of pay Rs.5000-8000 | **Supervisor**<br>Rs.9300–34800+ 4200 GP | By promotion | 1) SSLC Passed with I.T.I Certificate in Electrical Trade- 2 years course<br>2) Minimum 2 Years of Experience as skilled Assistant Grade-I | – |
| 2. | **Electrician**<br>Pre-revised scale of pay Rs.4000-6000<br>Existing scale of pay Rs.5200-20200+2400 GP | **Skilled Assistant Grade-I**<br>Rs.5200-20200+2600 GP | By promotion | 1) SSLC Passed with I.T.I Certificate in Electrical Trade-2 years course<br>2)Minimum 2 Years of Experience as skilled Assistant Grade-II | – |
| 3. | **Wireman**<br>Pre-revised scale of pay Rs.3050-4590<br>Existing scale of pay Rs.5200-20200 + Grade pay Rs.1900 | **Skilled Assistant Grade-II**<br>Rs.5200-20200 + Grade pay 2000 | By direct recruitment | SSLC Passed with I.T.I Certificate in Electrical Trade- 2 years course | – |
| 4 | **1) Jointer**<br>(Non - I.T.I. – 2 Years course)<br>(Electrical Department)<br>**2)Assistant Jointer**<br>(Non-I.T.I. – 2 Years course)<br>(Electrical Department)<br>**3) Electrical Worker**<br>(Non - I.T.I. – 2 Years course)<br>(Electrical Department)<br>**4)Permanent Labour**<br>(Electrical Department ) | **Un Skilled**<br>**Rs.5200-20200+1900GP** | – | – | அரசாணை எண்.338 நிதித்துறை (ஊதியக்குழு) நாள்.26.08.10 ன் படி இப்பதவியில் தற்போது பணிபுரியும் பதவி உயர்வு பெற தகுதியற்ற, பணியிலிருந்து ஓய்வு மற்றும் இதர காரணங்களினால் காலிப் பணியிடம் ஏற்படும்பொழுது அவற்றை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **5) Labour** (Electrical Department ) **Pre-revised scale of pay** Rs.2750-4400 Rs.2650-4000 Rs.2610-3540 Rs.2550-3200 **Existing scale of pay** Rs.5200-20200+1800 GP Rs.4800-10000+1650 GP Rs.4800-10000+1400 GP Rs.4800-10000+1300 GP | | | | நிரப்பாமல் முடிவுக்கு கொண்டு வரப்படும். |

**31.10.2013** நாளிட்ட மன்றத்தீர்மானத்தில் அரசு ஆணை எண்.**338**, நிதித்துறை, நாள் **26.08.2010**–ன் படி நிறைவேற்றப்பட்டுள்ள தொழிற்நுட்ப பதவிகளுக்கு திருத்திய துணை விதிகளில் மேற்காண் பட்டியலில் வரிசை எண்.**3**ல் கண்டுள்ள பயிற்சி திறனுள்ள உதவியாளர் நிலை–**2** (Skilled Assistant Grade-II) பதவிக்கான நியமன முறை By direct recruitment என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.**338**, நிதித்துறை (ஊதியக்குழு) நாள் **26.08.2010**–ல் செயல் திறனற்றவர்(Unskilled)களை பாதுகாக்க வேண்டும் என்றும் அப்பதவியில் பணியாற்றுபவர்களின் காலி பணியிடம் ஏற்படும் போதெல்லாம் அவற்றை நிரப்பாமல் முடிவுக்கு கொண்டு வர வேண்டும், என்றும் வருங்காலத்தில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பயிற்சி திறனுள்ள உதவியாளர் நிலை–II (Skilled Asst. Grade II) S.S.L.C. Passed with I.T.I. சான்றிதழ் பெற்றவர்களை Entry level post-ல் நியமித்தல் வேண்டும் என்றும் அதனடிப்படையில் அனைத்து துறை/உள்ளாட்சி துறை தலைவர்கள் தற்பொழுதுள்ள பணி விதிகளில்ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டியிருப்பின் அந்த வேண்டுகோளை அந்தந்த தலைமைசெயலக துறைகள் மூலம் அரசுக்கு அனுப்ப வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது Unskilled பதவியில் S.S.L.C. Passed with I.T.I. சான்றிதழ் பெற்று பயிற்சி திறனுள்ள உதவியாளர் நிலை–II (Skilled Asst. Grade II) பதவிக்கு தகுதி பெற்றவர்கள் உள்ளனர். இது போன்ற தகுதிபெற்ற Unskilled பதவியில் உள்ளவர்களுக்கு அரசாணை எண்.**338**, நிதித்துறை (ஊதியக்குழு) நாள் **26.08.2010**–ல் செயல் திறனற்றவர்(Unskilled) களை பாதுகாக்க வேண்டும் என தெரிவித்துள்ளதின் அடிப்படையில் Skilled Asst. Grade II ஆக பதவி உயர்வு வழங்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சி மாமன்றத்தால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மன்றத்தீர்மானம் எண்.**708/2013**, நாள் **31.10.2013**–ல் தொழிற்நுட்ப பதவிகளுக்கு திருத்திய துணை விதிகளில் பயிற்சி திறனுள்ள உதவியாளர் நிலை–**2** (Skilled Assistant Grade-II) பதவிக்கான நியமன முறை By direct recruitment என்று உள்ளதினை By direct recruitment மற்றும் By Promotion என கீழ்காணுமாறு திருத்தம் (Amendment) வெளியிட மாமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

**31.10.2013** நாளிட்ட மன்றத்தீர்மானத்தில் அரசு ஆணை எண்.**338**, நிதித்துறை, நாள் **26.08.2010**–ன் படி நிறைவேற்றப்பட்டுள்ள தொழிற்நுட்ப பதவிகளுக்கு திருத்திய துணை விதிகளில் மேற்காண் பட்டியலில் வரிசை எண்.**4**ல் 1) **Jointer** (Non –I.T.I. – 2 Years course) 2) **Assistant Jointer** (Non –I.T.I. – 2 Years course) 3) **Electrical Worker** (Non –I.T.I. – 2 Years course) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு Non - I.T.I. – 2 Years course என்று தெரிவிக்கப்பட்டுள்ளதினால், இதனை தெளிவாக புரிந்து கொள்ள இயலாத நிலை உள்ளது.

எனவே, இதனை தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில், ஏற்கனவே சென்னை மாநகராட்சி மாமன்றத்தால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மன்றத்தீர்மானம் எண்.**708/2013**, நாள் **31.10.2013**–ல் தொழிற்நுட்ப பதவிகளுக்கு திருத்திய துணை விதிகளில் வரிசை எண்.**4**ல் 1) **Jointer -** Non ITI 2) **Assistant Jointer -** Non ITI 3) **Electrical Worker** Non ITI என திருத்தம் வெளியிட மாமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் கீழ்காணுமாறு திருத்தம் ( Amendment) வெளியிட மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| Sl. No. | Present Designation and Scale of pay | Re-designated as and revised scale of pay | Method of Appointment | Educational Qualification | Remarks |
|---|---|---|---|---|---|
| 3. | **Wireman**<br>Pre-revised scale of pay Rs.3050-4590<br>Existing scale of pay Rs.5200-20200 + Grade pay Rs.1900 | **Skilled Assistant Grade-II**<br>Rs.5200-20200 + Grade pay 2000 | **1) By Direct Recruitment**<br><br>2) **By Promotion** | SSLC Passed with I.T.I Certificate in Electrical Trade-2 years course<br>Approved Probationer in the lower cadre in Corporation of Chennai Service and possess the required Educational and Technical Qualification prescribed for direct Recruitment | –<br><br>– |
| 4 | **1) Jointer**<br>**Non ITI**<br>(Electrical Department)<br>**2)Assistant Jointer**<br>**Non ITI**<br>(Electrical Department)<br><br>**3) Electrical Worker**<br>**Non ITI**<br>(Electrical Department)<br>**4)Permanent Labour**<br>(Electrical Department )<br>**5) Labour**<br>(Electrical Department )<br>**Pre-revised scale of pay**<br>Rs.2750-4400<br>Rs.2650-4000<br>Rs.2610-3540<br>Rs.2550-3200<br>**Existing scale of pay**<br>Rs.5200-20200+1800 GP<br>Rs.4800-10000+1650 GP<br>Rs.4800-10000+1400 GP<br>Rs.4800-10000+1300 GP | **Un Skilled**<br>**Rs.5200-20200+1900GP** | – | – | அரசாணை எண்.338 நிதித்துறை (ஊதியக்குழு) நாள்.26.08.10ன் படி இப்பதவியில் தற்போது பணிபுரியும் பதவி உயர்வு பெற தகுதியற்ற, பணியிலிருந்து ஓய்வு மற்றும் இதர காரணங்களினால் காலிப்பணியிடம் ஏற்படும்பொழுது அவற்றை நிரப்பாமல் முடிவுக்கு கொண்டு வரப்படும். |

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1506/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.507/2014 **பொருள் எண்.34**

**மழைநிர் வடிகால் துறை – மண்டலம் 8, வார்டு 104ல் ஓசான் குளத்தின் உபரி நீரை கூவம் ஆற்றில் கொண்டு சேர்ப்பதற்கு ஓசான் குளம் முதல் புதிய பூபதி நகர் மெக்னிக்கல் சாலை, பச்சையப்பன் கல்லூரி விடுதி சாலை, பச்சையப்பன் கல்லூரி விடுதி மற்றும் வெங்கடாசலபதி தெரு வரை 900மிமீ க்கு 900மிமீ அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணி – பணி ஆணை வழங்கப்பட்டது – ஒப்பம் ரத்து செய்து – ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்த்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

மண்டலம்–8, வார்டு–104ல் ஓசான் குளத்தின் உபரி நீரை கூவம் ஆற்றில் கொண்டு சேர்ப்பதற்கு ஓசான் குளம் முதல் புதிய பூபதி நகர் மெக்னிக்கல் சாலை, பச்சையப்பன் கல்லூரி விடுதி சாலை, பச்சையப்பன் கல்லூரி விடுதி மற்றும் வெங்கடாசலபதி தெரு வரை 900மிமீ க்கு 900மிமீ அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணிக்காக திருவாளர்கள் ராஜேஷ் அண்டு கோ அவர்களுக்கு 2011 – 2012 ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி ரூ.2,18,31,080.24பை மதிப்பிற்கு மன்ற தீர்மான எண்.246/2012, நாள்.25.07.2012ன்படி ஒப்புதல் பெறப்பட்டு 30.07.2012 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

இதன்படி, இப்பணி 1475 மீட்டர் நீளத்தில் 411 மீட்டர் நீளம் ஒப்பந்ததாரரால் இப்பணிக்காலத்தில் முடிக்கப்பட்டதற்கு ரூ.50,54,601/–யினை ஒப்ப விதிகளின்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது.

மேற்கண்டவாறு இப்பட்டி வழங்கப்பட்ட பின்னர், ஒப்பந்ததாரர் இப்பணியினை தீடீரென நிறுத்தம் செய்தார். பின்னர், ஒப்பந்தாரர் பணியினை நிறுத்தியது மட்டுமல்லாமல் பணியிடத்தினை முழுமையாக கைவிட்டார். இதனை தொடர்ந்து காரணம் கேட்கும் குறிப்பாணைகள் 03.12.2013, 07.04.2014, 16.04.2014 மற்றும் 26.05.2014 ஆகிய தேதிகளில் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. நான்கு காரணம் கேட்கும் குறிப்பாணைகள் அனுப்பப்பட்ட பின்னரும் ஒப்பந்ததாரர் பணியினை தொடர எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை மற்றும் காரணம் கேட்டும் குறிப்பாணைகளுக்கும் ஒப்பந்ததாரரால் எவ்வித பதிலும் அளிக்கப்படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, ஒப்ப விதி 1–6–6, 1–6–7, 1–6–8 மற்றும் 1–6–9 ன்படி திருவாளர்கள் ராஜேஷ் அண்டு கோ அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்யவும், ஒப்பந்ததாரரை ஐந்து வருடத்திற்கு கருப்பு பட்டியலில் சேர்த்து மற்ற சென்னை மாநகராட்சியின் துறைகளுக்கும் தகவல் தெரிவிக்கவும் மற்றும் இப்பணிக்கு மறு ஒப்பம் கோரிய பிறகு ஏற்படும் அனைத்து செலவினங்களுக்கும் திருவாளர்கள் ராஜேஷ் அண்டு கோ அவர்களே பொறுப்பாவார் என முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

எனவே,

(1) மண்டலம் 8, வார்டு 104ல் ஓசான் குளத்தின் உபரி நீரை கூவம் ஆற்றில் கொண்டு சேர்ப்பதற்கு ஓசான் குளம் முதல் புதிய பூபதி நகர் மெக்னிக்கல் சாலை, பச்சையப்பன் கல்லூரி விடுதி சாலை, பச்சையப்பன் கல்லூரி விடுதி மற்றும் வெங்கடாசலபதி தெரு வரை 900மிமீ க்கு 900மிமீ அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணிக்கு திருவாளர்கள் ராஜேஷ் அண்டு கோ அவர்களுக்கு வழங்கப்பட்ட பணி ஆணையை ஒப்ப விதி 1–6–6, 1–6–7, 1–6–8 1–6–9ன்படி ரத்து செய்யவும்,

(2) திருவாளர்கள் ராஜேஷ் அண்டு கோ அவர்களை ஐந்து வருட காலத்திற்கு கருப்பு பட்டியலில் (Black listing) இணைத்ததற்கும் மற்றும் அனைத்து துறைகளுக்கும் தகவல் தெரிவித்ததற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

(3) இப்பணியின் மீதமுள்ள நீளத்திற்கு புதிய ஒப்பம் கோருவதற்கும், இதற்கான செலவினத்தினை ஒப்பந்ததாரர் பொறுப்பேற்பதற்கும்,

(4) இப்பணிக்கு மறு ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட (1) முதல் (4) வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.417/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.09.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.424/2014, நாள்.19.09.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.சு.து.ந.க.எண். சி1/ 5152/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.508/2014 **பொருள் எண்.35**

**மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு தகுதி வாய்ந்த நபர்களை கொண்டு சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர்கள் பணியிடங்களை நிரப்ப அனுமதி**

சென்னை மாநகராட்சி – பொது சுகாதாரத்துறையில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 94 ஆகும். இதில் 17மருத்துவ அலுவலர் காலிப் பணியிடங்கள் காலியாக உள்ளது. ஆரசாணை எண். 91, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 28.05.1998. மருத்துவ அலுவலர் பணி நியமனம் மற்றும் கல்வித்தகுதி பின்வருமாறு வரையறுக்கப்பட்டது.

| பதவியின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | நியமன முறை | கல்வித் தகுதி |
|---|---|---|
| மருத்துவ அலுவலர் 15600–39100 + 5400 தர ஊதியம் | நேரடி நியமனம் | 1) அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தில் M.B.B.S பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>2) தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருத்தல் வேண்டும் |

மேற்கண்ட பணி விதிகளின் படி 17 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பிட இன சுழற்சியினை பின்பற்றி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர்கள் பட்டியல் கோரப்பட்டு 81 பதிவுதாரர்கள் அடங்கிய பட்டியல் பெறப்பட்டது. பட்டியலில் கண்டுள்ள பதிவுதாரர்கள் 09.09.2014 அன்று காலை 10.00 மணிக்கு நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்க்கு வரும்படி பதிவு அஞ்சல் மூலம் அழைப்பு விடப்பட்டது. அவ்வாறு அழைப்பு விடப்பட்டதில் நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 09.09.2014 அன்று பின்வரும் 3 நபர்கள் மட்டும் கலந்துக்கொண்டனர்.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண். மற்றும் தேதி | கல்வித்தகுதி | பிறந்த தேதி மற்றும் இனம் |
|---|---|---|---|---|
| 1 | என். ராஜேஷ்கர்.<br>எண்.17, தேவகி அம்மாள் தெரு, வெட்ரி நகர், பெரவள்ளூர்,<br>சென்னை 600 082. | CHP2004M000020290<br>28.10.2004 | MBBS | 07.12.1977<br>SCGNP<br>வயது 37 |
| 2 | எஸ். சசிரேகா,<br>சிபுரோ மேபேர் அபார்ட்மென்ஸ், பி1, பிளாக், 52ஏ, எல்.ஐ.சி. காலணி, மெயின் ரோடு, டான்சி நகர், வேளச்சேரி,<br>சென்னை 600 042. | CHP2002F00008050<br>13.06.2002 | MBBS | 13.08.1968<br>BCFNP<br>வயது 46 |
| 3 | கே. சுலக்ஷனா,<br>20/19, பழனியம்மன் கோயில் தெற்கு, 5வது தெரு, திருவல்லிக்கேணி,<br>சென்னை 600 005. | CHP2012F00044042<br>26.07.2008 | MBBS | 24.09.1983<br>GTFNP<br>வயது 31 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி 09.09.2014 அன்று நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு கலந்துக்கொண்ட நபர்களில் பின்வரும் இனசுழற்சியை பின்பற்றி மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்யப்படவேண்டும்.

| வ. எண். | இனம் | கோரப்பட்ட இனசுழற்சி எண்ணிக்கை | பெறப்பட்ட இனசுழற்சி எண்ணிக்கை | நேர்காணலில் கலந்துகொண் டவர்களில் இனசுழற்சி எண்ணிக்கை | தேர்வு செய்யப்பட வேண்டிய இனசுழற்சி |
|---|---|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர் (பெண்கள்) (முன்னுரிமையற்றவர்) | 2 | 10 | – | – |
| 2 | ஆதி திராவிடர் (முன்னுரிமை பெற்றவர்) | 1 | 2 | – | – |
| 3 | ஆதிதிராவிடர் (முன்னுரிமையற்றவர்) | 1 | 5 | 1 | SCGNP |
| 4 | மிகவும்பிற்படுத்தப்பட்டோர் (பெண்கள்) (முன்னுரிமையற்றவர்) | 2 | 10 | – | - |
| 5 | மிகவும்பிற்படுத்தப்பட்டோர் (முன்னுரிமை பெற்றவர்) | 2 | 10 | – | - |
| 6 | பிற்படுத்தப்பட்டோர் (பெண்கள்) (முன்னுரிமையற்றவர்) | 1 | 5 | 1 | BCFNP |
| 7 | பிற்படுத்தப்பட்டோர் முன்னுரிமை பெற்றவர்) | 1 | 4 | – | - |
| 8 | பிற்படுத்தப்பட்டோர் (முன்னுரிமை யற்றவர்) | 2 | 10 | – | - |
| 9 | பொதுபோட்டி (பெண்கள்) (முன்னுரிமையற்றவர்) | 2 | 10 | 1 | GTFNP |
| 10 | பொதுபோட்டி (முன்னுரிமை பெற்றவர்) | 1 | 5 | – | - |
| 11 | பொதுபோட்டி (முன்னுரிமையற்றவர்) | 2 | 10 | – | - |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு இனசுழற்சி முறையில் மருத்துவ அலுவலராக தேர்வு செய்யப்படவேண்டிய நபர்களுக்கு இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.15,600 – 39,100 + 5,400 தர ஊதியம் மற்றும் இதர படிகளுடன் வழங்கப்படவேண்டும்.

இனசுழற்சி முறையை பயன்படுத்தி மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்யப்படவேண்டிய நபர்களின் பட்டியல் பின்வருமாறு :

| வ.எண். | இனசுழற்சி எண் | பெயர் மற்றும் முகவரி | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண் மற்றும் தேதி | கல்வித் தகுதி | பிறந்த தேதி வயது மற்றும் இனம் |
|---|---|---|---|---|---|
| 1 | 22 | என். ராஜேஷ்கர். எண்.17, தேவகி அம்மாள் தெரு, வெற்றி நகர், பெரவள்ளூர், சென்னை 600 082. | CHP2004M000020290 28.10.2004 | MBBS | 07.12.1977 SCGNP வயது 37 |
| 2 | 18 | எஸ். சசிரேகா, சிபுரோ மேபேர் அபார்ட்மென்ஸ், பி1, பிளாக், 52ஏ, எல்.ஐ.சி. காலணி, மெயின் ரோடு, டான்சி நகர், வேளச்சேரி, சென்னை 600 042. | CHP2002F00008050 13.06.2002 | MBBS | 13.08.1968 BCFNP வயது 46 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 19 | கே. சுலக்ஷனா, 20/19, பழனியம்மன் கோயில் தெற்கு, 5வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005. | CHP2012F00044042 26.07.2008 | MBBS | 24.09.1983 GTFNP வயது 31 |

எனினும் மேற்படி வரிசை எண். 3ல் இடம் பெற்றுள்ள டாக்டர் கே. சுலக்ஷனாஅவர்கள் சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்ய நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துக்கொண்டு அதில் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்ய மாவட்ட குடும்ப நலத்துறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. என்பதால், அன்னாரின் பெயரை பரிந்துரை செய்ய இயலாது.

எனவே, நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துக்கொண்ட வரிசை எண். 1ல் இடம் பெற்றுள்ள டாக்டர். என். ராஜேஷ்கர் மற்றும் வரிசை எண். 2ல் இடம் பெற்றுள்ள டாக்டர்.எஸ். சசிரேகா ஆகிய இருவர் மட்டும் இனசுழற்சி முறையில் தேர்வு செய்து இவர்கள் பணி நியமன வயது வரம்பை கடந்துள்ளதால் வயது வரம்பு தளர்வாணை அரசிடம் பெறவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ரூ.15600–39100+5400 தர ஊதியம் என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமன ஆணை வழங்கிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.இ6/37000/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.509/2014 **பொருள் எண்.36**

**வகுப்பு 3 மற்றும் 4 சார்நிலைப் பணியாளர்களுக்கான பணி நியமன விதிகள் 2009 – இளநிலை உதவியாளர் பதவிக்கு நியமன முறையில் சில திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி**

சென்னை மாநகராட்சியில் இளநிலை உதவியாளர் பதவியினை நிரப்பும் நிகழ்வில் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் மற்றும் நியமன முறை திருத்தப்பட்ட வரைவு துணை விதிகள் 2009ல் கீழ்காணும் வகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவி | நியமன முறை | கல்வித் தகுதி | ஊதிய விகிதம் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | இளநிலை உதவியாளர் | 1. அனைத்து கீழ் வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு மூலம், தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும்.<br>2. கீழ்நிலைப் பதவியில் 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும்.<br>3.பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிநியமனம் செய்யப்பட்ட பதவியில் 3 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்.<br>4. நேரடி நியமனம் மூலமாக வேலை வாய்ப்பகத்தால் பரிந்துரைக்கப்பட்ட பட்டதாரிகள்<br>5.கருணை அடிப்படையில் பணிநியமனம்,(பணிக்காலத்தில் காலஞ்சென்ற மாநகராட்சிப் பணியாளரின் சட்டபூர்வ வாரிசுதாரர்கள் (பட்டதாரிகள் மட்டுமே பணி நியமனத்திற்குத் தகுதியானவர்கள்) | குறைந்தபட்ச பொது கல்வி தகுதி | ரூ.5200– 20200+ நிலை ஊதியம் ரூ.2400<br><br>நிர்ணய நாள் ஒவ்வொர் ஆண்டும் ஆகஸ்ட் 1ம் நாள் | 1. இளநிலை உதவியாளர்கள், தொலைபேசி இயக்குபவர் பொதுவான பணி வகையினை சேர்ந்தவர்களாக கருதப்பட வேண்டும் (Common category Inter changeable Post)<br><br>2. பதவி உயர்வுக்கு ஊட்டப் பதவியின் முதுநிலையின் அடிப்படையில் பணிமூப்பு உறுதியிடப்படும்.<br><br>**3. பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாசாரம்1:1** |

சென்னை மாநகராட்சி வரைவு துணை விதியில் நேரடி நியமனத்திற்கான கல்வித்தகுதி, இளநிலை உதவியாளர் பதவிக்கும் மற்றும் உதவியாளர் பதவிக்கும் பட்டப்படிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் 2014–2015 பட்டியலாண்டில் காலியாக உள்ள 100 உதவியாளர் காலிபணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், அதே கல்வித்தகுதியுடைவர்களை நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கும் நிரப்பினால் நிர்வாக வழிமுறையில் முரண்பாடு ஏற்படும் நிலை உள்ளது.

மேலும் அரசுக் கடித எண். 97630/93–10 பணியாளர் துறை நாள் 29.08.1994ன்படி கருணையடிப்படையில் பணி நியமனம் கோரி காத்திருப்போர் இருக்கும் நிலையில் காலி பணியிடம் நிரப்புவதற்காக தேர்வாணையத்திற்கு மதிப்பீடு பட்டியல் அனுப்பக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012–2013ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்காக வெளியிடப்பட்ட 61 பணியாளர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலில் 54 பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கிய நிலையில், எதிர்பார்க்கும் காலிப்பணியிடம் (5% Reserve Vacancy) ஏதும் ஏற்படாததால் வ.எண்.55 முதல் 61 வரை உள்ள 7பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்க இயலவில்லை. இதற்கிடையே சிறப்பு நிகழ்வாக நியமனக்குழு அனுமதியுடன் 2013–2014ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதில் பணி நியமனத்தின் போது பட்டதாரி கல்வி தேர்ச்சியுடன் கருணை அடிப்படையில் கீழ்நிலைப்பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு முன்னுரிமை அளித்து, அதற்கடுத்து மூன்று ஆண்டுகள் பணி முடித்த பட்டதாரி கீழ்நிலை பணியாளர் மற்றும் அதை தொடர்ந்து 5 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி அல்லாத கீழ்நிலை பணியாளர்கள் என நிர்ணயித்து சுற்றுக்கு விடப்பட்டது.

இந்நிலையில் 2012–2013ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான இறுதி தெரிவுப்பட்டியலில் பெயர் இடம் பெற்றிருந்தும் பதவி உயர்வு கிடைக்கப் பெறாத திருமதி.என்.தனலட்சுமி, துப்புரவு பணியாளர், மண்டலம்–6 மற்றும் திரு.எம்.பெருமாள், சாலைப்பணியாளர், மண்டலம்–5 ஆகிய இரண்டு பணியாளர்கள் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்க கோரி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் 2013–2014ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களை நிரப்பிட மேல் நடவடிக்கை ஏதும் தொடர இயலாதபடி Status quo பிறப்பிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 2013–2014ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை ஏதும் தொடர இயலாத நிலையில், பட்டியலாண்டு முடிவடைந்துள்ளது.

மேலும் மேற்படி இரண்டு பணியாளர்கள் தொடர்ந்த வழக்கின் மீது சென்னை உயர்நீதிமன்றம் கீழ்வருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

i) It is declared that the approved panel for the year 2012-2013 should be operated until 10.06.2014 and the actual vacancies which arose as against the estimated vacancies before 10.06.2014 shall be filled up by operating the panel for the year 2012-2013.
ii) If the petitioners fall within the zone from out of the panel for the year 2012-2013 as against the above vacancies, they shall be promoted as Junior Assistants.
iii) It is further directed that a consequential order shall be passed by the respondent within a period of two months from the date of receipt of a copy of this order.
iv) It is directed that the respondent shall endeavor to put in place a by-law relating to the appointments and service conditions of Class-III and Class-IV employees of the Corporation of Chennai after getting necessary sanction from the Government as required under the Chennai City Municipal Corporation Act, without any further delay.

கருணை அடிப்படையிலான பணிநியமனத்தை நேரடி நியமனமாக கருதி கருணை அடிப்படையில் பணிநியமனத்தின்போது பட்டதாரி கல்வித்தகுதியுடன் கீழ்நிலையில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் எண்ணிக்கை தற்போது சுமார் 60 நபர்கள் உள்ளதால் நேரடி நியமனத்திற்கான ஒதுக்கீட்டில் மேற்கண்ட கருணை அடிப்படையில் பட்டதாரி கல்வித் தகுதியுடன் பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்நிலை பணியாளர்களை கொண்டு இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்பியது போக எஞ்சியுள்ள காலிப்பணியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் தற்போது பட்டதாரி கல்வித் தகுதியுடன் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, கீழ்நிலைப் பதவிகளில் பணிபுரிந்து வரும் அனைத்து பணியாளர்களுக்கும் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்கி, வருங்காலத்தில் பட்டதாரி கல்வித்தகுதியுடைய வாரிசுதாரர்களை கருணை அடிப்படையில் நேரடியாக இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்யலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் தற்போது இளநிலை உதவியாளர் பதவிக்கான பணி நியமன விதிகளில் கீழ்கண்டவாறு திருத்தம் மேற்கொள்ளலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>இளநிலை உதவியாளர் பதவிக்கான பணி நியமன விதிகளில் கீழ்வருமாறு திருத்தம் மேற்கொள்வது:</u>**

| வ. எண். | பதவி | நியமன முறை | கல்வித் தகுதி | ஊதிய விகிதம் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | இளநிலை உதவியாளர் | **1.** அனைத்து கீழ் வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு மூலம், தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும்.<br><br>i. கீழ்நிலைப் பதவிகளில் 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும். | குறைந்தபட்ச பொது கல்வி தகுதி | ரூ.5200 – 20200 + நிலை ஊதியம் ரூ.2400 | **1.** இளநிலை உதவியாளர்கள், தொலைபேசி இயக்குபவர் பொதுவான பணிவகையினை சேர்ந்தவர்களாக கருதப்பட வேண்டும் (Common category / Inter changeable Post) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ii. பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிநியமனம் செய்யப்பட்ட பதவியில் 3 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும். (பட்டதாரி மற்றும் பட்டதாரி அல்லாதோர் 1:1 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு வழங்கப்படும்.)<br><br>2. நேரடி நியமனம் | <br><br><br><br>பட்டப்படிப்பில் தேர்ச்சி (10–+2–UG) | நிர்ணய நாள் ஒவ்வொர் ஆண்டும் ஆகஸ்ட் 1ம் நாள் | 2. பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகித்தாச்சாரம் 1:1<br><br>3.நேரடி நியமன ஒதுக்கீட்டில் 50% விழுக்காட்டினை கருணை அடிப்படையில் பணி நியமனத்தின் போது பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றுள்ள வாரிசுதாரர்கள் பணி நியமனம்<br><br>4. பட்டியலாண்டில் நிரப்பப்படாமல் நிலுவையில் உள்ள காலிப் பணியிடங்களை அடுத்த ஆண்டிற்கான உரிய ஒதுக்கீட்டிற்கு முன் கொணரப்பட வேண்டும். |

மேலும், 2012–2013ஆம் ஆண்டிற்கான நேரடி நியமன ஒதுக்கீட்டான 54 பணியிடங்களில், 2012–2013ஆம் ஆண்டிற்கான இறுதி தெரிவுப்பட்டியலில் வ.எண். 55 முதல் 61 வரை உள்ள 7 பணியாளர்களுக்கு உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நியமனக்குழுவின் பின்னேற்புக்கு உட்பட்டு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணி நியமன துணை விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக இந்த ஒரு முறை மட்டும் சிறப்பு நிகழ்வாக மீதமுள்ள 2012–2013ஆம் ஆண்டிற்கான நேரடி நியமன ஒதுக்கீட்டான 47 பணியிடங்கள் மற்றும் தற்போதுள்ள 2014–2015ஆம் பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் 50 விழுக்காட்டினை மேற்கண்ட 47 பணியிடங்களுடன் சேர்த்து கருணை அடிப்படையில் பட்டதாரி கல்வித்தகுதியுடன் பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்நிலைப் பணியாளர்களை கொண்டு நிரப்பியது போக எஞ்சியுள்ள பணியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பலாம் எனவும், மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கான பணியிடங்களை பதவி உயர்வு ஒதுக்கீடு மூலம் நிரப்பலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் கீழ்கண்ட இனங்களின் மீது நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. இளநிலை உதவியாளர் பதவிக்கான நியமன முறையில் திருத்தம் மேற்கொண்டு சார்நிலை பணியாளர்களுக்கான பணி நியமன விதிகள் 2009க்கான திருத்தத்திற்கும்,
2. இம்முறை மட்டும் சிறப்பு நிகழ்வாக 2012–2013ஆம் ஆண்டிற்கான நேரடி நியமன ஒதுக்கீட்டான 47 பணியிடங்களுடன் தற்போது 2014–2015ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் 50 விழுக்காட்டினை சேர்த்து கருணை அடிப்படையில் பட்டதாரி கல்வித்தகுதியுடன் கீழ்நிலைப் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களை நிரப்பியது போக எஞ்சியுள்ள பணியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பவும், மீதமுள்ள 50 விழுக்காடு காலிப்பணியிடங்களை கீழ்நிலை பதவிகளிலிருந்து பதவி உயர்வு மூலம் நிரப்பவும்.

"இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>இ.டி.பி.சி.எண்.சி1/1901/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24–9–2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.510/2014 **பொருள் எண்.37**

**<u>சென்னை மாநகராட்சி – அழைப்பு மையங்களுக்கான ஆள்வலிமை – சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலை வாய்ப்பு திட்டத்தில் பதிவு செய்து உள்ள அண்டை வீட்டுக் குழுக்கள் / மகளீர் சுய குழுக்களை அழைப்பு மையங்களுக்கான ஆள்வலிமை (Call Center) பணியில் ஈடுபடுத்திகொள்ளஅரசின் ஒப்புதல் பெறுவது -அனுமதி</u>**

முதன்மை செயலாளர்/ஆணையர் சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை பெற்று அதற்கான ஒப்பந்தம் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.34,07,846/–அளித்த திருவாளர் சன் கம்யூட்டர்ஸ் அவர்களுக்கு ஆணை வழங்கப்பட்டு 1913 புகார் பிரிவு இயங்கி வருகின்றது. சென்னை மாநகராட்சி புகார் பிரிவு 24 மணி நேரம் செயல்படும் சேவை மையம் ஆகும் இம்மையத்தில் தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஊழியர்கள் இணைந்து பொது மக்களிடமிருந்து தொலைபேசி மூலம் (1913) பெறப்படும் புகார்களை பதிவு செய்து சம்மந்தப்பட்ட மண்டலங்களுக்கு தெரிவித்து குறைகளை நீக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேற்கண்ட பணிகள் மூன்று ஷிப்ட் முறையில் செயல்பட்டு வருகிறது.

புகார் பிரிவு 24 மணி நேரமும் பொது மக்களுக்கான சேவையை எவ்வித இடர்பாடுமின்றி தொடர்ந்து செயல்புரிய ரிப்பன் கட்டிடம், மற்றும் 15 மண்டலங்களில் 15 ஆள்வலிமையுடன் பணிபுரிய திறந்த ஒப்பந்தம் அழைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தப்புள்ளியில் ஆறு நிறுவனங்கள் பங்கேற்றன.

இந்த ஒப்பந்தம் ஒப்பம் பரிசீலிக்கும் குழுமத்திற்கு பரிந்துரைக்காக வைக்கப்பட்டுள்ளது. ஒப்பம் இறுதி செய்யப்படாததால் மூன்று மாத காலத்திற்கு ‘limited tender’ மூலம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

24X7 என்ற அடிப்படையில் பணிபுரிய கீழ்க்கண்டவாறு ஆள்வலிமை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. ரிப்பன் கட்டிடத்தில் ஆறு பணியாளர்கள் இரு சுழற்சியில் (காலை 6 மணி முதல் பகல் 2 மணி முதல் இரவு 10 மணி), நான்கு பணியாளர்கள் பொது பணி நேரமான காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மற்றும் 4 பணியாளர்கள் இரவு நேரத்தில் (இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை) பணிபுரிதல் வேண்டும்.
2. ரிப்பன் கட்டிடத்தில் மூன்று குழு தலைவர் (ஒரு பணியாளர் ஒரு சுழற்சி) 3 சுழற்சி முறையில் தினசரி அடிப்படையில் (365 நாட்களுக்கும்) பணி புரிய வேண்டும்.
3. 15 மண்டல அலுவலகங்களில் 15 பணியாளர்கள் பணி நேரத்தில் (காலை 10 மணி முதல் மாலை 6 மணி) பணி புரிய வேண்டும்.

**பணியாளர்களின் கல்வி தகுதி பணி விவரம் வருமாறு:–**

1. அழைப்பு மையத்தில் பணிபுரியும் பணியாளர் குறைந்தபட்ச கல்வி தகுதி பட்டய படிப்பு மற்றும் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் தட்டச்சு திறமை, ஆங்கிலம், தமிழ் மேலும் ஒரு மொழியில் பேச்சாற்றல் பெற்றிருக்க வேண்டும்.
2. வன்பொருள் அதாவது கணினி, பதிவு செய்யும் இயந்திரம் போன்றவற்றை கையாளுதல் வேண்டும்.

அழைப்பு மையங்களில் பணிபுரிவோருக்கு புரியும் தன்மை வரும் அழைப்புகளை கையாளுதல், இவற்றோடு விபரங்களை தயாரிக்கும் திறனும் இருப்பது நல்லது. குழு தலைவர் அழைப்பு மையங்களில் பணிபுரிவோரை கண்காணிப்பதோடு தேவையான MIS விபரங்களை தயாரிக்கும் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையர், மற்ற உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கும் திறன் வேண்டும். மேலும் பல நாட்களுக்கான MIS விபரங்களையும் தயாரித்தல் வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தில் கோரப்பட்ட பணிகள் செய்ய மத்திய, மாநில அரசு பங்களிப்புடன் சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலை வாய்ப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள அன்டை வீட்டுக் குழுக்கள் (Neighbour Hood Groups – NHGs) / மகளீர் சுய உதவி குழுக்கள் (Self Help Groups – SHGs) மூலம் தகுதியுள்ள குழு உறுப்பினர்களை கொண்டு மேற்கண்ட பணியை வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், உழைக்கும் மக்களுக்கு முழுமையான ஊதியம் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்குடன் அறிவுறுத்தியுள்ளார்கள் இதன் மூலம் நகர்ப்புற ஏழை

மக்களின் வாழ்கை தரம் உயர வாய்ப்புள்ளது. எனவே, மேற்கண்ட இத்திட்டத்தின் மூலம், இந்தப் பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரங்கள் அடிப்படையில் அழைப்பு மையங்களுக்கான ஆள்வலிமை (Call Center) பணியில் அரசின்அனுமதி வேண்டியும், இந்தப்பணியின் மொத்த செலவு தோராயமாக ரூ.55.80 இலட்சங்களாக உள்ளதால், சுவர்ண ஜெயந்தி சுய வேலை வாய்ப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள அன்டை வீட்டுக் குழுக்கள் (Neighbour Hood Groups – NHGs) / மகளீர் சுய உதவி குழுக்கள் (Self Help Groups – SHGs) மூலம், தகுதியுள்ள குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தி கொள்ளவும் மற்றும் தமிழ் நாடு ஒப்பந்த விதிகளில் தளர்வு செய்ய வழிவகை செய்வது குறித்தும், முதன்மை செயலர் அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA&WS) துறைஅனுமதி பெறவும் .

1) சுவர்ண ஜெயந்தி சுய வேலை வாய்ப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள அன்டை வீட்டுக் குழுக்கள் (Neighbour Hood Groups – NHGs) / மகளீர் சுய உதவி குழுக்கள் (Self Help Groups – SHGs) மூலம், தகுதியுள்ள குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தி கொள்ளவும் மற்றும் தமிழ் நாடு ஒப்பந்த விதிகளில் தளர்வு செய்ய வழிவகை செய்வது குறித்தும்.
2) முதன்மை செயலர் அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA&WS) துறை அனுமதி பெறவும்

எனவே, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.423/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.430/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''சுவர்ண ஜெயந்தி சுய வேலை வாய்ப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள அண்டை வீட்டுக் குழுக்கள் ( Neighbour Hood Groups - NHGs ) / மகளிர் சுய உதவிக்குழுக்கள் (Self Help Groups - SHGs ) மூலம் தகுதியுள்ள குழு உறுப்பினர்களை ஈடுபடுத்திக் கொள்ள இந்த மன்றம் முடிவு செய்கின்றது. இதற்கு அனுமதி வழங்கவும், தேவைப்படும் விதிகளில் தளர்வு செய்யவும் அரசின் அனுமதி வேண்டியும் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.''

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ1/19852/2012</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.511/2014 **பொருள் எண்.38**

**<u>உயர்நீதி மன்ற உத்தரவின் அடிப்படையில் திரு.ஆர்.பாலசுப்ரமணியன், உதவி செயற்பொறியாளர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு தனியருக்கு 2012–2013ம் ஆண்டின் செயற்பொறியாளர் பதவியில் தனியரின் பெயரை சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கி திருத்திய தெரிவு பட்டியல் வெளியிட்டதற்கு பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் பள்ளிக்கட்டடங்கள் கட்டுவதில் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவற்றிக்கு பொறுப்பாக்கி சம்மந்தப்பட்ட உதவி/இளநிலை பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையினரால் பரிந்துரைக்கப்பட்டது. அதில் திரு.ஆர்.பாலசுப்பரமணியன், உதவி செயற்பொறியாளர் அவர்களும் சம்மந்தப்பட்டிருந்ததால் அன்னார் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு, மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970, துணை விதி எண். 10 (b)ன் கீழ் 21.12.2012 குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டது.

2012–2013ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கு மூப்புபட்டியல் தயாரிக்கும் நிலையில் திரு.ஆர்.பாலசுப்பரமணியன், உதவி செயற்பொறியாளர் மீது துணை விதி 10(b)ன் கீழ் நிலுவையிலிருந்ததால் அன்னாரின் பெயரை அப்பட்டியலிலிருந்து 27.12.2012 நாளிட்ட மன்றத் தீர்மானத்தின்படி நீக்கம்செய்யப்பட்டது.

இதற்கிடையில் தனியர் தனக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.27894/2013வழக்கு தொடர்ந்துள்ளதன்பேரில் தனியர் தொடுத்துள்ள வழக்கில் நீதிமன்றம் 07.02.2014 நாளிட்ட உத்தரவில்“ **Further pursuant to the directions given by this Court, the buildings in question were inspected by the Superintending Engineer, Buildings Department on 17.10.2013 and a status report about the status and condition of the buildings and filed before this Court and the said report would show that the buildings in question are in sound condition.**

**Hence, for the foregoing reasons, I am of the opinion that the impugned charge memos dated:21.12.2012 issued against the petitioners are liable to be quashed and accordingly, quashed and all the writ petitions are allowed. No costs. Consequently, connected miscellaneous petitions are closed”.** என உத்தரவிட்டுள்ளது.

தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை நீதிமன்ற உத்தரவின்படி கைவிடுவதற்கும் இறுதியாணை வழங்குவதற்கும் அரசின் ஆணைக்காக அனுப்பப்பட்டது.

இதற்கிடையில் தனியர் நீதிபேராணை எண்.32109/2014ல் நீதிமன்றம் ஏற்கனவே குற்றச்சாட்டுகளை தள்ளுபடி செய்ததால் தனது பெயரை 2012–2013ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்குரிய தெரிவுப்பட்டியலில் சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கும்படி மீண்டும் வழக்கு தொடர்ந்தார். அவ்வழக்கில் 23.06.2014 **“….it is an admitted case of the petitioners that the charge memo have already been quashed by this Court and in that event, the name of the petitioners will have to be considered and included in their original position and they are entitled to all the benefits. Taking note of the totality of the circumstances, this Court while allowing the writ petition, directs the respondent to consider the case of the petitioners for promotion and to place them in their original position and include their names, in the panel if, otherwise they are eligible for promotion and give them all the monetary and consequential benefits, which they are entitled to, within a period of four weeks from the date of receipt of a copy of this order. However, there will be no order as to costs.”** என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய நான்கு வார காலக்கெடு 24.07.2014 அன்றுடன் முடிவடைவதால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு திரு.ஆர்.பாலசுப்பரமணியன், உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு கருத்தியலாக செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்படவேண்டும். எனவே, 27.12.2012 நாளிட்ட மன்ற தீர்மான எண்.592/2012ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 2012–13ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் **வரிசை எண்.14ல் உள்ள திரு.எஸ்.நடராஜன் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.15ல் உள்ள திரு.ப்பி.ராஜேந்திரன் அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.14Aல்** மூப்புநிலை நிர்ணயம் செய்து திரு.ஆர்.பாலசுப்பரமணியன், உதவி செயற் பொறியாளர் அவர்களின் உடனடி இளையவர் (Immediate Junior) திரு.ப்பி.ராஜேந்திரன் அவர்கள், செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று, செயற்பொறியாளராக பணியேற்ற நாள் முதல், முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(S) துறை நாள் 18.10.1993ல் தெரிவித்துள்ளவாறு **ரூ.15600 – 39100 + 6600 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் செயற்பொறியாளராக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கி,** தனியர் செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பயன்கள் வழங்க 25.07.2014 செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு தனியர் 30.07.2014 அன்று செயற்பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே, திரு.ஆர்.பாலசுப்பரமணியன் அவர்களுக்கு செயற் பொறியாளர் பதவியில் கருத்தியலான(Notional Promotion) பதவி உயர்வு வழங்கியமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/18898 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.512/2014 **பொருள் எண்.39**

**உயர்நீதி மன்ற உத்தரவின் அடிப்படையில் திரு.திரு.எ.நாச்சான் மற்றும் திரு.எஸ்.ரவிசந்திரன், உதவி செயற்பொறியாளர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு தனியருக்கு 2013–2014ம் ஆண்டின் செயற்பொறியாளர் பதவியில் தனியரின் பெயரை சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கி திருத்திய தெரிவு பட்டியல் வெளியிட்டதற்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் பள்ளிக்கட்டடங்கள் கட்டுவதில் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவற்றிக்கு பொறுப்பாக்கி சம்மந்தப்பட்ட உதவி/இளநிலை பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையினரால் பரிந்துரைக்கப்பட்டது. அதில் திரு.எ.நாச்சான் மற்றும் திரு.எஸ்.ரவிச்சந்திரன், ஆகிய உதவி செயற்பொறியாளர்கள் சம்மந்தப்பட்டிருந்ததால் தனியர்கள் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு, மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970, துணை விதி எண். 10 (b)ன் கீழ் 21.12.2012ல் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டது.

2013–2014ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கு மூப்புபட்டியல் தயாரிக்கும் நிலையில் திரு.எ.நாச்சான் மற்றும் திரு.எஸ்.ரவிச்சந்திரன், ஆகிய உதவி செயற்பொறியாளர்கள் மீது துணை விதி 10(b)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருந்ததால் தனியர்களின் பெயர்களை அப்பட்டியலிலிருந்து 22.05.2013 நாளிட்ட மன்றத் தீர்மானத்தின்படி நீக்கம்செய்யப்பட்டது.

இதற்கிடையில் தனியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைகளை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.27895/13 மற்றும் W.P.No.27892/13ன்படி வழக்கு தொடர்ந்துள்ளதின்பேரில் தனியர்கள் தொடுத்துள்ள வழக்கில் நீதிமன்றம் 07.02.2014 நாளிட்ட உத்தரவில் **“ Further pursuant to the directions given by this Court, the buildings in question were inspected by the Superintending Engineer, Buildings Department on 17.10.2013 and a status report about the status and condition of the buildings and filed before this Court and the said report would show that the buildings in question are in sound condition.**

**Hence, for the foregoing reasons, I am of the opinion that the impugned charge memos dated:21.12.2012 issued against the petitioners are liable to be quashed and accordingly, quashed and all the writ petitioners are allowed. No costs. Consequently, connected miscellaneous petitions are closed”.** என வழங்கியுள்ளது.

தனியர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை நீதிமன்ற உத்தரவின்படி கைவிடுவதற்கும் இறுதியாணை வழங்குவதற்கும் அரசின் ஆணைக்காக அனுப்பப்பட்டது.

இதற்கிடையில் தனியர்கள் நீதிபேராணை எண்.32109/2014ல் நீதிமன்றம் ஏற்கனவே குற்றச்சாட்டுகளை தள்ளுபடி செய்ததால் தங்களது பெயர்களை 2013–2014ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்குரிய தெரிவுப்பட்டியலில் சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கும்படி மீண்டும் வழக்கு தொடர்ந்திருந்தார்கள். அவ்வழக்கில் 23.06.2014நீதிமன்ற ஆணையின்படி **“.it is an admitted case of the petitioners that the charge memo have already been quashed by this Court and in that event, the name of the petitioners will have to be considered and included in their original position and they are entitled to all the benefits. Taking note of the totality of the circumstances, this Court while allowing the writ petition, directs the respondent to consider the case of the petitioners for promotion and to place them in their original position and include their names, in the panel if, otherwise they are eligible for promotion and give them all the monetary and consequential benefits, which they are entitled to, within a period of four weeks from the date of receipt of a copy of this order. However, there will be no order as to costs.”** என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

எனவே, திரு.எ.நாச்சான், உதவி செயற்பொறியாளர் அவர்களின் பெயர் 2013–2014ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் **வரிசை எண்.6ல் உள்ள திரு..ஆர்.செந்தில்நாதன் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.7ல் உள்ள திரு.கே.உமாபதி அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.6A** என மூப்புநிலை நிர்ணயம் செய்தும் மற்றும் திரு.எஸ்.ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர், அவர்களின் பெயர் **வரிசை எண்.6Aல் உள்ள திரு..எ.நாச்சான் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.7ல் உள்ள திரு.கே.உமாபதி அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.6B** என மூப்புநிலை நிர்ணயம் செய்து திரு.எ.நாச்சான், உதவி செயற்பொறியாளர் மற்றும் திரு.எஸ்.ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் ஆகியோர்களின் உடனடி இளையவர் (Immediate Junior) திரு.கே.உமாபதி அவர்கள், செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று, செயற்பொறியாளராக பணியேற்ற நாள் முதல், முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(S) துறை நாள் **18.10.1993**ல் தெரிவித்துள்ளவாறு **ரூ.15600 – 39100 + 6600 தர ஊதியம்** என்ற ஊதிய விகிதத்தில் செயற்பொறியாளராக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு கீழ்கண்டவாறு வழங்கி, தனியர்கள் செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பயன்கள் வழங்க **25.07.2013** நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு தனியர்கள் **30.07.2014** அன்று செயற்பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே, திரு.எ.நாச்சான் மற்றும் திரு.எஸ்.ரவிச்சந்திரன் ஆகியவர்களுக்கு செயற் பொறியாளர் பதவியில் கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கியமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/38341/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.513/2014 **பொருள் எண்.40**

**உயர்நீதி மன்ற உத்தரவின் அடிப்படையில் திரு.ஆர்.ராமசந்திரன், நா.முருகவேல் உதவி பொறியாளர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு தனியருக்கு 2012–2013ம் ஆண்டின் உதவி செயற்பொறியாளர் பதவியில் தனியரின் பெயரை சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கி திருத்திய தெரிவு பட்டியல் வெளியிட்டதற்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் பள்ளிக்கட்டடங்கள் கட்டுவதில் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவற்றிக்கு பொறுப்பாக்கி சம்மந்தப்பட்ட உதவி/இளநிலை பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையினரால் பரிந்துரைக்கப்பட்டது. அதில் திரு.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் திரு.நா.முருகவேல், ஆகிய உதவி பொறியாளர்கள் சம்மந்தப்பட்டிருந்ததால் தனியர்கள் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9(2)ன் கீழ் 21.12.2012 நாளிட்ட குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டது.

2012–2013ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கு மூப்புபட்டியல் தயாரிக்கும் நிலையில் திரு.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் திரு.நா.முருகவேல், ஆகிய உதவி பொறியாளர்கள் மீது துணை விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருந்ததால் தனியர்களின் பெயர்களை அப்பட்டியலிலிருந்து 26.04.2014 நாளிட்ட மன்றத் தீர்மானத்தின்படி நீக்கம்செய்யப்பட்டது.

இதற்கிடையில் தனியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைகளை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் **W.P.No**.27893 மற்றும் 27896ன் மூலம் வழக்கு தொடர்ந்துள்ளதின்பேரில் தனியர்கள் தொடுத்துள்ள வழக்கில் நீதிமன்றம் 07.02.2014 நாளிட்ட உத்தரவில்'' **Further pursuant to the directions given by this Court, the buildings in question were inspected by the Superintending Engineer, Buildings Department on 17.10.2013 and a status report about the status and condition of the buildings and filed before this Court and the said report would show that the buildings in question are in sound condition.**

**Hence, for the foregoing reasons, I am of the opinion that the impugned charge memos dated:21.12.2012 issued against the petitioners are liable to be quashed and accordingly, quashed and all the writ petitioners are allowed. No costs. Consequently, connected miscellaneous petitions are closed".** என உத்தரவு வழங்கியுள்ளது.

தனியர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை நீதிமன்ற உத்தரவின்படி கைவிடுவதற்கும் இறுதியாணை வழங்குவதற்கும் அரசின் ஆணைக்காக அனுப்பப்பட்டது.

இதற்கிடையில் தனியர்கள் நீதிபேராணை எண்.32110/2014ல் நீதிமன்றம் ஏற்கனவே குற்றச்சாட்டுகளை தள்ளுபடி செய்ததால் தங்களது பெயர்களை 2012–2013ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்குரிய தெரிவுப்பட்டியலில் சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கும்படி மீண்டும் வழக்கு தொடர்ந்திருந்தார்கள். அவ்வழக்கில் 23.06.2014 நீதிமன்ற ஆணையில் **".it is an admitted case of the petitioners that the charge memo have already been quashed by this Court and in that event, the name of the petitioners will have to be considered and included in their original position and they are entitled to all the benefits. Taking note of the totality of the circumstances, this Court while allowing the writ petition, directs the respondent to consider the case of the petitioners for promotion and to place them in their original position and include their names, in the panel if, otherwise they are eligible for promotion and give them all the monetary and consequential benefits, which they are entitled to, within a period of four weeks from the date of receipt of a copy of this order. However, there will be no order as to costs."** என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

எனவே, திரு.ஆர்.ராமச்சந்திரன், உதவி பொறியாளர் அவர்களின் பெயர் 2012–2013ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் **வரிசை எண்.1ல் உள்ள திரு.ஜி.செல்வரங்கன் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.2ல் உள்ள திரு.ஆர்.எல்.தமிழன்பு அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.1A** என மூப்புநிலை நிர்ணயம் செய்தும் மற்றும் திரு.நா.முருகவேல், உதவி பொறியாளர், அவர்களின் பெயர் **வரிசை எண்.5ல் உள்ள திரு.கே.மனோகரன் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.6ல் உள்ள திரு.ஆர்.ஸ்ரீராமலு அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.5A** என மூப்புநிலை நிர்ணயம் செய்து திரு.ஆர்.ராமச்சந்திரன், உதவி பொறியாளர், அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.2ல் இடம்பெற்றுள்ள திரு.ஆர்.எல்.தமிழன்பு அவர்கள் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டும் (with retrospective effect from the date on which his juniors were promoted) மற்றும் திரு.நா.முருகவேல், உதவி பொறியாளர், அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.6ல் இடம்பெற்றுள்ள திரு.ஆர்.ஸ்ரீராமலு அவர்கள் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டும் (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(S) துறை நாள் 18.10.1993ல் தெரிவித்துள்ளவாறு **ரூ.15600 – 39100 + 5400 தர ஊதியம்** என்ற ஊதிய விகிதத்தில் உதவி செயற்பொறியாளராக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கி 25.07.2014 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு தனியர்கள் 30.07.2014 அன்று உதவி செயற்பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே, திரு.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் திரு.நா.முருகவேல் ஆகியோர்களுக்கு உதவி செயற் பொறியாளர் பதவியில் கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கியமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1998/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 24–9–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.514/2014 **பொருள் எண்.41**

**இயந்திர பொறியியல் துறை – வாகனங்களுக்கு எரி பொருள் கொள்முதல் செய்வது – வெளிச் சந்தை விலையை விட பொதுத் துறை நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலை குறைவாக உள்ளது – பொதுத் துறை நிறுவனங்களின் மூலம் வாகனங்களுக்கான எரி பொருள் மொத்தக்கொள்முதல் செய்வது – மன்றத்தின் பின்னேற்பை எதிர்நோக்கி எரிபொருள் கொள்முதல் செய்யப்பட்டதற்கு – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

மேற்பார்வை பொறியாளர் (தெற்கு வட்டார அலுவலகம்) அவர்களின் குறிப்பில், பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய மூன்று நிறுவனங்களின் கொள்முதல் விலையை விட சந்தைவிலை குறைவாக இருந்ததால் மாநகராட்சி வாகனங்கள் மற்றும் ஜெனரேட்டர்கள், கொசு ஒழிப்பு மருந்து தெளித்தல் ஆகியவற்றிக்கு எரி பொருள் விலை வித்தியாசம் இருக்கும் வரை வெளிச் சந்தையில் கொள்முதல் செய்ய மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்டதை தொடர்ந்து வெளிச் சந்தையில் எரி பொருள் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாகவும், தற்போது வெளிச்சந்தையில் விலை **01.09.2014** முதல் லிட்டர் ஒன்றுக்கு ரூ.**62.92–**ம் பொதுத்துறை நிறுவனங்களில் மொத்தக் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.**61.89–**ம் உள்ளதாகவும், இதனால் கொள்முதல் விலையில் வித்தியாசம் லிட்டர் ஒன்றுக்கு ரூ.**1.03** உள்ளதால், வெளிச்சந்தையை விட பொதுத்துறை நிறுவனங்களில் மொத்தக்கொள்முதல் விலை குறைவாக உள்ளதால், பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் எரிபொருள் கொள்முதல் செய்ய உரிய ஆணை பெற்றுத் தருமாறு கோரியுள்ளார்.

இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது யாதெனில், சென்னை மாநகராட்சியில் **18.07.2000** நாளிட்ட அலுவல்சார்பற்ற குறிப்பு எண்.**3169**/வீட்டு வசதி மற்றும் ந.நி.கு.வ– **2000 –1**ல் பெற்ற நிரந்தர ஆணையின்படி, மூன்று பொதுத்துறை நிறுவனங்களான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரேலியம் ஆகிய மூன்று நிறுவனங்கள் மூலம் நேரடியாக மொத்த கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுவந்த நிலையில், எரிபொருள் விலையினை இந்த மூன்று நிறுவனங்களுமே நிர்ணயம் செய்து வந்ததால் வெளிச்சந்தையின் விலை மொத்தக்கொள்முதல் விலையைக்காட்டிலும் குறைவாக இருந்தது எனவே, மன்றத்தீர்மானத்தின்படி வெளிச்சந்தையில் எரிபொருள் கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டது.

இந்நிலையில் தற்பொழுது **01.09.2014** முதல் பொதுத்துறை நிறுவனங்கள் டீசல் விலையில் மாற்றம் செய்துள்ளன. இதனால் வெளிச்சந்தை விலை மொத்தக்கொள்முதல் விலையைக்காட்டிலும் ரூ.**1.03 /–** கூடுதலாக உள்ளது. **01.04.2013** முதல் **01.09.2014** வரை எரிபொருள் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த விவரம் நடப்பு கோப்பு பக்க எண்.**63**ல் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எரிபொருள் விலையில் ஏற்படுகின்ற உறுதியற்ற நிலைபாடு தெரியவருகிறது இதனால், எரிபொருள் விலையில் ஏற்படும் ஸ்திறமற்ற தன்மை காரணமாக கொள்முதல் செய்வது குறித்து உறுதியான முடிவினை எடுக்க இயலாத நிலை உள்ளது. எனவே, எரிபொருள் கொள்முதல் விலையில் செய்யப்படும் மாற்றங்களால் ஏற்படும் நிதி இழப்பீட்டை தவிர்க்க வெளிச்சந்தை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் விலை வித்தியாசம் ஏற்படும்பொழுது, கொள்முதல் விலையில் ஏற்படும் வித்தியாசத்திற்கேற்ப மொத்தமாகவோ அல்லது வெளிச்சந்தையிலோ சம்பந்தப்பட்ட வட்டார இணை/துணை ஆணையாளர் அவர்களின் ஆணை பெற்று கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. தற்பொழுது மொத்தக் கொள்முதல் விலையில் விலைக்குறைவாக உள்ளதால், விலை வித்தியாசம் இருக்கும் வரை மன்றத்தின் பின்னேற்பை எதிர்நோக்கி பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து எரிபொருள் மொத்தவிலையில் கொள்முதல் செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெளிச்சந்தையை விட பொதுத்துறை நிறுவனங்களான (இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம்) ஆகியவற்றில் மொத்த கொள்முதல்விலை குறைவாக உள்ளதால், விலை வித்தியாசம் இருக்கும் வரை மாமன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு, பொதுத்துறை நிறுவனங்களில் மொத்தமாக கொள்முதல் செய்யவும், வெளிச்சந்தை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் விலை வித்தியாசம் ஏற்படும்பொழுது, கொள்முதல் விலையில் ஏற்படும் வித்தியாசத்திற்கேற்ப மொத்தமாகவே அல்லது வெளிச்சந்தையிலோ சம்பந்தப்பட்ட வட்டார இணை/துணை ஆணையாளர் அவர்கள் மூலமாக ஆணை பெற்று கொள்முதல் செய்யவும், மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி இம்முறையை உடனே அமல்படுத்தவும், ஆணை பெறப்பட்டது.

எனவே, தற்போது வெளிச்சந்தையை விட பொதுத்துறை நிறுவனங்களான (இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம்) ஆகியவற்றில் மொத்த கொள்முதல்விலை குறைவாக உள்ளதால், விலை வித்தியாசம் இருக்கும் வரை மாமன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு, பொதுத்துறை நிறுவனங்களில் மொத்தமாக கொள்முதல் செய்ய அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

**01.** தற்போது வெளிச்சந்தையை விட பொதுத்துறை நிறுவனங்களான (இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம்) ஆகியவற்றில் மொத்த கொள்முதல்விலை குறைவாக உள்ளதால், விலை வித்தியாசம் இருக்கும் வரை மாமன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு, பொதுத்துறை நிறுவனங்களில் மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்ப்பு அனுமதி வேண்டியும்,

**02.** இனிவரும் காலங்களில் வெளிச்சந்தை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் விலை வித்தியாசம் ஏற்படும்பொழுது, கொள்முதல் விலையில் ஏற்படும் வித்தியாசத்திற்கேற்ப மொத்தமாகவே அல்லது வெளிச்சந்தையிலோ சம்பந்தப்பட்ட துறை தலைவர் மற்றும் வட்டார இணை/துணை ஆணையாளர் அவர்கள் மூலமாக ஆணை பெற்று கொள்முதல் செய்யவும்,

மேற்கண்ட இனங்களின் மீது நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் **19.09.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.09.2014** அன்று தீர்மானஎண்.**420/2014**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.09.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.09.2014** அன்று தீர்மான எண்.**428/2014**ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1414/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 24—9—2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.515/2014 **பொருள் எண்.42**

**இயந்திர பொறியியல் துறை — பொது தொழிற்சாலை மற்றும் மத்திய லாரி நிலையத்தில் உள்ள பயனற்ற பொருட்கள் மற்றும் வாகனங்களை வளைதளம் மூலம் பொது ஏலம் விடுதல் — ஏல நிறுவனத்தை தேர்ந்தெடுத்து ஒப்பங்கள் கோர மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு — ஒப்பம் கோரப்பட்டது — குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். METAL SCRAP TRADING CORPORATION LIMITED (மத்திய அரசு நிறுவனம்) நிறுவனத்திற்கு இ—ஏலம் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் கோர அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்— 1 முதல் 15 மற்றும் அனைத்து துறைகளிலிருந்து பெறப்படும் பயனற்ற பொருட்கள் மற்றும் கழிவு செய்யப்படும் நிலையில் உள்ள வாகனங்கள் அனைத்தும் இயந்திரப் பொறியியல் துறையின்கீழ் இயங்கும் பொது தொழிற்சாலை மற்றும் மத்திய லாரி நிலையத்தில் பெறப்பட்டு பொது ஒப்ப—ஏலம் (Tender –cum-Auction) மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். METAL SCRAP TRADING CORPORATION LIMITED தாங்கள் இந்திய அரசின் எஃகு அமைச்சகத்தின் (Ministry of Steel) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனம் என்றும், அசையும் மற்றும் அசையா பொருட்கள், சொத்துக்கள் ஆகியவற்றை விற்பனை செய்வது தங்கள் பணி என்றும், தாங்கள் தங்களுக்கென வலைதளம் அமைத்துள்ளதாகவும், இதன் மூலம் தேவையற்ற அசையும் மற்றும் அசையா பொருட்களை விற்பனை செய்து விடுவதாகவும், தங்கள் வலைதளம் மூலம் பல பொதுத்துறை நிறுவனங்களாக NTPL, AAL, BHEL, CPCL. தமிழ் நாட்டிலுள்ள சக்கரை ஆலைகள் சுங்கவரித் துறை, எண்ணூர் Port Trust Heavy Vehicles factory, Engine Factory, Engine Factory, Happ, Ordanance Factory, HPCL LOCL, MFL, NIC, NPCIL, TUTICORIN PORT TRUST, VSNL மற்றும் Defence ஆகியோரின் தேவையற்ற பொருட்கள், அசையும் அசையா சொத்துக்களை விற்பனை செய்து வருவதாகவும், உச்ச நீதி மன்ற வழிகாட்டுதலின் படி, கர்நாடக மாநிலத்தில் இருந்த பல மில்லியன் டன் இரும்பு தாதுக்கள் ஏலம் விடப்பட்டன. அரசின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாக 15% லாபம் பெறப்பட்டதாகவும், டெல்லி அரசு தங்களை அம் மாநகராட்சியில் உள்ள தேவையற்ற பொருட்களை விற்பனை செய்ய அதிகார பூர்வ முகவராக நியமித்துள்ளதாகவும், தங்கள் நிறுவனம் விற்பனை மற்றும் கொள்முதல் தொடர்பாக மற்ற மாநில அரசுகளுடன் பேச்சு வார்த்தையில் உள்ளதாகவும் மற்றும் பல மாநில போக்குவரத்து நிறுவனங்கள் தங்கள் நிறுவனம் மூலம் தேவையற்ற பொருட்களை விற்பனை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நிறுவனத்தின் வலைதளத்தில் விற்பனை குறித்த விளம்பரங்களை மேற்கொண்டு அதன் மூலம் சிறந்த நுகர்வோரைக் கண்டறிந்து விற்பனை செய்து வருவதாவும், தங்களிடம் இந்தியா முழுவதும் 30,000க்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் உள்ளதாகவும் தெரிவித்து தங்களுக்கு வருமானவரி கணக்கு எண். VAT Registration மற்றும் வங்கிக் கணக்கு ஆகியவை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

தாங்கள் e-commerce பிரிவு ஒரு ISO 9001 : 2008 சான்றிதழும் தங்களது e-commerce முறை ISO 27001 : 2005 சான்றிதழும் பெற்றுள்ளதாகவும், வருமான வரி சட்டம் 2000—ன்படி அனைத்து விதமான வரைமுறைகளும் பின்பற்றப்படுவதாகவும், தெரிவித்துள்ளார்கள்.

இந்நிறுவனத்தின் வலைதளம் மூலம் சென்னை மாநரகாட்சியில் உள்ள தேவையற்ற பொருட்களான கழிவு செய்யப்பட்ட (Condemned) வாகனங்கள், மற்ற உதிரி பாகங்கள், டயர்கள், டியூப்புகள் ஆகியன விற்பனை செய்வதன் மூலம் அரசுக்கு அதிக வருவாய் பெற வாய்ப்புள்ளது எனவும், தங்களது செயல்முறை ஒளிவு மறைவு இல்லாதவை எனவும், அனைவருக்கும் சம உரிமை அளிக்கப்படும் எனவும், தங்கள் வலை தளம் மூலம் 2012—2013ம் நிதியாண்டின் சுமார் 15500கோடி ரூபாய்க்கான வருவாய் ஈட்டித் தந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி தங்கள் வசம் உள்ள கழிவு செய்யப்பட்ட வாகனங்கள், தளவாடங்களை, உதிரி பாகங்கள், மருத்துவ உபகரணங்கள், டயர்கள் மற்றும் தேவையற்ற பொருட்களை விற்பதன் மூலம் அதிக லாபம் கிடைக்கும் எனவும், தங்கள் நிறுவனம் சென்னை மாநகராட்சிக்கென அனைத்து பணிகளையும் மேற்கொண்டு பொருட்களை விற்பனை செய்து

வழங்குவதாகவும், இதற்கான அனைத்து தொகையும் சென்னை மாநகராட்சிக்கு கிடைக்கப் பெற்றப்பின் தங்கள் நிறுவனம் இதற்கான சேவைத் தொகையினை பெறும் எனவும் தங்களது செயல் ஒளிவு மறைவில்லா அனைவரும் அறியக்கூடியது என தெரிவித்து தங்கள் நிறுவனத்தின் வலைதளம் மூலம் பொருட்களை வாங்கவோ அல்லது விற்கவோ செய்யுமாறும் தெரிவித்திருந்தனர்.

இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது யாதெனில், சென்னை மாநகராட்சியில் தற்போது பொது ஒப்பம் ஏலம் (Tender cum Auction) கழிவு செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இம்முறை மூலம் குறைந்த அளவு ஒப்பங்களே பெறப்படுகின்றன. மேலும் ஏலத் தொகை குறைந்த அளவே கேட்கப்படுகின்றது.

வலைதளம் (e-auction) மூலம் ஒப்பங்கள் கோரப்படின், அதிக அளவு ஒப்பந்தாரர்கள் கலந்து கொள்வதுடன், ஏலத் தொகையும் அதிக அளவில் கேட்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. இதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு அதிக லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் தற்போதுள்ள முறையில் அனைத்து பொருட்களையும் ஒரே இடத்தில் சேமிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதிக காலம் அவகாசமும் தேவைப்படுகின்றது. ஆனால் வலைதளம் மூலம் ஏலங்கள் கோரப்படின் குறைந்த கால அவகாசமே தேவைப்படுகிறது.

இவ்வாறு, வலைதளம் மூலம் ஒப்பம் முறையில் ஏலம் கோரும் பணியை மேற்கொள்ள MSTC Ltd., போன்ற பல நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்கள் மூலம் ஏல பணிகளை மேற்கொள்ளும் பட்சத்தில் பணிகளை விரைந்து செயல்படுத்த முடியும். கால விரயம் குறைக்கப்படும். அதிக அளவு வாடிக்கையாளர்கள் கிடைக்கப் பெறுவர். அதிக தொகைக்கு பொருட்கள் ஏலம் விடப்படும். அதிக அளவு வருவாய் கிடைக்கும்.

கடந்த ஆண்டில் இயந்திர பொறியியல் துறை மூலம் வாகனங்கள் மற்றும் மரச்சாமான்கள் இரும்பு கழிவுகள் பொது ஏலம் விடப்பட்டதில் ரூ.1,56,78,000/– கிடைக்கப் பெற்றுள்ளது. வலைதளம் மூலம் பொது ஏலம் விடப்படின் இத்தொகையில் (தோராயமாக) 3% மட்டுமே இப்பணியை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு சேவை தொகையாக வழங்க வேண்டியிருக்கும். ஆனால் குறைந்த செலவில் அதிக அளவில் வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது. மேலும் செலவு செய்யும் தொகை வலைதளம் மூலம் ஏலத்தில் பெறப்படும் தொகையுடன் ஒப்பிடுகையில் மிக குறைந்த அளவே ஆகும்.

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி, நேரடியாக ஏல நிறுவனத்தை நியமிக்க இயலாது என்பதால் ஒப்ப முறை மூலம் ஏலப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களில் சிறந்த நிறுவனத்தை தேர்ந்தெடுக்க மன்றத்தில் கீழ்கண்டவாறு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

01. சென்னை மாநகராட்சியில் உள்ள தேவையற்ற பொருட்களான கழிவு செய்யப்பட (condemned) வாகனங்கள், இரும்பு பொருட்கள், மர கழிவுகள், மின் கலன்கள் மற்றும் உதிரி பாகங்கள், டயர்கள், டியூப்புகள், அச்சகப் பொருட்கள், தளவாடங்கள், காம்பெக்டர் பின்கள் மற்றும் அனைத்து துறையில் உள்ள கழிவு செய்யப்பட்ட பொருட்களை ஏல முறையில் வலைதளம் மூலம் ஏலம் விடும் நிறுவனம் (Out Sourcing) மூலம் ஏலம் விட நிர்வாக அனுமதியும்,
02. அவ்வாறு மேற்கொள்ளும் பட்சத்தில் ஏல பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தை தேர்ந்தெடுக்க இயந்திர பொறியியல் துறை மூலம் பொது ஒப்பம் கோரவும்,
03. மண்டலம்–1 முதல் 15 மற்றும் அனைத்து துறைகள் தங்கள் வசம் உள்ள தேவையற்ற பொருட்களை (வாகனங்களை தவிர) அந்தந்த வட்டார அலுவலகம் மற்றும் துறைகள் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு பொது ஒப்பந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனத்தின் மூலம் ஏல பணிகளை தாங்களே மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில், சிறந்த ஏல நிறுவனத்தை தேர்ந்தெடுக்க மின்னணு ஒப்ப முறையில் ஒப்பம் கோரப்பட்டது.

தொழில் நுட்ப ஒப்பம் 18.08.2014 அன்று திறக்கப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

01. திருவாளர்கள். C1 இந்தியா பிரைவேட் லிமிடெட்.
02. திருவாளர்கள். M.S.T.C.Ltd (மத்திய அரசு நிறுவனம்)

திருவாளர்கள். C1 இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் ஒப்ப விதிகளில் கோரிய ஆவணங்கள் உரிய முறையில் சமர்ப்பிக்காத காரணத்தால் இந்நிறுவனத்தின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. தகுதி பெற்ற ஒரே ஒப்பந்ததாரரான திருவாளர்கள். M.S.T.C.Ltd (மத்திய அரசு நிறுவனம்) நிறுவனத்தாரின் நிதி ஒப்பம் 1.9.2014 அன்று திறக்கப்பட்டது.

திருவாளர்கள். M.S.T.C.Ltd நிறுவனத்தார் கீழ்கண்டவாறு தங்களது விலைப்புள்ளியை சமர்ப்பித்துள்ளனர்.

| Sl. No. | Description of Work | Rate in Figures to be entered by the Bidder in percentage (%) |
|---|---|---|
| | | Figures |
| 1.00 | Basic Service charges payable to the E-Auction Service Provider for conducting E-Auction for disposal of old condemned vehicles and all types of scrap from various departments of Corporation of Chennai as per the Scope of the Project. ( The service charge will be paid to the E-Auction Service Provider on % basis on the sale & fetched value (excluding the tax amount) after receipt and realization of sale value & acceptance / approval of Tender / E-auction by Corporation of Chennai. | 3.00 |
| 2.00 | All applicable Taxes., Service Tax etc (Details to be furnished) – Should be quoted separatelye | 12.36 |

இந்நிறுவனத்தாரை மேலும், விலைக்குறைப்பு அளிக்க கோரப்பட்டது. திருவாளர்கள். M.S.T.C.Ltd நிறுவனத்தார் தங்களது 03.09.2014 நாளிட்ட கடிதத்தில் மத்திய மற்றும் தமிழக அரசு நிறுவனங்களுக்கு 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளில் பெற்ற பணியின் விவரங்கள் அதற்குண்டான சேவை கட்டணம் மேற்குறிப்பிட்டுள்ள 3 சதவீதம் மற்றும் 12.6 சதவீதம் சேவை வரி பெற்றதாகவும், மேலும், மேற்படி ஒப்பம் சம்பந்தமாக இ–விளம்பரம் செய்ய, தங்கள் நிறுவனம் மூலம் மேற்கொள்வதாவும், இதற்கென தனியே மாநகராட்சியிடம் கட்டணம் வசூலிக்க மாட்டோம் எனவும், இந்த தொகையானது மூன்று ஆண்டிற்கு மாற்ற முடியாது என்பதாலும், 3 சதவீதம் சேவை கட்டணம் குறைக்க இயலாது என தெரிவித்துள்ளனர்.

இவ்வொப்பத்தில் ஒரே ஒரு ஒப்பந்ததாரராகிய திருவாளர்கள். M.S.T.C.Ltd நிறுவனத்தார் தகுதி பெற்றார் என்றாலும், இந்நிறுவனம் கடந்த 2011 மற்றும் 2012ல் மத்திய மற்றும் மாநில அரசுகளிடம் பெற்ற பணியில் சேவை கட்டணமாக 3 சதவீதம் தொகை மட்டுமே பெற்றுள்ளது. 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளில் பெற்ற தொகையையே 2014ம் ஆண்டில் இவ்வொப்பத்திற்கு அளிக்குமாறு கோரியுள்ளனர். இந்நிறுவனம் இந்தியாவில் உள்ள பல மாநகராட்சிகளுக்கு இதே போன்ற சேவையை வழங்குவதாலும், மேலும், இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதை கருத்தில் கொண்டும், இந்நிறுவனத்திற்கு இப்பணியினை வழங்க பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

திருவாளர்கள். M.S.T.C.Ltd நிறுவனத்தார் இ–ஏலம் பணிகள் மேற்கொள்ள 3 சதவீதம் சேவை கட்டணமும் மற்றும் 12.36 சதவீதமாக சேவை வரியும் வழங்க ஒப்ப குழுமத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே, சென்னை மாநகராட்சியில் உள்ள தேவையற்ற பொருட்களான கழிவு செய்யப்பட (condemned) வாகனங்கள், இரும்பு பொருட்கள், மர கழிவுகள், மின் கலன்கள் மற்றும் உதிரி பாகங்கள், டயர்கள், டியூப்புகள், அச்சகப் பொருட்கள், தளவாடங்கள், காம்பெக்டர் பின்கள் மற்றும் அனைத்து துறையில் உள்ள கழிவு செய்யப்பட்ட பொருட்களை ஏல முறையில் வலைதளம் மூலம் திருவாளர்கள். METAL SCRAP TRADING CORPORATION நிறுவனத்தார் இ–ஏலம் பணிகள் மேற்கொள்ள ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

01. சென்னை மாநகராட்சியில் உள்ள தேவையற்ற பொருட்களான கழிவு செய்யப்பட (condemned) வாகனங்கள், இரும்பு பொருட்கள், மர கழிவுகள், மின் கலன்கள் மற்றும் உதிரி பாகங்கள், டயர்கள், டியூப்புகள், அச்சகப் பொருட்கள், தளவாடங்கள், காம்பெக்டர் பின்கள் மற்றும் அனைத்து துறையில் உள்ள கழிவு செய்யப்பட்ட பொருட்களை ஏல முறையில் வலைதளம் மூலம் திருவாளர்கள். METAL SCRAP TRADING CORPORATION நிறுவனத்தார் இ–ஏலம் பணிகள் மேற்கொள்ளவும்,

02. மண்டலம்–1 முதல் 15 மற்றும் அனைத்து துறைகள் தங்கள் வசம் உள்ள தேவையற்ற பொருட்களை (வாகனங்களை தவிர) அந்தந்த வட்டார அலுவலகம் மற்றும் துறைகள் மூலம் திருவாளர்கள். METAL SCRAP TRADING CORPORATION நிறுவனத்தின் மூலம் பதிவு செய்து கொண்டு 3 ஆண்டுகளுக்கு கழிவு செய்யப்பட்ட பொருட்களை நேரடியாக இ–ஏலம் பணிகளை தாங்களே மேற்கொள்ளவும்,

03. இப்பணிக்காக திருவாளர்கள். METAL SCRAP TRADING CORPORATION நிறுவனத்தாருக்கு மொத்த ஏலத் தொகையில் 3 சதவீதம் சேவை கட்டணமும் மற்றும் 12.36 சதவீதமாக சேவை வரியும் வழங்கவும், மேற்படி பணி நடைபெறும் 3 ஆண்டுகளில் சேவை வரி மாற்றம் ஏற்படும் நிலையில் அரசு நிர்ணயிக்கும் சேவை வரியினை செலுத்தவும்,

04. பொருட்களை ஏலம் விடும் வகையில் பெறப்படும் தொகையினை சம்பந்தப்பட்ட துறை கணக்கு தலைப்பின் கீழ் செலுத்தவும், மேலும், இந்நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய சேவைத் தொகையினை இக்கணக்கு தலைப்பின் கீழ் பெற்று வழங்கவும்,

05. திருவாளர்கள். METAL SCRAP TRADING CORPORATION நிறுவனத்திடமிருந்து மேற்படி பணிக்காக ரூ.5.00 லட்சம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் அல்லது NSC/KVP பெற்றுக் கொண்டு உடன்படிக்கை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.419/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.427/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மா.கு.ந.(ம) ம.கு.ந.க.எண்.எப்4/2229/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.516/2014 பொருள் எண்.43

**மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் தகுதிவாய்ந்த நபர்களுக்க மாவட்ட குடும்ப நலத்துறையில் மயக்க மருந்து நிபுணர்களாக நேரடி பணிநியமனம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் அரசாணை (எம்.எஸ்) எண்.96 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(எம்.சி.3)ல் தெரிவித்துள்ளபடி காலியாக உள்ள 5 மயக்க மருந்து நிபுணர் (Anaesthetist) பணியிடங்களை கீழ்கண்ட இனச்சுழற்சியின்படி நிரப்புவதற்கு முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று 04.08.2014 நாளிட்ட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 16 பேர் கொண்ட பெயர் பட்டியல் பெறப்பட்டது.

| வ.எண் | இன சுழற்சி முறை | முன்னுரிமை பெற்றவர் | முன்னுரிமைஅற்றவர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | எஸ்.சி | – | 1 | 1 |
| 2 | பி.சி. | – | 1 | 1 |
| 3 | எம்.பி.சி | – | 1 | 1 |
| 4 | பொதுப்போட்டி | – | 2 | 2 |
| | மொத்தம் | | 5 | 5 |

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 16 நபர்களுக்கு நேர்காணலில் கலந்து கொள்ள கடிதம் அனுப்புவதற்கும், நேர்காணல் 17.09.2014 அன்று நடைபெறுவதற்கும் துணை ஆணையர் (சுகாதாரம்), அவர்களின் தலைமையில் உதவி ஆணையர் (பொ.நி.ம.ப), மாவட்ட சுகாதார அலுவலர், துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ), மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் கொண்ட குழு அமைப்பதற்கும் 03.09.2014 நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட இனசுழற்சி முறையில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 16 மயக்க மருந்து நிபுணர்களுக்கு 17.09.2014 அன்று காலை 10.30 மணி அளவில் துணை ஆணையர் (சுகாதாரம்), அவர்களின் தலைமையில் உதவி ஆணையர் (பொ.நி.ம.ப), மாவட்ட சுகாதார அலுவலர், துணை திட்ட ஒருங்கிணைப்பாளர்(பொ), மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் கொண்ட குழுவினர் முன்னிலையில் நேர்காணல் நடைபெற்றது. இந்த நேர்காணலில் 2 நபர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பெயர் (ம) வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண் | இனம் | கல்வி தகுதி | பிறந்த தேதி மற்றும் வயது | தகுதி பெற்றவர்கள் / பெறாதவர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர்.திரு.யு.ஸ்ரீதர்<br>CHP2011M00125921/10.11.2011 | BC (NP) | M.B.B.S D.A | 19.03.1965 வயது 49 | ஆம் |
| 2 | டாக்டர்.திருமதி.ஜி.பிரிடா<br>CHP2012F00040722/17.10.2012 | SC (NP) | M.B.B.S. MD | 19.11.1983 வயது 31 | ஆம் |

நேர்காணலில் கலந்து கொண்ட 2 நபர்களை 200 புள்ளிகள் கொண்ட இன சுழற்சி முறையில் தேர்வு செய்யப்பட வேண்டும்.

எஸ்.சி (முன்னுரிமை அற்றவரில்) 1 காலிபணியிடத்திற்கு 4 நபர்கள் கொண்ட பெயர் பட்டியல் பெறப்பட்டது. மூன்று நபர்கள் நேர்காணலில் கலந்து கொள்ளவில்லை. நேர்காணலில் கலந்து கொண்ட ஒரு நபரான டாக்டர்.திருமதி.ஜி.பிரிடா. என்பவர் மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பி.சி.(முன்னுரிமை அற்றவரில்) 1 காலி பணியிடத்திற்கு 5 நபர்கள் கொண்ட பெயர் பட்டியல் பெறப்பட்டது. 4 நபர்கள் நேர்காணலில் கலந்து கொள்ளவில்லை. நேர்காணலில் கலந்து கொண்ட 1 நபரான டாக்டர்.திரு.யு.ஸ்ரீதர், என்பவர் மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவருடைய வயது 49 ஆகும் இருப்பினும் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தனியருக்கு 12(d)இன் படி வயது வரம்பு தேவையில்லை என்று பெயர்ப்பட்டியல் அனுப்பட்டுள்ளதால் தனியருக்கு வயது வரம்பு தளர்வு செய்து அரசின் தளர்வாணைக்குட்ப்பட்டு பணி நியமனம் செய்யலாம்.

எம்.பி.சி.(முன்னுரிமை அற்றவரில்) 1 காலி பணியிடத்திற்கு 3 நபர்கள் கொண்ட பெயர் பட்டியல் பெறப்பட்டது. நேர்காணலில் எவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே இந்த ஒரு காலிப்பணியிடத்தினை பின்னடைவாக கருதலாம்.

பொதுப்போட்டி (முன்னுரிமை அற்றவர்) 2 காலிபணியிடத்திற்கு 4 நபர்கள் கொண்ட பெயர் பட்டியல் பெறப்பட்டது. ஆனால் எவரும் கலந்து கொள்ளவில்லை.

14.10.2009 நாளிட்ட அரசாணை நிலை எண்.142 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(கே) துறை நாள்.14.10.2009ன்படி 200 புள்ளிகள் கொண்ட இனசுழற்சி முறையில் ஏற்கனவே 120 புள்ளிகள் வரை நிரப்பப்பட்டு, புள்ளி எண்ணில் 121 முதல் 125 வரை இனசுழற்சி முறையில் 5 பணியிடங்களுக்கு கீழ்கண்ட தகுதி வாய்ந்த 2 நபர்களின் பெயர்பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது.

**இதன் விவரம் பின்வருமாறு:—**

| வ. எண் | புள்ளி. எண். | இன ஒதுக்கீட்டு சுழற்சி முறை (அரசாணை எண். 65) | வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண் | பெயர் மற்றும் விலாசம் | பிறந்த தேதி மற்றும் வயது | இனம் | கல்வித் தகுதி | தாய் மொழி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 121 | பொதுப் போட்டி (முன்னுரிமை அற்றவர்) | தகுதியான நபர் கலந்துகொள்ளவில்லை | | | | | |
| 2 | 122 | எஸ்.சி (முன்னுரிமை அற்றவர்) | CHP2012F00040722/ 17.10.2012 | டாக்டர்.திருமதி. ஜி.பிரிடா எண்.16, ஜீவன் நகர் 2வது தெரு ஆதம்பாக்கம், காஞ்சிபுரம், சென்னை— 600 088. | 19.11.1983 வயது 31 | SC (NP) | M.B.B.S. M.D | தமிழ் |
| 3 | 123 | எம்.பி.சி (முன்னுரிமை அற்றவர்) | தகுதியான நபர் கலந்துகொள்ளவில்லை | | | | | |
| 4 | 124 | பி.சி (முன்னுரிமை அற்றவர்) | CHP2011M00125921/ 10.11.2011 | டாக்டர்.திரு. யு.ஸ்ரீதர் எண்.32, 2வது தெரு, சௌராஷ்ரா நகர், சூளைமேடு, சென்னை— 600 094 | 19.03.1965 வயது 49 | BC (NP) | M.B.B.S. D.A | மராட்டி தமிழ் மொழி தேர்ச்சி பெற்றுள்ளார் |
| 5 | 125 | பொதுப் போட்டி (முன்னுரிமை அற்றவர்) | தகுதியான நபர் கலந்துகொள்ளவில்லை | | | | | |

மேற்கண்ட **2** நபர்கள் **15,600– 39,100** + தர ஊதியம் **5400** என்ற ஊதிய விகிதத்தில் மயக்க மருந்து நிபுணர் பதவிக்கு நியமனம் பெற தகுதி பெறுகின்றனர்.

எனவே தகுதி பெற்றுள்ள மேற்கண்ட **2** நபர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடனும், மேலும் துறைத்தலைவர்கள், உரியவரின் அசல் சான்றிதழ்களை சரிபார்த்த பின் இவர்களின் கல்வித்தகுதி, வயது, ஆகியவற்றைப் பற்றி திருப்தியடைந்த பின் மருத்துவ உடல் தகுதி சான்றிதழ் பெற்ற பின்னர் பணியில் சேர அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையுடனும், தவறான தகவல் அளித்து, அதனடிப்படையில் இவர்கள் பணி நியமனம் பெற்றார்கள் என பின்னர் தெரியவரின் இவர்களது பணி நியமனம் எவ்வித முன்னறிவுப்புமின்றி ரத்து செய்யப்பட்டு, உடனடியாக பணியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையுடனும், டாக்டர்.திரு.யு.ஸ்ரீதர் அவர்களின் வயது **49** ஆக இருப்பினும் தனியருக்கு வயது வரம்புலிருந்து தளர்வு செய்து அரசின் தளர்வானை பெற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்பொழுது காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களில் தற்காலிகமாக மருத்துவ அலுவலர்களாக ரூ.**15,600 – 39,100** + (தர ஊதியம் **5400**) என்கின்ற காலமுறை ஊதிய விகிதம் மற்ற இதர படிகளுடன் பணி நியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றம் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**தி.க.மே.து.ந.க.எண்.அ5/ 2397 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.517/2014 **பொருள் எண்.44**

**சென்னை மாநகராட்சி துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான நியமனமுறைக்கான வரைவு துணை விதிகள் 2009ல் சில திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி**

சென்னை மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் பதவியில் **183** காலிப் பணியிடங்கள் உள்ளது. மேற்கண்டுள்ள துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான பணி நியமன விதிகளின்படி, இப்பதவியில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு இப்பதவிக்கான ஊட்டப் பதவிகளான துப்புரவு மேஸ்திரி/பதிவுரு எழுத்தர் ஆகிய பதவிகளில் போதிய அளவில் தகுதியான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், நிர்வாக நலன் கருதி, இப்பதவிக்கான பணி நியமன விதிகளில் சிறிது மாற்றம் செய்வது அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சி நிர்வாக நலன் கருதியும், சென்னை மாநகரில் பொது மக்களின் நலன் கருதி சுற்றுப்புற சுகாதார தூய்மைப் பணிகளை மேம்படுத்தவும், துப்புரவுத் துறையைச் சார்ந்த கோட்டப் பணிகளை சீரிய முறையில் மேற்பார்வையிடவும், துப்புரவு பணியாளர்களுக்கான பணிகளை மேம்படுத்தவும், பொது மக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் புகார்களை உடனுக்குடன் தீர்வு செய்யவும், துப்புரவு பணியாளர்களின் பணியமைப்பு சார்ந்த பணிகளையும் மற்றும் பணிப் பதிவேடுகளை சீரிய முறையில் பராமரிக்கவும், குப்பை கொட்டும் வளாகங்களின் பணிகளை கண்காணிக்கவும் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள துப்புரவு ஆய்வாளர் பதவிக்கு பட்டப்படிப்பினை நிர்ணயம் செய்யலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, சென்னை மாநகராட்சி சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட வரைவு துணை விதிகள்–2009ல் உள்ள துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான நியமன முறையில் நேரடி நியமனத்திற்கான கல்வித் தகுதியாக பட்டப்படிப்பு நிர்ணயம் செய்தும் மற்றும் பதவி உயர்வு நேரடி நியமணத்திற்கான விகிதாச்சாரம் **1:1** என்று நிர்ணயம் செய்தும் கீழ்க்கண்டவாறு துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான பணி நியமன விதிகள் திருத்தம் செய்யலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது.

**சென்னை மாநகராட்சி சார்நிலைப் பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட பணி நியமன விதிகள்–2009ல் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான துணை விதியை சிறிது மாற்றம் மூலம் முன் மொழியப்பட்டுள்ள வரைவு துணை விதி (Proposal)**

| பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப் பட்ட தகுதிகள் | ஊதிய விகிதம் மற்றும் நிர்ணய நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| துப்புரவு ஆய்வாளர் | 1) கீழ்கண்ட பதவிகளிலிருந்து பதவி உயர்வு மூலம்<br>(i) மூன்றாண்டுகள் பணி முடித்த துப்புரவு மேஸ்திரி/ பதிவுரு எழுத்தர்<br>2) வேலை வாய்ப்பு அலுவலகத்தால் நேரடி நியமனம் | **குறைந்தபட்ச பொதுக்கல்வி தகுதி**<br>**பட்டப்படிப்பு தேர்ச்சி**<br>**$10^{th}$- $12^{th}$ – UG** | ரூ.5200–20200 + நிலை ஊதியம் ரூ.2000 அட்டவணை எண்.6 நிர்ணய நாள் ஒவ்வொர் ஆண்டும் ஏப்ரல் 1ம் நாள் | 1.பட்டியல் ஆண்டில் ஏற்பட்டுள்ள /ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை 50% பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு. மீதமுள்ள 50% காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும்.<br>2. பட்டியலாண்டில் நிரப்பப்படாமல் நிலுவையில் உள்ள காலிப்பணியிடங்களை அடுத்த ஆண்டிற்கான உரிய ஒதுக்கீட்டிற்கு முன் கொணரப்பட வேண்டும். |

எனவே நிர்வாக நலன் கருதி, சென்னை மாநகராட்சி சார்நிலைப் பணியாளர்களின் பணிநியமன விதிகள் **2009–**ல் உள்ள துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தத்திற்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ப.து / சிறப்பு திட்டம்.ந.க.எண்.பி3/3296/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 22.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.518/2014 **பொருள் எண்.45**

**சிறப்புத் திட்டங்கள் துறை – சென்னை ஒருங்கிணைந்த நகர்ப்புற போக்குவரத்து ஆணைக் குழு (CUMTA) கீழ் மோட்டார் வாகனமில்லா போக்குவரத்து கொள்கை (NMT Policy) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுவது குறித்து –அனுமதி**

அரசு வர்த்தமானி எண்.**346**ன்படி சென்னை ஒருங்கிணைந்த நகர்ப்புற போக்குவரத்து ஆணைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் முதலாவது கூட்டம் 16.07.2012 மற்றும் 26.07.2012 நடைப்பெற்றது. இக்கூட்ட நடவடிக்கையின் படி மூன்று துணைக்குழு அமைக்க பரிந்துரைக்கப்பட்டது. அதில் ஒரு குழு "மோட்டார் வாகனமில்லா போக்குவரத்து கொள்கை (NMT Policy) துணைக்கமிட்டி" ஆகும். இத்துணைக்குழுவில் சென்னை மாநகராட்சியில், முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்கள் தலைவராகவும், காவல் துறை துணை ஆணையர் போக்குவரத்து, நிர்வாக இயக்குநர் / மாநகர போக்குவரத்துக் கழகம், தலைமை பொறியாளர் நெடுஞ்சாலைத் துறை, மாநகர சாலைகள், தலைமை திட்ட அமைப்பாளர் (போக்குவரத்து) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இயக்குநர் சென்னை சிட்டி கனெக்ட் அவர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள் என முடிவு செய்யப்பட்டது.

மோட்டார் வாகனமில்லா போக்குவரத்து கொள்கை (NMT Policy) துணைக்கமிட்டி பரிந்துரைப்படி பல்வேறு சிறப்பு திட்டங்கள் வாகனமில்லா போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. சிறப்பு திட்டங்களான உலகத் தரத்திலான நடைபாதைகள், பேருந்து சாலைகளில் மிதிவண்டிக்கான பிரத்யேக தடங்கள் அமைத்தல், நடைபாதை பிளாசாக்கள், பகுதி வரை படங்களுடன் கூடிய நவீன பேருந்து நிழற்குடைகள், பேருந்துகள் நிற்கும் பிரத்யேக இடங்கள் (Bus Bay), அனைத்து பொது சேவை போக்குவரத்து நிறுவனங்களான சென்னை மெட்ரோ இரயில், பறக்கும் இரயில், மோனோ இரயில், பேருந்துகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து அமைக்க வேண்டிய சாலைகள் அமைப்பது திட்டமிடப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்படுகிறது.

மேற்கூறிய சிறப்புத் திட்டங்களை மேற்கொள்ள வழிக்காட்டியாக "சென்னை மாநகராட்சி மோட்டார் அல்லாத போக்குவரத்துக் கொள்கை" (Corporation of Chennai Non-Motorised Transport Policy) வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் மோட்டார் அல்லாத போக்குவரத்தான நடப்பது, சைக்கிள் ஓட்டுவது மற்றும் மனிதனால் இயக்கப்படும் மோட்டார் அல்லாத போக்குவரத்து சாதனங்களை பயன்படுத்துவதற்கு ஏதுவாக உள்கட்டமைப்பு மேற்கொள்வதற்கான வழிவகைகள் வகுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி சாலைகளின் வடிவமைப்பு பாதசாரிகள் மற்றும் அனைத்துவகை போக்குவரத்து வசதிகளும் உள்ளடக்கிய சிறந்த நடைமுறைகள் மேற்கொள்வதன் முலம் ஒருவரின் வயது அல்லது வாழ்க்கை அந்தஸ்து வித்தியாசமாகவும் பாதுகாப்பான மோட்டார் அல்லாத போக்குவரத்து வசதியை வழங்குவதற்கான வழிகாட்டுதலை ‘‘சென்னை மாநகராட்சி மோட்டார் அல்லாத போக்குவரத்து கொள்கை’’ யை வகுத்துள்ளது

எனவே, சென்னை மாநகராட்சி மோட்டார் அல்லாத போக்குவரத்து கொள்கையை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிட நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) சுற்றின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்டுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் **19.09.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.09.2014** அன்று தீர்மானஎண்.**421/2014**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.09.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.09.2014** அன்று தீர்மான எண்.**429/2014**ன் படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/3669/1998**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.519/2014 **பொருள் எண்.46**

**நிலம் மற்றும் உடைமைத்துறை –நில உரிமை மாற்றம்–தாண்டவராய பிள்ளை சத்திரம் பகுதி – மண்டலம் –8, கோட்டம் –102– அண்ணா சமூக கூடத்திலிருந்து ஈ.வெ.ரா சாலை வரையிலான கான்வெண்ட் சாலையை விரிவாக்கம் செய்ய அரசு நிலத்தினை நில உரிமை மாற்றம் கோர – அனுமதி**

மண்டலம் –8, கோட்டம் –102–அண்ணா சமூக கூடத்திலிருந்து ஈ.வெ.ரா சாலை வரையிலான கான்வெண்ட் சாலையை விரிவாக்கம் செய்ய அரசு நிலத்தினை நில உரிமை மாற்றம் கோர்வதற்கு பார்வை 1–ல் கண்டுள்ள 764/99 நாள்.29.10.99 மன்றத் தீர்மானத்தின் படி எழும்பூர் கிராமம் பிளாக் எண்.15 புல எண்.232ல் 28 ச.மீட்டர் எழும்பூர்–நுங்கம்பாக்கம் கிராமம் பிளாக் எண். 15 , புல எண்.232–ல் தாண்டவராய பிள்ளைப் பகுதி அல்லது சமூக நலக் கூடத்திலிருந்து ஈ.வெ.ரா சாலை வரையிலும் உள்ள கான்வெண்ட் சாலையை அகலப்படுத்த தேவைப்படும் அரசு நிலத்தினை சென்னை மாவட்ட ஆட்சியர் மூலம் நிலமாற்றம் செய்திட மன்றம் அனுமதியளித்துள்ளது.

மன்ற தீர்மானம் எண்.550/2008ல் மேற்படி புலத்தில் சென்னை மாநகராட்சி சாலை வசதிக்காக 90.0 மீட்டர் நீளம், 4.5மீ அகலம், 405.0 சதுர மீட்டர் கொண்ட பரப்பளவு நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி பெறப்பட்டது.

மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் கான்வெண்ட் சாலையை புல எண்.232ல் ஒரு பகுதியினை சாலை வசதிக்காக 405.0 சதுர மீட்டர் பரப்பளவு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி பெறப்பட்டது. எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் கூட்டு புலத் தணிக்கையில் மேற்கண்ட பணிக்கு 2296 சதுர மீட்டர் (8மனை 712 சதுர அடி) பரப்பளவு நிலம் தேவை எனக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து கான்வெண்ட் சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் 8 மனை 712 சதுர அடி (2296 சதுர மீட்டர்) பரப்பளவு நிலத்தை நில உரிமை மாற்றம் செய்ய 14/2010 எண்ணிட்ட 28.01.2010 நாளிட்ட திருத்திய மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

மண்டலம்–8,கோட்டம்–102 தா.பி.சத்திரம் பிரதான சாலை மற்றும் கான்வெண்ட் தெரு ஆகியவைகளை வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 20.07.2012 அன்று ஆய்வு செய்த போது கான்வெண்ட் தெரு மிகவும் குறுகலாக இருப்பதால் போக்குவதத்து நெரிசல் ஏற்பட்டு வாகன ஒட்டிகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளதால் அச்சாலையை அகலப்படுத்த செயன் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல் நிலைப்பள்ளிக்கு சொந்தமான நிலத்தை ஆர்ஜிதம் செய்து கான்வெண்ட் தெருவினை அகலப்படுத்துமாறு அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து கான்வெண்ட் தெருவினை அகலப்படுத்தும் பொருட்டு சர்வே எண்.232 பிளாக் எண்.15 எழும்பூர் கிராமம் என்ற இடத்தில் கான்வெண்ட் தெருவுக்கு ஒட்டினாற் போல் 265 மீட்டர் நீளமும், 9 மீட்டர் அகலமும் உடைய 2385 சதுர மீட்டர் நிலத்தை நிலம் மற்றும் உடைமைத்துறையின் மூலம் ஆர்ஜிதம் செய்ய 8 வது வார்டு குழு தீர்மானம் எண்.59 நாள்.27.8.2012 ஒப்புதல் அளித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

08.03.2013 நாளிட்ட முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் உத்தரவில் பொது மக்களின் நன்மைக்காக குறிப்பாக சிறார்களுக்காக பாதை, நடைபாதை அமைக்க குறைந்த பட்சம் 12 மீட்டர் அகலத்திற்கு சீராக அகலமான சாலை அமைக்க தேவை என்பதால், திருத்திய கருத்துரு அனுப்புமாறு 8 வது மண்டலத்தை அறிவுறுத்துமாறும், நில உரிமை தொடர்பாக சட்ட கருத்துரை பெறுமாறும் ஆணையிட்டுள்ளார்.

மண்டல அலுவலரின் குறிப்பில் கான்வெண்ட் தெருவினை அகலப்படுத்தும் பொருட்டு 265 மீட்டர் நீளமும், 9 மீட்டர் அகலமும் உடைய 2385 சதுர மீட்டர் நிலத்தை நிலம் மற்றும் உடைமைத்துறையின் மூலம் ஆர்ஜிதம் செய்ய ஏற்கனவே தீர்மான எண்.59 நாள்.27.08.2012–ல் 8வது வார்டு குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின் கான்வெண்ட் தெருவுக்கு ஒட்டினார் போல் 265மீட்டர் நீளமும் 12 மீட்டர் அகலமும் உடைய 3180 சதுர மீட்டர் நிலத்தினை நிலம் மற்றும் உடைமைத்துறையின் மூலம் ஆர்ஜிதம் செய்திட வார்டு குழு தீர்மானம் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி புல எண்232 பிளாக் எண்.15 உள்ள நிலத்தினை பொது மக்களின் நன்மைக்காக குறிப்பாக சிறார்களின் பாதுகாப்புக்காக சாலை நடைபாதை அமைக்க அவசர அவசியத்தின் கருத்தில் கொண்டு மன்றத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் இந்நிலம் அரசு நிலம் என வகைப்பாடு உள்ளதால், மேற்படி இடத்தில் செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி நடைபெற்று வருகிறது. இந்நிலம் தற்போது இப்பள்ளியின் பராமரிப்பில் உள்ளது. இப்பள்ளி நிர்வாகத்தினரால் குறிப்பிடப்படும் ஆசிரமம் ஏதும் அவ்விடத்தில் இயங்குவதாக தெரியவில்லை. மேலும் இப்பள்ளியானது தனியார் பள்ளியாக செயல்பட்டு வருகிறது. தற்போது கிருத்துவ கூட்டங்கள்/பொது நிகழ்ச்சிகள் மற்றும் அரசியல் கூட்டங்களுக்கு பள்ளியின் மைதானம் பெரும் தொகைக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. மேலும் 3 தனியார் நிறுவனங்களுக்கு பள்ளி நிலமானது வாடகை/குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

இந்நிலையில்,

- மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து வார்டுகுழு தீர்மானம் மற்றும் மன்றத் தீர்மானங்களை ரத்து செய்வதற்கும்,
- கான்வென்ட் சாலையை அகலப்படுத்துவதற்கு, 265 மீட்டர் நீளமும், 12 மீட்டர் அகலமும் நிலம் தேவைப்படுவதாலும், இந்நிலம் அரசு நிலம் என்பதாலும், சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சிக்கு நிலமாற்றம் செய்வதற்கு மாவட்ட ஆட்சியரிடம் நில உரிமை மாற்றம் (Alienation) செய்துதர கோருவதற்கும்,
- அவசர அவசியத்தினை கருதி முன்நுழைவு அனுமதி கோருவதற்கும்

நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.431/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.1 /ந.க.எண்.பி1/05452/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24–9–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.520/2014 **பொருள் எண்.47**

**மண்டலம்–1, வார்டு–2ல் பழுதடைந்த சமுதாய நலக்கூடம் மற்றும் மீன் அங்காடி இடிப்பதற்கு அனுமதி**

மண்டலம்–1, வார்டு–2ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடம் மற்றும் மீன் அங்காடி பயன்படுத்த முடியாத படி பழுதடைந்து எந்த நேரமும் இடிந்து விழக்கூடிய அபாயகரமான நிலையில் உள்ளது. எனவே, இப்பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவது அவசியம் மற்றும் அவசரமான செயலாகும், இதன் பிறகு அந்த இடத்தில் புதிதாக சமுதாய நலக்கூடமும் மற்றும் மீன் அங்காடியை கட்டிடத்துறை மூலமாக கட்டப்படும். இக்கட்டிடங்கள் அப்போதைய திருவொற்றியூர் நகராட்சியால் கட்டப்பட்டது. இதனுடைய தற்போதைய புத்தக மற்றும் அனைத்து விவரங்களும் வருமாறு.

| வரிசை எண் | வார்டு எண்–2 | மண்டலம்–1 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, வார்டு–2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1984ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம் 792.10சதுரமீட்டர் (துரைதளம் மட்டும்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1680 சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 4,53,847.00 /– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டிட துறை மூலம் கட்டப்படும் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பாந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | பின்னர் பெறப்படும் |

| வரிசை எண் | வார்டு எண்–2 | மண்டலம்–1 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, வார்டு–2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மீன் அங்காடி |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1966ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம் 529.56 சதுரமீட்டர் |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 2052.52 சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.8790.00/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |

| | | |
|---|---|---|
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதிதாக மீன் அங்காடி கட்டிட துறை மூலம் கட்டப்படும் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பாந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | பின்னர் பெறப்படும் |

எனவே, மண்டலம்–1, வார்டு–2ல் பயன்படுத்த முடியாதபடி பழுதடைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடம் மற்றும் மீன் அங்காடியை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.422/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.1/ந.க.எண். பி1/04828/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24–9–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.521/2014 **பொருள் எண்.48**

**மருத்துவமனை கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி.**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–1, வார்டு–11ல் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய மருத்துவமனை (A) பிளாக் கட்டிடம் தற்போது உபயோகத்தில் உள்ளது. பழைய மருத்துவமனை அமைந்துள்ள இடத்தில் தற்சமயம் புதியதாக 24x7 மணி நேர மகப்பேறு மருத்துவமனை கட்டிடத்துறையால் கட்டப்பட உள்ளது. ஆதலால் இந்த மருத்துவ மனையை தற்காலிகமாக இடமாற்றம் செய்ய திருவொற்றியூர் மண்டல அலுவலக வளாகத்திலுள்ள காலி கட்டிடத்தின், தரைதளம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை திருவொற்றியூர் நகராட்சியால் 1963ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. இதனுடைய புத்தக மதிப்பு மற்றும் அனைத்து விவரங்களும் வருமாறு.

| வ. எண். | விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, வார்டு–11, திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலுள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருத்துவமனை (A) பிளாக் கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | முந்தைய திருவொற்றியூர் நகராட்சியால் 1963ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் மட்டும் 1420 ச.அடி (அ) 131.97 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 12946.75 ச.அடி (அ) 1203.23 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | 19,245.42 |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம், இந்த மருத்துவமனையை தற்காலிகமாக இடம் மாற்றம் செய்ய மண்டல அலுவலகம்–1 கட்டிட வளாகத்தினுள் உள்ள காலி கட்டிடத்தின் தரைதளம் தேர்வு செய்யப்பட்டுள்ளது |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | 24x7 மணி நேர மகப்பேறு மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணிக்காக |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | 24x7 மணி நேர மகப்பேறு மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணிக்காக |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | கட்டிடத்துறை (வட்டார துணை ஆணையர் வடக்கு) |
| 10 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண். (ம) நாள். | பின்னர் பெறப்படும் |

எனவே, மண்டலம்–1, வார்டு–11, திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலுள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருத்துவமனை (A) பிளாக் கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.37/2014–ன்படி வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.424/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ1/30776/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.522/2014 **பொருள் எண்.49**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (ப) எண்.182, பொதுப் பணித் (எ2) துறை, நாள்:27.07.2014ன்படி, திரு.ப்பி.முருகேசன், கண்காணிப்பு பொறியாளர், கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மருத்துவப்பணிகள், திருச்சி அவர்கள் தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை ஆக பதவி உயர்வு பெற்று, சென்னை மாநகராட்சியில், தலைமைப் பொறியாளர் (மழைநீர் வடிகால் மற்றும் கட்டடம்) ஆக அயற்பணியில் 31.07.2014 பிற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ1/38604/2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.523/2014 **பொருள் எண்.50**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (ப) எண். 241, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்:23.06.2014ன்படி, திரு.ஆர்.ஜெயசீலன், உதவி செயற் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அலுவலகம் அவர்கள், சென்னை மாநகராட்சியில், உதவி செயற் பொறியாளராக மண்டலம்–15, பகுதி–44ல் அயற்பணியில் 11.07.2014 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3/52343/2012</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.524/2014 **பொருள் எண்.51**

**<u>பணியமைப்பு</u>**

தெற்கு மற்றும் மேற்கு ஆசிய C40 நாடுகளின் மண்டல இயக்குநர் அவர்கள் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு** அனுப்பப்பட்ட கடிதத்தில் **"சென்னை நகரை"** C40 Global Network of Cityல் ஒரு அங்கத்தினராக சேர்ப்பதற்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதன் தொடர்பாக, **04.09.2014** நாளிட்ட இவ்வலுவலக கடிதம் வாயிலாக அரசின் அனுமதி வேண்டி செயற்குறிப்பு அனுப்பப்பட்டு ஆணை எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் தெற்கு மற்றும் மேற்கு ஆசிய C40 நாடுகளின் மண்டல இயக்குநர் அவர்களின் **26.09.2014** நாளிட்ட கடிதத்தில் திரு.விக்ரம் கபூர்,இ.ஆ.ப., முதன்மைச் செயலர்/ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களை **பிப்ரவரி அல்லது மார்ச் 2015ல்** நியூயார்க் நகரில் நடைபெறவுள்ள C40's Creditworthiness Networkல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பிப்ரவரி **2015**ல் நடைபெறவுள்ள மேற்கண்ட நிகழ்ச்சியில் முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்கள் பங்கேற்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, பிப்ரவரி **2015**ல் நியூயார்க் நகரில் நடைபெறவுள்ள C40's Creditworthiness Networkல் திரு.விக்ரம் கபூர்,இ.ஆ.ப., முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்கள் பங்கேற்பதற்கு ஆணை பெற வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/38809/2014.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.525/2014 **பொருள் எண்.52**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

திரு.எல்.ரட்சகர், செயற் பொறியாளர், வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம் அவர்கள், வயது முதிர்வு காரணமாக வருகின்ற **30.09.2014** அன்று பிற்பகல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். தனியர் வகித்துவரும் பதவி சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளின்படி வகுப்பு–2ன் கீழ் வருவதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

திரு.எல்.ரட்சகர், செயற் பொறியாளர், அவர்கள் சென்னை மாநகராட்சியில் பழைய மாவட்ட அலுவலகத்தில் (தெற்கு) **24.05.1977** அன்று ஓவர்சீயராக பணியில் சேர்ந்து தற்பொழுது வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகத்தில் செயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ள கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை / மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள் / அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | வகித்த பதவியின் பெயர் | பணிபுரிந்த மண்டலம் மற்றும் துறைகளின் பெயர் | பணிபுரிந்த காலம் | |
|---|---|---|---|---|
| 1. | ஓவர்சீயர் | பழைய மாவட்ட அலுவலகம் (தெற்கு) | 24.05.1977 | 07.08.1979 |
| 2. | இளநிலை பொறியாளர் | பழைய மாவட்ட அலுவலகம் (தெற்கு) பழைய மண்டலம்–6, புதிய மண்டலம் – 9. | 08.08.1979 | 31.12.1982 |
| 3. | இளநிலை பொறியாளர் | பணித்துறை | 01.01.1983 | 31.07.1984 |
| 4. | இளநிலை பொறியாளர் | முன்னாள் மாவட்ட அலுவலகம் (வடக்கு) பழைய மண்டலம்–5, புதிய மண்டலம் – 8 | 01.08.1984 | 15.09.1985 |
| 5. | உதவி பொறியாளர் | முன்னாள் மாவட்ட அலுவலகம் (வடக்கு) பழைய மண்டலம்–5, புதிய மண்டலம் – 8 | 16.09.1985 | 22.09.1988 |
| 6. | உதவி பொறியாளர் | பழைய சர்க்கிள் – III, புதிய மண்டலம் – 6 | 23.09.1988 | 18.12.1988 |
| 7. | உதவி பொறியாளர் | பணித்துறை (நகரமைப்பு) | 19.12.1988 | 09.10.1991 |
| 8. | உதவி பொறியாளர் | பழைய மண்டலம்–2 ( புதிய மண்டலம் – 5 | 10.10.1991 | 21.05.1993 |
| 9. | உதவி பொறியாளர் | பழைய மண்டலம் – 8 (புதிய மண்டலம் – 10) | 22.05.1993 | 20.07.1994 |
| 10. | உதவி பொறியாளர் | கட்டிடத்துறை | 21.07.1994 | 09.02.1996 |
| 11. | உதவி பொறியாளர் | பழைய மண்டலம்–1 (புதிய மண்டலம் – 4) | 10.02.1996 | 30.07.1996 |
| 12. | உதவி பொறியாளர் | பழைய மண்டலம்–9 (புதிய மண்டலம் – 13) | 31.07.1996 | 24.04.1997 |
| 13. | உதவி செயற் பொறியாளர் | கட்டிடத்துறை | 25.04.1997 | 10.07.2000 |
| 14. | உதவி செயற் பொறியாளர் | பணித்துறை (நகரமைப்பு) | 11.07.2000 | 23.07.2001 |
| 15. | உதவி செயற் பொறியாளர் | பேருந்து சாலைகள் துறை | 24.07.2001 | 19.11.2010 |
| 16. | செயற் பொறியாளர் | திடக்கழிவு மேலாண்மை துறை | 20.11.2010 | 23.01.2014 |
| 17. | செயற் பொறியாளர் | வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம். | 24.01.2014 | 30.09.2014 |

எனினும், திரு.எல்.ரட்சகர், செயற் பொறியாளர் அவர்கள் பேருந்து சாலைகள் துறையில் பணியாற்றிய காலத்தில், அவரை கூட்டு பொறுப்பாக்கி ரூ.**22507/–** தொகை தணிக்கைத் தடை நிலுவையில் உள்ளது எனவும், தனியரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.**9467/–** எனவும் பேருந்துசாலைகள் துறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலிருந்து பெறப்பட்டுள்ள **03.09.2014** நாளிட்ட குறிப்பில் திரு. எல். ரட்சகர், செயற் பொறியாளராக அவர்களின் மீது ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையினரின் RC.No.195/2002/HQன்படியும் G.O.(D) No.3, Municipal Administration and Water Supply Department, dated:02.01.2008ன்படி ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதாக அறியப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

திரு. எல். ரட்சகர், செயற் பொறியாளர் அவர்கள் சென்னை மாநகராட்சியில், பள்ளி கட்டிடங்கள் கட்டுவதில் முறைக்கேடு நடந்தது சம்பந்தமாக இயக்குநரகம், விழிப்பு மற்றும் லஞ்சம் ஒழிப்புத்துறை மூலமாக விசாரணைகள் நடைபெற்று, தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேற்முறையீடு) விதிகள் **1970**, துணை விதி **10(**b**)**ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தது. இதே குற்றச்சாட்டில் தொடர்புடைய **5** பொறியாளர்களை நீதிமன்ற உத்தரவின்படி அவர்களை ஒழுங்கு நடவடிக்கையிலிருந்து விடுவிக்கப்பட்டதன் அடிப்படையில் இதே குற்றச்சாட்டில் தொடர்புடைய மற்ற 7 பொறியாளர்களில் ஒருவரான திரு.எல்.ரட்சகர், செயற்பொறியாளர் அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையையும் கைவிடும்படி **26.09.2014** நாளிட்ட அரசு கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி திரு.எஸ்.ரட்சகர், செயற்பொறியாளர் அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையும் கைவிடப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

இந்நிலையில், திரு. எல். ரட்சகர், செயற் பொறியாளர், வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. தனியர் பணிபுரிந்த மண்டலங்கள் மற்றும் துறைகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளில் தனியரை பொறுப்பாக்கும் மேலே தெரிவிக்கப்பட்ட தணிக்கை தடைகள் தவிர வேறு தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் தனியர் உறுப்பினர் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது.

எனவே, திரு. எல். ரட்சகர், செயற் பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகளில், தனியரின் பங்குத்தொகை ரூ.**9467/–**ஐ அவருக்கு வழங்கப்படும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், இதுதவிர, அவரை பொறுப்பாக்கும் நிலுவையில் உள்ள தணிக்கை தடை ஏதேனுமில் நிதி இழப்பீடு ஏற்படுத்தியதாக பின்னர் தெரியவரின், அத்தொகையினை அன்னாரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் தனியரை **30.09.2014**பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.15.ந.க.எண்.அ1/5566/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.526/2014 **பொருள் எண்.53**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–15ல் செயற்பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.C. பிரதாப், அவர்கள் **03.12.2013** நாளிட்ட சுற்றறிக்கையின்படி **30.09.2014** அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் **25.05.1977** அன்று வரைவாளர் ஆக பணியமர்வு செய்யப்பட்டார். **07.08.1979**ல் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். **03.07.1995**ல் உதவி பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். **01.06.1999**ல் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். **06.11.2005** முதல் செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து மண்டலம்–**15**ல் பணியாற்றி வருகிறார். தனியர் பல்வேறு துறை/மண்டலங்களில் பணிபுரிந்துள்ள விவரங்கள் கீழ்காணுமாறு தெரிவித்துக்கொளள்ளப்படுகிறது.

| வ. எண் | பதவி | துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 1. | வரைவாளர் | பழைய மண்டலம் – 5 புதிய மண்டலம் – 8 | 25.05.1977 | 7.08.1979 |
| 2. | இளநிலை பொறியாளர் | பழைய மண்டலம் – 5 புதிய மண்டலம் – 8 | 07.08.1979 | 31.12.1986 |
| 3. | இளநிலை பொறியாளர் | பழைய மண்டலம் – 5 புதிய மண்டலம் – 8 | 01.01.1987 | 09.10.1991 |
| 4. | இளநிலை பொறியாளர் | பணித்துறை – நகரமைப்பு பிரிவு | 10.10.1991 | 02.07.1995 |
| 5. | உதவி பொறியாளர் | பழைய மண்டலம் – 5 புதிய மண்டலம் – 8 | 03.07.1995 | 12.12.1996 |
| 6. | உதவி பொறியாளர் | பணித்துறை (Private street) | 12.12.1996 | 01.06.1999 |
| 7. | உதவி செயற் பொறியாளர் | பழைய மண்டலம் – 5 புதிய மண்டலம் – 8 | 01.06.1999 | 10.07.2000 |
| 8. | உதவி செயற் பொறியாளர் | பணித்துறை | 11.07.2000 | 23.07.2001 |
| 9. | உதவி செயற் பொறியாளர் | கட்டிடத்துறை | 23.07.2001 | 16.08.2001 |
| 10. | உதவி செயற் பொறியாளர் | பேருந்து சாலை துறை | 16.08.2001 | 13.01.2004 |
| 11. | உதவி செயற் பொறியாளர் | திடக்கழிவு மேலாண்மை துறை | 13.01.2004 | 06.11.2005 |
| 12. | செயற் பொறியாளர் | புதிய மண்டலம்–8 பழைய மண்டலம்–5 | 06.11.2005 | 17.01.2013 |
| 13. | செயற் பொறியாளர் | கட்டிடத்துறை | 17.01.2013 | 15.05.2013 |
| 14. | செயற்பொறியாளர் | மண்டலம்–15 | 16.05.2013 | |

தனியர் பணிபுரிந்த மேற்கண்ட துறை/ மண்டலங்களிலிருந்து அன்னார் மீதான தணிக்கைத்தடை முன் பணம் ஏதும் நிலுவையில் இல்லை எனவும் அவ்வாறு ஏதாவது இருப்பதாக பின்னர் தெரியவரின் அவற்றிற்கு தனியரை பொறுப்பாக்கி தனியருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பணப்பயன்களில் பிடித்தம் செய்யலாம் எனவும் / பேருந்து சாலைத்துறையில் பணிபுரிந்த **16.08.2001** முதல் **13.01.2004** வரையிலான காலங்களில் **2003–2004**ஆம் ஆண்டு தணிக்கை தடை பத்தி மற்றும் பத்தி எண்.**40, 45, 48**ல் கூட்டுப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது என மேற்பார்வை பொறியாளர், பே.சா.து அவர்கள் **02.07.2014** நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, மேற்பார்வை பொறியாளர், பே.சா.து அவர்கள் **17.09.2014** நாளிட்ட குறிப்பில் தணிக்கை தடைகள் இல்லை என இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மேலும் வரிசை எண் 1 முதல் 8வரை மற்றும் வரிசை எண். 10 முதல் 12 வரையிலான மண்டலங்களில் பணி புரிந்த காலங்களில் தணிக்கைத்தடை எதுவும் இல்லை என இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது. வரிசை எண்.13ல் நடப்பு ஆண்டின் தணிக்கை முடிவுறாத காரணத்தால் தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை. இருப்பினும் அன்னாரை வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிப்பதில் ஆட்சேபனை ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தனியர் மீது சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என 19.08.2014 நாளிட்ட குறிப்பில் விழிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் தனியர் மீது துறை ரீதியான குற்றச்சாட்டுக்கள் / விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் தற்போது உறுப்பினராக இல்லை எனச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்துவரும் பதவி வகுப்பு –2க்கு கீழ்வருவதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, திரு.சி.பிரதாப் செயற்பொறியாளர் மண்டலம்–15 அவர்கள் மீது தணிக்கை தடைகள் சென்னை மாநகராட்சிக்கு சேரவேண்டிய தொகைகள் மற்றும் இழப்பீடுகள் ஆகியவற்றிற்கு தனியர் பொறுப்பாகிறார் என பின்னர் தெரியவரின், அத்தொகையினை தனியரின் பணிக்கொடை (தோராயமாக ரூ.10,00,000/– ரூபாய் பத்து லட்சத்தில் தணிக்கை தடை காரணமாக ரூபாய். 7,62,766/–) மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 30.09.2014 பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.11.ந.க.எண்.அ1/5212/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.527/2014 **பொருள் எண்.54**

**திரு.எஸ்.மோகன், துப்புரவு மேஸ்திரி அவர்கள் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு ஒரு வழி பணியிட மாற்றம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, கோட்டம்–144ல் துப்புரவு மேஸ்திரி பதவி வகிக்கும் திரு.எஸ்.மோகன், அவர்கள் கடந்த 19.06.1981 அன்று காவராக வளசரவாக்கம் நகராட்சியில் பணியில் சேர்ந்து 01.11.1983 அன்று துப்புரவு மேஸ்திரியாக பதவி உயர்வு பெற்று பணியாற்றி வந்தார். பின்னர் சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தின் போது வளசரவாக்கம் நகராட்சி சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட போது, தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிய சம்மதம் தெரிவித்ததன் பேரில் துப்புரவு மேஸ்திரியாக மண்டலம்–11ல் பணிபுரிந்து வருகிறார். தற்போது தனியர் மீது துறை ரீதியிலான நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

23.07.2104 நாளிட்ட திரு.எஸ்மோகன், துப்புரவு மேஸ்திரி, கோட்டம்–144 அவர்கள் மீண்டும் நகராட்சி பணிக்கு செல்ல விருப்பம் தெரிவித்து விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதால் நியமனக்குழு மற்றும் மன்றத்தின் ஒப்புதலோடு நகராட்சி, நிர்வாகத்துறைக்கு பரிந்துரை செய்ய 09.09.2014 நாளிட்ட சென்னை மாநகராட்சி மண்டலம்–11 வார்டு குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

திரு.எஸ்.மோகன், துப்புரவு மேஸ்திரி, கோட்டம்–144 அவர்களை தன் விருப்பத்தின் பேரில் சென்னை மாநகராட்சியிலிருந்து நகராட்சி நிர்வாகத்துறைக்கு பணியிட மாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரகத்துக்கு பரிந்துரை செய்ய நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி 18.09.2014 நாளிட்ட கடிதம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, திரு.எஸ்.மோகன், துப்புரவு மேஸ்திரி கோட்டம்–144 அவர்களை தன்விருப்பத்தின் பேரில் சென்னை மாநகராட்சியிலிருந்து நகராட்சி நிர்வாகத்துறைக்கு பணியிடமாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பரிந்துரை செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.இ12/37837/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்23.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.528/2014 **பொருள் எண்.55**

**இனிவரும் காலத்தில் கருணை அடிப்படையில் பணிவழங்கும் போது பிறப்பு சான்றிதழ் அல்லது கல்வி சான்று இல்லாத பட்சத்தில் மருத்துவ அதிகாரியிடம் வயது நிர்ணய சான்றிதழ் பெற்று அதன் அடிப்படையில் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கவும், ஏற்கனவே மத்திய வட்டார அலுவலகத்தில் நடத்தப்பட்ட சிறப்பு முகாமில் மருத்துவ அதிகாரி சான்றின் அடிப்படையில் கருணை அடிப்படையில் பணி வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் பணியிடை காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு விதிகளின்படி தேவையான ஆவணங்களை பெற்று அனைத்து தேவையான சான்றிதழ்கள் அளித்த தகுதியான வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட தேவையான சான்றிதழ்களில் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் ஒரு முக்கிய ஆவணமாகும். மனுதாரரிடம் பிறப்பு சான்றிதழ் இல்லாத பட்சத்தில் தனியரின் பள்ளிச் சான்றிதழில் உள்ள பிறப்பு தேதியை மனுதாரரின் பிறப்பு தேதியாக பதிவு செய்யப்படுகிறது.

ஆனால் இவ்வாறு கருணை அடிப்படையில் பணி கோரும் சில மனுதாரர்களின் பிறப்பு தேதியை பதிவு செய்யாததால், பிறப்பு சான்றிதழ் கிடைப்பதில்லை. பிறப்பு சான்று இல்லாத இம்மனுதாரர்கள் பள்ளிக்கூடம் செல்லாமல் எந்தவித படிப்பறிவும் இல்லாமல் உள்ளனர். இது போன்ற மனுதாரர்களுக்கு பிறப்பு தேதியை அறிய முடியாமலும், உரிய ஆவணங்கள் இல்லாமல் கருணை அடிப்படையில் பணி வழங்க முடியாமல் இக்கோப்புகள் நிலுவையில் இருந்தன. இவ்வாறு பிறப்பு தேதிக்கான எந்தவித சான்றிதழ் இல்லாத இம்மனுதாரர்களுக்கு கருணைஅடிப்படையில் பணி வழங்க முடியாததால், இக்குடும்பங்கள் வருமானம் இல்லாமல் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் உள்ளனர்.

சென்ற ஆகஸ்ட் மாதம் 2014–ல் நடைபெற்ற முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் நிலுவையிலுள்ள கருணை அடிப்படையின் கோப்புகளின் விவரத்தை ஆய்வு செய்த பொழுது இவ்வாறு படிப்பு சான்றிதழ் மற்றும் கல்வி சான்றிதழ் இல்லாத மனுதாரர்களை மருத்துவ அதிகாரியின் வயது நிர்ணய சான்று பெற்று அதன்படி அவர்களின் வயதை நிர்ணயம் செய்து கருணை அடிப்படையில் பணி வழங்கலாம் என அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் 02.09.2014 அன்று மத்திய வட்டார அலுவலகத்தில் நடைபெற்ற கருணை அடிப்படையில் பணி வழங்கும் கோப்புகள் தீர்வு செய்யும் சிறப்பு முகாமில் சில வாரிசுதாரர்களின் வயது தொடர்பான எந்த சான்றிதழும் அளிக்காததால், அவர்களின் குடும்ப சூழ்நிலை கருதி மருத்துவ அதிகாரி சான்றின் அடிப்படையில் வயது நிர்ணய சான்று பெற்று கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது.

எனவே, இனி வருங்காலங்களில் கருணை அடிப்படையில் பணி கோரும் மனுதாரரிடம் பிறப்பு சான்றிதழ் அல்லது கல்வி சான்று இல்லாத பட்சத்தில் மருத்துவ அதிகாரியிடம் வயது நிர்ணய சான்றிதழ் பெற்று அதன்படி மனுதாரரின் வயதை நிர்ணயம் செய்து கருணை அடிப்படையில் பணி வழங்க மன்றத்தின் ஒப்புதலும், ஏற்கனவே 02.09.2014 அன்று மத்திய வட்டார அலுவலகத்தில் நடந்த சிறப்பு முகாமில் மருத்துவ அதிகாரியின் வயது சான்றிதழ் பெற்ற சில வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘இனிவரும் காலங்களில் மாநகராட்சி மருத்துவ அலுவலர்களின் குழு அமைத்து ஊடு கதிர் (X-Ray) பரிசோதனை மேற்கொண்டு அதன் அடிப்படையில் வயது நிர்ணய சான்று பெற்று கருணை அடிப்படை வேலை வாய்ப்பு வழங்கலாம் என தீர்மானித்தும், 02.09.2014 அன்று மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் சிறப்பு முகாம் நடத்தி மருத்துவ சான்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு கருணை அடிப்படையில் பணி வழங்கிய நிகழ்விற்காகவும் நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.5 ந.க எண்.இ2/10053/2014**

**முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களின்29.9.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.529/2014 **பொருள் எண்.56**

**மண்டலம்–5, வார்டு .58ல் சைடனாம்ஸ் சாலை – ரிப்பன் மாளிகையில் உள்ள பழுதடைந்த வணிக வளாக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி**

| வரிசை எண் | வார்டு–58 | மண்டலம்–5 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–5, வார்டு–58 சைடனாம்ஸ் சாலையில் ரிப்பன் மாளிகையிலுள்ள வணிக வளாக பழுதடைந்த கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1986ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம்–10513 சதுர.அடி,<br>முதல் தளம்– 8813 சதுர.அடி,<br>இரண்டாவது தளம்– 8813 சதுர.அடி |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு ? | 10513 சதுர.அடி. |
| 5 | கட்டிடத்தின் தற்போதய புத்தக மதிப்பு | ரூ.2,21,430.00 |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன் பாட்டில் உள்ளது. |
| 7 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து உள்ளது. |
| 8 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக வணிக வளாகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–5 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 5வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 254 நாள்.19.9.2014. |

எனவே மண்டலம்–5, வார்டு–58ல் சைடனாம்ஸ் சாலையில் ரிப்பன் மாளிகையிலுள்ள பழுதடைந்த வணிக வளாக கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.433/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.5 ந.க எண்.இ2/10052/2014**
**முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களின்29.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.530/2014 **பொருள் எண்.57**

**மண்டலம்–5வார்டு எண்.58 கண்ணப்பர் திடலில் உள்ள வணிக வளாகத்தில் – பழுதடைந்த 'ஏ' பிளாக் கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி**

| வரிசை எண் | வார்டு–58 | மண்டலம்–5 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–5, வார்டு–58 கண்ணப்பர் திடலில் உள்ள வணிக வளாகத்தில் பழுதடைந்த 'ஏ' பிளாக் கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1986ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம்–5764 சதுர.அடி,<br>முதல் தளம்– 5764 சதுர.அடி,<br>இரண்டாவது தளம்– 5764 சதுர.அடி |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு ? | 5764 சதுர.அடி. |
| 5 | கட்டிடத்தின் தற்போதய புத்தக மதிப்பு | ரூ.1,31,797.00 |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. |
| 8 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக வணிக வளாகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–5 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 5வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.255<br>நாள்– 19.9.2014 |

எனவே, மண்டலம்–5, வார்டு–58ல் கண்ணப்பர் திடலில் உள்ள வணிக வளாகத்தில் பழுதடைந்துள்ள 'ஏ' பிளாக் கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.432/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.5 ந.க எண்.இ2/10054/2014</u>**

**<u>முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களின் 29.9.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.531/2014 **பொருள் எண்.58**

**<u>மண்டலம்–5 வார்டு.58ல் பிரகாசம் சாலையில் பி.ஆர்.என். தோட்டத்தில் அமைந்துள்ள பழுதடைந்த வணிக வளாக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி</u>**

| வரிசை எண் | வார்டு–58 | மண்டலம்–5 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–5 வார்டு.58ல் பிரகாசம் சாலையில் பி.ஆர்.என். தோட்டத்தில் அமைந்துள்ள பழுதடைந்த வணிக வளாக கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | சுமார் 1990ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம்–5500 சதுர.அடி |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு ? | 5500 சதுர.அடி. |
| 5 | கட்டிடத்தின் தற்போதய புத்தக மதிப்பு | ரூ.1,40,520.00 |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன் பாட்டில் உள்ளது. |
| 7 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து உள்ளது. |
| 8 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக வணிக வளாகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–5 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 5வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 253 நாள்.19.9.2014 |

எனவே, மண்டலம்–5 வார்டு.58ல் பிரகாசம் சாலையில் பி.ஆர்.என். தோட்டத்தில் அமைந்துள்ள பழுதடைந்த வணிக வளாக கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.434/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.6.ந.க.எண்.இ3/10130/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.532/2014 **பொருள் எண்.59**

**மண்டலம்–6, வார்டு–65 – ஜி.கே.எம். காலனி 27வது தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த சென்னை துவக்கப் பள்ளி கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

| வ. எண். | வார்டு–65 | மண்டலம்–6 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–6, வார்டு–65, ஜி.கே.எம். காலனி 27வது தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த சென்னை துவக்கப் பள்ளி கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | சுமார் 32 வருடங்களுக்கு முன்பு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 4800 சதுர அடி (தரை மற்றும் முதல் தளம்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 6000 சதுர அடி |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | தோராய மதிப்பு ரூ.3.00 இலட்சம் |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | தரை தளம் மட்டும் பயன்பாட்டில் உள்ளது |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | மாநகர ஆரம்ப சுகாதார மையம் மற்றும் துவக்கப்பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்காக. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–6 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.105 நாள்.18.08.2014 |

எனவே, மண்டலம்–6, வார்டு–65, ஜி.கே.எம். காலனி 27வது தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த சென்னை துவக்கப் பள்ளி கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 12.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.31/2014–ன்படி நிலைக்குழு (கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.428/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.10.ந.க.எண்.அ1/1217/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.533/2014 **பொருள் எண்.60**

**<u>மண்டலம்–10, வார்டு–130 – பழனியாண்டவர் கோயில் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் – குத்தகை காலம் முடிவுற்றது – தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தை திரும்ப எடுத்துக் கொண்டு புதிய கட்டுமானம் மேற்கொள்ள அனுமதி.</u>**

மண்டலம்–10, வார்டு–130, எண்.34, பழனிஆண்டவர் கோயில் தெருவில் உள்ள 3938 சதுரஅடி கொண்ட சென்னை மாநகராட்சி தனி நிலம் கடந்த 1959 ஆம் ஆண்டு மன்றத் தீர்மானம் பெற்று காலம் சென்ற திரு.சின்ன சாமி ரெட்டி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டது. அன்னாரது மறைவுக்கு பின்னர்அவரது மகன் திரு.ஜெயராமரெட்டி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது குத்தகை காலம் முடிவுற்றதைத் தொடந்து தொடர்புடைய நபர் சென்னை மாநகராட்சிக்கு திரும்ப ஒப்படைக்காமல் வேறு தனிநபர்கள் ஆக்கிரமித்துள்ளது தெரியவந்த நிலையில் மீண்டும் சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுத்து இந்நிலத்தில் 10வது மண்டலத்திற்கு தேவையான அலுவலகக் கட்டிடம், பிறபயன்பாட்டுக் கட்டிடம் மற்றும் வணிக வளாகம் கட்டுவதற்கு 23.09.2014 அன்று நடைபெற்ற 10வது மண்டல வார்டு குழுவில் தீர்மான எண்.94ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–10, வார்டு–130, எண்.34, பழனிஆண்டவர் கோயில் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 3938 சதுரஅடி கொண்ட தனி நிலத்தில் 10வது மண்டலத்திற்கு தேவையான 130வது வார்டு அலுவலகக் கட்டிடம், பிறப்பயன்பாட்டுக் கட்டிடம் மற்றும் வணிகவளாகம் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ப.து.சி.தி,ந.க.எண். பி1/3422/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.534/2014 **பொருள் எண்.61**

**<u>சிறப்பு திட்டங்கள் துறை – மதிப்பீடு – 2014–2015ம் ஆண்டிற்கான பணி – மண்டலம்–4,5,6,8,9,10 மற்றும் 13 –ல் இடப்பெற்றுள்ள 20 சாலைகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு (TURIF) நிதியில் நடைபாதை அமைக்கும் பணிக்கு – 2014–2015ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் 20 மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி</u>**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு நிதியின் (TURIF) மூலம் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு நிதி 2012–13 (TURIP -2012-13) ன் கீழ் 65.79 கி.மீ. நீளமுள்ள 106 பேருந்து சாலைகள் சீர்செய்வதற்கு ரூ.59.59 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 48.52 கி.மீ. நீளமுள்ள 71 பேருந்து சாலைகளில் ரூ.42.75 கோடி மதிப்பீட்டில் நடைபாதை அமைப்பதற்கு ஆக மொத்தம் 102.34 கோடி மதிப்பீடு பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ROC No.23125/2011/E3 நாள்.25.10.2012 செயல்முறை ஆணைபடி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி , சென்னை மாநகரில் பழுதடைந்துள்ள 106 பேருந்து தட சாலைகள் புதுப்பிக்கும் பணி மற்றும் 71 நடைபாதைகள் மேம்படுத்தும் பணிக்காக தமிழ்நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2012 –13ன் கீழ் ரூ.102.34 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதியுடன் ஒப்பங்கள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் ஒப்பந்தத்தில் உள்ள அளவுகளை காட்டிலும் கூடுதல் பரப்பளவு மற்றும் தொழில்நுட்ப வரைமுறைகளின் மாற்றத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினங்களுக்கு மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

சிறப்பு சாலைகள் திட்டம் 2012–13 ன் கீழ் வழங்கப்பட்ட 5 ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கப்பட்ட 71 நடைபாதை பணிகளில் 26 எண்ணிக்கையிலான பணிகள் மட்டும் நடைபெற்று வந்துள்ளது. மீதமுள்ள 45 நடைபாதை பணிகள் பல்வேறு துறையினரின் அனுமதி குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காத காரணத்தாலும் மற்றும் வடிவமைப்பாளர்களிடமிருந்து வடிவமைப்பு பெற்று இதன் அடிப்படையில் மறுமதிப்பீடுகள் தயாரிக்க வேண்டி உள்ளதாலும் 45 எண்ணிக்கையிலான நடைபாதை பணிகளை செயல்படுத்த இயலவில்லை. செயல்படுத்த முடியாத 45 நடைபாதை பணிகளை ரத்து செய்து மறுமதிப்பீடுகள் தயாரிக்கவும் மறு ஒப்பம் கோரவும் மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

பொது மக்கள் நலன் கருதி சாலையில் பாதசாரிகள் நடப்பதனால் ஏற்படும் இன்னல்களை தவிர்க்கும் வகையில் பாதசாரிகளின் பயன்பாட்டுக்காக நடைபாதைகள் அமைப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டது. இந்திட்டங்கள் நிறைவேற்றுவதற்கான நிதி TURIP 2012-13 மூலம் பெறப்பட்டது. அதன் ஒரு பகுதியாக மண்டலம் – 4,5,6,8,9,10 (ம) 13ல் அமைவிருக்கும் 20 நடைபாதைகளின் வடிவமைப்பு கலந்தறிதற்குரியவர் (Consultant) மூலம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

கீழ்கண்ட அட்டவணையில் தயாரிக்கப்பட்டுள்ள 20 பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணிகளின் பெயர்

<u>நடைபாதை அமைக்கும் பணிகளின் பட்டியல் (அட்டவணை)</u>

| வ. எண் | மண்டல எண் | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சங்களில்) |
|---|---|---|---|---|
| 1 | IV | 36 | சிட்கோ பிரதான சாலையில் மீனாம்பாள் சாலை சந்திப்பு முதல் தண்டையார் பேட்டை நெடுஞ்சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | **178.00** |
| 2 | IV | 40 | நியூ வைத்தியநாதன் தெருவில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை சந்திப்பு முதல் சேனியம்மன் கோயில் தெரு சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | **45.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | IV | 45 | டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் மூர்த்திங்கர் தெரு சந்திப்பு முதல் சுந்தரம் தெரு சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 143.00 |
| 4 | V | 56 (ம) 60 | இப்ராஹிம்ஜி சாகிப் சாலையில் ராஜாஜி சாலை சந்திப்பு முதல் பிரகாசம் சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 245.00 |
| 5 | V | 58 | புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் தானா தெரு சந்திப்பு முதல் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 160.00 |
| 6 | VI | 70 | பெரம்பூர் நெடுஞ்சாலையில் (தெற்கு) குக்ஸ் ரோடு சந்திப்பு முதல் சந்திர யோகி சமாதி தெரு வரை நடைபாதை அமைக்கும் பணி | 271.00 |
| 7 | VI | 78 | சூளை நெடுஞ்சாலையில் ராஜா முத்தைய்யா சாலை சந்திப்பு முதல் நாராயண குரு சாலை வரை நடைபாதை அமைக்கும் பணி | 129.00 |
| 8 | VIII | 103 | பர்னபி சாலையில் பெரியார் ஈ.வெ.ரா சாலை சந்திப்பு முதல் ஆர்ம்ஸ் ரோடு சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 220.00 |
| 9 | VIII | 104 | கங்காதீஸ்வரர் கோயில் தெருவில் புரசைவாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு முதல் டாக்டர் அழகப்பா ரோடு சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 208.00 |
| 10 | VIII | 103 | மில்லர்ஸ் சாலையில் ஆர்ம்ஸ் ரோடு சந்திப்பு முதல் புரசைவாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 178.00 |
| 11 | IX | 111 | பின்னி சாலையில் அண்ணா சாலை சந்திப்பு முதல் எத்திராஜ் சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 139.00 |
| 12 | IX | 111 | பட்டுல்லாஸ் சாலையில் அண்ணா சாலை சந்திப்பு முதல் ஒயிட்ஸ் ரோடு சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 96.00 |
| 13 | IX | 113 | திருமலை சாலையில் டாக்டர்.எம்.ஜி.ஆர் சாலை சந்திப்பு முதல் கோபதி நாரயண சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 186.00 |
| 14 | IX | 119 | திரு.வி.க நெடுஞ்சாலையில் பீட்டர்ஸ் ரோடு சந்திப்பு முதல் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 334.00 |
| 15 | X | 131 (ம) 132 | பி.டி.ராஜன் சாலையில் உள்வட்ட சாலை சந்திப்பு முதல் அண்ணா பிரதான சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 472.00 |
| 16 | X | 131 (ம) 137 | லஷ்மண சாமி சாலை யில் முனுசாமி சாலை சந்திப்பு முதல் பி.டி.ராஜன் சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 462.00 |
| 17 | X | 131 (ம) 137 | ராமசாமி சாலையில் முனுசாமி சாலை சந்திப்பு முதல் பி.டி.ராஜன் சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 356.00 |
| 18 | XIII | 180 | மேற்கு நிழற்சாலையில் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை சந்திப்பு முதல் ராஜீவ் காந்தி சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 229.00 |
| 19 | XIII | 180 | கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையில் மேற்கு நிழற்சாலை சாலை சந்திப்பு முதல் லேட்டிஸ் பாலச் சாலை சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 171.00 |
| 20 | IX | 123 | லஸ் சர்ச் சாலையில் கச்சேரி ரோடு சந்திப்பு முதல் டி.டி.கே.ரோடு சந்திப்பு வரை நடைபாதை அமைக்கும் பணி | 548.00 |

| | | | |
|---|---|---|---|
| 02 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | மேற்பார்வைபொறியாளர் /சிறப்பு திட்டங்கள் |
| 03 | எந்த துறைக்காக இப்பணிகள் செயலாக்கம் | : | சிறப்பு திட்டங்கள் துறை |
| 04 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம், அளிக்கப்பட்டது |
| 05 | தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் நாள் | : | பின்னர் பெறப்படும் |
| 06 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014 – 2015 |
| 07 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணிகள் |
| 08 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள் | : | வார்டு குழுவின் தீர்மானம் பின்னர் பெறப்படும். |
| 09 | வரைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 10 | நிதியின் மூலத்தன்மை | : | TURIF GRANTS -2012-13 (தமிழ்நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு நிதி ) |

மேற்கூறிய அட்டவணையில் இடம் பெற்றுள்ள 20 பணிகளுக்கான, 2014–2015ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள 20 மதிப்பீட்டுகளுக்கு, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன் படி நிர்வாக அனுமதி ஒப்புதல் வேண்டி, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.431/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.433/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

**ம.அ.10.ந.க.எண்.அ1/ 8964/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 25.9.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.535/2014 **பொருள் எண்.62**

**மதிப்பீடு – மண்டலம் – 10 – பகுதி –30,கோட்டம்–142, மூலதனநிதியின் மேற்கொள்ளும் வகையில் 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் மேற்கு ஜோன்ஸ் சாலையில் புதிய நகர்ப்புற சுகாதார முதன்மை நிலைய கட்டிம்கட்டுமான கண்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,57,49,000/–ற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம் –10, கோட்டம் –142ல் மூலதனநிதியின் மேற்கொள்ளும் வகையில் 2013–2014ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | 142 | மேற்கு ஜோன்ஸ் சாலையில் புதிய நகர்ப்புற சுகாதார முதன்மை நிலைய தரைத்தளம், முதல் தளம்,படிக்கட்டு அறை, கைப்பிடி மற்றும் லிப்ட் இயந்திர அறை அடித்தளமட்டத்திற்கு கட்டிடம் கட்டுமான பணி மற்றும் குழாய்கள் மற்றும் வடிகால் கட்டுமான பணி. | – | – | ரூ.1,57,49,000/– |
| | | மொத்தம் | | | ரூ.1,57,49,000/– |

2. பரிந்துரை செய்தவரின் விவரம் : செயற்பொறியாளர் /மண்டலம்–10
3. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : மண்டலம்–10
4. சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி : பெறப்பட்டது
5. தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி / செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி : தலைமைப்பொறியாளர், (T.S.NO.004/2014-15 நாள்.09.09.2014)
6. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது விலைப்பட்டியல் : 2013–2014 விலைப்பட்டியல்
7. மதிப்பீட்டின் தொகை : ரூ.1,57,49,000/–
   அ) பணி செலவினம் மட்டும் : ரூ. 13542439.65
   ஆ) மேற்பார்வை செலவு : ரூ. 1354243.97
   இ) சில்லரை மேற்பார்வை செலவு : ரூ. 338560.99
   ஈ) மற்ற எதிர்பாரா செலவு : –
   உ) தரகட்டுபாடு செலவினம் : ரூ.135424.40
   ஊ) மின்சார கட்டணம் : –
   எ) எதிர்பாரா செலவு : –
8. மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியாக அல்லது சாலை பகுதியா ? அதன் அளவு குறிப்பிடவும் : பொருந்தாது

| | | |
|---|---|---|
| **9.** ஒரு சதுர மீட்டருக்கு மதிப்பீடு | : | ரூ.1945.55 |
| அ) குறிப்பு | : | |
| **10.** வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| **11.** மதிப்பீட்டிற்காகற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி | : | வார்டு குழு 10ன் தீர்மான எண்.1 703, நாள்.05.06.2014 |
| **12.** ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது ? | : | புதிய பணி |
| **13.** நிதியின் மூலத் தன்மை | : | மூலதன நிதி 2014–2015 |
| அ) வரவு செலவு ஒதுக்கீடு | : | – |
| ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | : | ரூ.15,00,00,000/– |
| இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ) | : | ரூ.14,99,50,216/– |
| ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு | : | ரூ. 49,784/– |
| தேவைப்படும் நிதி | : | ரூ.1,57,49,000/– |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 1,57,49,000/– க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தேழு லட்சத்து நாற்பத்தொன்பதாயிரம் மட்டும்) நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.429/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.438/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1669/2013**
**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 18.07.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.536/2014 **பொருள் எண்.63**

**மதிப்பீடு**

மண்டலம்–15, வார்டு–192ல் ரெங்கரெட்டி கார்டன் பிரதான சாலை ரெங்கரெட்டி கார்டன் 3வது குறுக்கு தெரு முதல் தெற்கு பக்கிங்காம் கால்வாய் வரை 1500மிமீ க்கு 1500மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் Precast மழைநீர்வடிகால்வாய் புதியதாக கட்டும் பணி 2013–2014ஆம் ஆண்டு விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்ட ரூ.1,17,79,000/– மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919ன் விதி 78 ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.427/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.436/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**இ.டி.பி.சி. எண்.சி1/1054/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.537/2014 **பொருள் எண்.64**

**இடிபி செல் (EDP CELL) –கணினிகள் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட கருவிகளின் (வன்பொருள் மற்றும் மென்பொருள்) வசதி மேலாண்மை சேவை – M/s. CMS Infosystem Pvt Ltd நிறுவனத்தின் சேவையை கால நீட்டிப்பு செய்வது சம்பந்தமாக – கூடுதல் செலவீனங்கள் மற்றும் பணி கால நீடிப்பு வழங்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் பொதுமக்கள் பயன்படுத்தும் சேவைகள், பணிகள், வருவாய், நிதி, வரிகள் வசூலித்தல் போன்றவைக்கு மின் ஆளுமை நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக கணினிகளின் உபயோகம் அதிகமாகி உள்ளது. கணினி அதன் சம்மந்தப்பட்ட சாதனங்கள், வலையமைப்பு மற்றும் அதன் சம்மந்தப்பட்ட சாதனங்கள், server ஆகியவற்றின் தொடர்ச்சியான சேவை செயல்பாடு முக்கியத்துவம் அடைகிறது. தற்பொழுது ரிப்பன் கட்டித்தில் மற்றும் மண்டலங்களில் உள்ள கணினிகள் மற்றும் இதர சாதனங்கள் அனைத்தையும் வசதி மேலாண்மை சேவை மூலம் பராமரிக்க ஒப்பந்தம் கோரப்பட்டு குறைந்த விலைப் புள்ளி அளித்து. M/s. CMS Infosystem Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு ஒருவருட காலத்திற்கு ரூ.1,11,11514/– தொகைக்கு (–)20.49% சதவீததில் வசதி மேலாண்மை சேவைக்காக ஒப்பத்திற்கு பார்வை–3ல் கண்டுள்ள மன்ற தீர்மானத்தின்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மன்ற குறிப்பில் ஓராண்டு பணிக்காலம் முடிந்தததும் தேவைப்படின் மேலும் ஓராண்டு காலம் பணி நீட்டிப்பு நிர்வாக அனுமதி பெற்று மேற்கொள்ளலாம் என குறிப்பிட்டுள்ளது. ஒப்பந்தத்திற்கான பணி ஆணை M/s. CMS Infosystem Pvt Ltd நிறுவனத்திற்கு 15.06.2013 அன்று வழங்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் ஓராண்டுக்கான ஒப்பந்தம் 14.06.2014 அன்று நிறைவு பெற்றது. இந்நிலையில் மூன்று மாத காலத்திற்கு முதன்மை செயலர் மற்றும் ஆணையரின் நாள் 29.05.2014 ஒப்புதல் பெற்று மன்றத்தின் பின்னேற்பை எதிர்நோக்கி பணி நீடிப்பு 16.06.2014 முதல் 15.09.2014 வரை வழங்கப்பட்டது.

இந்த பணிக்கான புதிய ஒப்பம் கோரப்பட்டு இரண்டு மின் ஒப்பங்கள் பெறப்பட்டு தொழில்நுட்ப தகுதி அடிப்படையில் தகுதியான இரண்டு ஒப்பங்களின் விலைப்புள்ளிகளும் 17.09.2014 அன்று திறக்கப்பட்டன. இதில் M/s. Value Point Systems Pvt Ltd நிறுவனம் (-) 27.60% குறைவான சதவீதம் குறிப்பட்டிருந்தனர். M/s ACCEL FRONT LINE LTD நிறுவனம் (-)9.06 % குறைவான சதவீதம் குறிப்பட்டிருந்தனர். இதில் குறைந்த ஒப்பந்ததாரரான M/s. Value Point Systems Pvt Ltd நிறுவனம் 27.60% குறைவான சதவீதத்தில் நல்லதோர் நிறைவான தொழில்நுட்ப சேவை தர இயலாது என கருதப்படுவதால் இந்த ஒப்பத்தை கைவிட மற்றும் திருத்திய ஒப்ப விதிகளில் படி மீண்டும் ஒப்பம் கோர முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சென்னை மாநகராட்சியின் அனைத்து அலுவலகங்களும் கணினி மூலம் நடைபெறுவதால் வன்பொருள் மற்றும் மென்பொருள் பராமரிப்பு அவசியமான ஒன்றாக உள்ளது.

எனவே பராமரிப்பின் அவசியம் மற்றும் முக்கியம் கருதி தற்பொழுது இப்பணியினைச் செய்து வரும் M/s. CMS Infosystem Pvt Ltd நிறுவனம் மூன்று மாத கால நீட்டிப்பு முடிந்து மேலும் ஆறு மாதம் காலம் சேவை செய்ய ஒப்புக்கொண்டுள்ளதால் நடப்பில் உள்ள ஒப்ப அதே விலைப்பட்டியல் படி, அதாவது (–) 20.49% சதவீததில் பணி மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, M/s. CMS Infosystem Pvt Ltd நிறுவனத்திற்கு புதிய ஒப்பம் இறுதி செய்யப்படும் வரையிலான தோராய நீட்டிப்பு காலம் ஒன்பது மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்க அனுமதி கோரப்படுகிறது.

1) M/s. Value Point Systems Pvt Ltd (-)27.60% குறைவான சதவீதம் குறிப்பட்டுள்ளதால் நல்லதோர் நிறைவான தொழில்நுட்ப சேவை செய்ய இயலாது என கருதப்படுவதால் இந்த ஒப்பத்தை கைவிட மற்றும் திருத்திய விதிகளின் படி மீண்டும் ஒப்பம் கோர அனுமதியும்.

2) சென்னை மாநகராட்சி தலைமையிடம், மண்டலம், வட்டார அலுவலகங்களிலுள்ள கணினி அதன் சம்பந்தப்பட்ட சாதனங்களின் (வன்பொருள் மற்றும் மென்பொருள்) பராமரிப்பை (M/s. CMS Infosystem Pvt Ltd) நிறுவனம் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த விதிகளின் அடிப்படையில் 16.06.2014 முதல் 31.12.2014 வரை ஆறு மாதங்களுக்கு வசதி மேலாண்மை சேவை மேற்கொள்ள ஒப்பந்த நீடிப்பு ஆணை வழங்கவும்.

3) இதற்கு ஆகும் செலவீனத்தை இ.டி.பி செல்லின் 2014–15 நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்.

எனவே, மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.430/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.437/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"M/s CMS Info system Pvt Ltd நிறுவனத்திற்கு வழங்கப்படும் பணி நீட்டிப்பு காலம் 31.12.2014க்குள் புதிய ஒப்பம் இறுதி செய்யப்பட்டு பணிஆணை வழங்கப்பட்டால் அன்றைய தேதி முதல் நீட்டிப்பு ரத்து செய்யப்படும் என தீர்மானித்து இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்.1/2115/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 29.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.538/2014 **பொருள் எண்.65**

**இயந்திர பொறியியல் துறை – மின்துறை– பயன்பாட்டிற்கென – 12 மீட்டர் உயரத்தில் தெருவிளக்குகள் பழுதுபார்க்கும் பணிக்காக 15 எண்ணிக்கையில் வாகனங்களின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் (Hydraulic) – இயங்கும் ஏணிவண்டிகள் கொள்முதல் செய்ய அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2012–13ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கையில் மின்சாரத்துறை என்னும் தலைப்பின் கீழ் பத்தி எண். 48ல் சென்னை மாநகர விரிவாகத்திற்கு பின் ஏற்பட்டுள்ள கூடுதல் தேவையினை கருத்தில் கொண்டு டீசல் ஊர்தியில் பொருத்தப்பட்டு, திரவ அழுத்த முறையில் இயங்குதல் வகையான உபகரணங்கள் 12 மீட்டர் உயரமுள்ள தெரு மின்விளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார்கள். இதன் அடிப்படையில் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 30.03.2012 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு இவ்வுபகரணங்கள் கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டது. சில உபகரணங்களில் சில தொழில்நுட்ப மாற்றங்கள் செய்ய வேண்டி இவ்வொப்பம் மன்றத்தீர்மானத்தின்படி ரத்து செய்யப்பட்டு, மறு ஒப்பம் கோரப்பட்டது. மறு ஒப்பத்தில் இரு நிறுவனங்கள் கலந்து கொண்ட நிலையில் கொள்முதல் விலையில் உள்ள மாற்றங்கள் காரணமாக இவ்வொப்பமும் தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் ஆணைபடி ரத்து செய்யப்பட்டு, அன்றை நிலையில் தேவைக்கேற்ப இவ்வகை உபகரணங்களை வாடகை முறையில் அமர்த்திக் கொள்ளுமாறு மின்துறையை கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் மண்டலங்களில் இவ்வகை உபகரணங்கள் வாடகை முறையில் அமர்த்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) அவர்கள் சென்னை மாநகராட்சியில் உள்ள முக்கியமான பகுதிகளில் உள்ள பழுதடைந்த தெருவிளக்குகள் சரி செய்வதற்கு ஹைட்ராலிக் ஏணி பொறுத்தப்பட்டுள்ள இலகுரக / கனரக வாகனங்களை கொண்டு பயன்படுத்தப்படுவதாகவும், இவ்வாகனங்கள் கொள்முதல் செய்து 10 முதல் 15 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அடிக்கடி பழுதடைந்து விடுவதால் குறித்த நேரத்தில் மின்விளக்குகள் சரி செய்ய இயலாத நிலை உள்ளதாகவும் மற்றும் சில மண்டலங்களில் இலகுரக / கனரக வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மடிக்கக்கூடிய ஏணிகளைக்கொண்டு வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்தப்பட்டு பழுதுகள் சரிசெய்யப்படுவதாகவும், விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் சென்னை மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு புதியதாக மின்விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாகவும், இவைகளை சரி செய்தல், அருகிலுள்ள மண்டலங்களிலிருந்து வாகனங்கள் பெறப்பட்டு பழுதுகள் சீர் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்பொழுது எழுந்துள்ள தேவைகள் மற்றும் மின்விளக்கு பழுதுகள் குறித்த புகார்களை உடனடியாக சரிசெய்ய 12 மீட்டர் உயரமுள்ள 15 எண்ணிக்கையில் புதியதாக கனரக வாகனத்தின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் (Hydraulic) இயங்கும் ஏணிவண்டிகள் 4 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்து தருமாறு கோரியுள்ளார்கள்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2012–13ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கையில் மின்சாரத்துறை என்னும் தலைப்பின் கீழ் பத்தி எண். 48ல் 15 எண்ணிக்கையில் புதியதாக வாகனத்தின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் (Hydraulic) இயங்கும் ஏணிவண்டிகள் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார். தற்போது மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) இவ்வகை வாகனங்களை 4 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடிய வாகனங்கள் கொள்முதல் செய்து தருமாறு கோரியுள்ளார்.

இவ்வகை உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் தோராய மதிப்பீடு ஒரு வாகனத்திற்கு ரூ.40.00 இலட்சம் வீதம் 15 வாகனங்களுக்கு ரூ.600 இலட்சங்கள் ஆகும். மற்றும் 4 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான தோராய மதிப்பீடு ரூ. 268 இலட்சங்கள் ஆகும்.

இவ்வாகனத்தின் தொழில் நுட்பம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விவரங்களை (Equipment specification and Safety features) இறுதி செய்வதற்கு கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து, அதன் பின் ஒப்பம் கோரலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

01. மேற்பார்வை பொறியாளர் (சா (ம) பா) தலைமையிடம்,
02. மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) தலைமையிடம்,
03. மேற்பார்வை பொறியாளர் (திகமே/இ/வரைபடம்) வடக்கு,
04. மேற்பார்வை பொறியாளர் (திகமே/இ/வரைபடம்) மத்தியம்,
05. மேற்பார்வை பொறியாளர் (திகமே/இ/வரைபடம்) தெற்கு,

இக்கொள்முதலுக்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறைக்கான மூலதன ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012–13ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள அறிவிப்பின்படி மின்துறைக்கென 12 மீட்டர் உயரமுள்ள தெருவிளக்குகள் பழுதுபார்க்கும் பணிக்காக பணிக்காக 15 எண்ணிக்கையில் வாகனங்களின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் இயங்கும் ஏணிவண்டிகள் 4 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி ரூ.868.5 இலட்சங்கள் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

1. இக்கொள்முதலுக்கானசெலவீனத்தை 2014–15ம் ஆண்டிற்கான இயந்திரப் பொறியியல் துறைக்கான ஒதுக்கப்பட்டுள்ள மூலதன நிதி ஒதுக்கீட்டில் இருந்து மேற்கொள்ளவும்,
2. இவ்வாகனத்தின் தொழில் நுட்பம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விவரங்களை (Equipment specification and Safety features) இறுதி செய்வதற்கு மேற்கண்ட 5 பேர் கொண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து, அதன் பின் ஒப்பம் கோரவும்.

எனவே, மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.425/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.434/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்.1/ 2116 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 29.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.539/2014 **பொருள் எண்.66**

**இயந்திர பொறியியல் துறை – மின்துறை– பயன்பாட்டிற்கென – 7 மீட்டர் உயரத்தில் தெருவிளக்குகள் பழுதுபார்க்கும் பணிக்காக 15 எண்ணிக்கையில் வாகனங்களின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் (Hydraulic) – இயங்கும் ஏணிவண்டிகள் கொள்முதல் செய்ய அனுமதி.**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2012–13ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கையில் மின்சாரத்துறை என்னும் தலைப்பின் கீழ் பத்தி எண். 48ல் சென்னை மாநகர விரிவாகத்திற்கு பின் ஏற்பட்டுள்ள கூடுதல் தேவையினை கருத்தில் கொண்டு டீசல் ஊர்தியில் பொருத்தப்பட்டு, திரவ அழுத்த முறையில் இயங்குதல் வகையான உபகரணங்கள் 9 மீட்டர் உயரமுள்ள தெரு மின்விளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார்கள். இதன் அடிப்படையில் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 30.03.2012 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு இவ்வுபகரணங்கள் கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டது. சில உபகரணங்களில் சில தொழில்நுட்ப மாற்றங்கள் செய்ய வேண்டி இவ்வொப்பம் மன்றத்தீர்மானத்தின்படி ரத்து செய்யப்பட்டு, மறு ஒப்பம் கோரப்பட்டது. மறு ஒப்பத்தில் இரு நிறுவனங்கள் கலந்து கொண்ட நிலையில் கொள்முதல் விலையில் உள்ள மாற்றங்கள் காரணமாக இவ்வொப்பமும் தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் ஆணைபடி ரத்து செய்யப்பட்டு, அன்றை நிலையில் தேவைக்கேற்ப இவ்வகை உபகரணங்களை வாடகை முறையில் அமர்த்திக் கொள்ளுமாறு மின்துறையை கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் மண்டலங்களில் இவ்வகை உபகரணங்கள் வாடகை முறையில் அமர்த்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) அவர்கள் சென்னை மாநகராட்சியில் உள்ள முக்கியமான பகுதிகளில் உள்ள பழுதடைந்த தெருவிளக்குகள் சரி செய்வதற்கு ஹைட்ராலிக் ஏணி பொறுத்தப்பட்டுள்ள இலகுரக / கனரக வாகனங்களை கொண்டு பயன்படுத்தப்படுவதாகவும், இவ்வாகனங்கள் கொள்முதல் செய்து 10 முதல் 15 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அடிக்கடி பழுதடைந்து விடுவதால் குறித்த நேரத்தில் மின்விளக்குகள் சரி செய்ய இயலாத நிலை உள்ளதாகவும் மற்றும் சில மண்டலங்களில் இலகுரக / கனரக வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மடிக்கக்கூடிய ஏணிகளைக்கொண்டு வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்தப்பட்டு பழுதுகள் சரிசெய்யப்படுவதாகவும், விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் சென்னை மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு புதியதாக மின்விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாகவும், இவைகளை சரி செய்தல், அருகிலுள்ள மண்டலங்களிலிருந்து வாகனங்கள் பெறப்பட்டு பழுதுகள் சீர் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்பொழுது எழுந்துள்ள தேவைகள் மற்றும் மின்விளக்கு பழுதுகள் குறித்த புகார்களை உடனடியாக சரிசெய்ய 7 மீட்டர் உயரமுள்ள 15 எண்ணிக்கையில் புதியதாக கனரக வாகனத்தின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் (Hydraulic) இயங்கும் ஏணிவண்டிகள் 4 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடிய கொள்முதல் செய்து தருமாறு கோரியுள்ளார்கள்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2012–13ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கையில் மின்சாரத்துறை என்னும் தலைப்பின் கீழ் பத்தி எண். 48ல் 15 எண்ணிக்கையில் புதியதாக வாகனத்தின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் (Hydraulic) இயங்கும் ஏணிவண்டிகள் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார். தற்போது மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) இவ்வகை வாகனங்களை 9 மீட்டருக்கு பதிலாக 7 மீட்டர் கொண்ட மேற்படி வாகனங்களை 4 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடிய வாகனங்கள் கொள்முதல் செய்து தருமாறு கோரியுள்ளார்.

இவ்வகை உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் தோராய மதிப்பீடு ஒரு வாகனத்திற்கு ரூ.38.00 இலட்சம் வீதம் 15 வாகனங்களுக்கு ரூ.570 இலட்சங்கள் ஆகும். மற்றும் 4 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான தோராய மதிப்பீடு ரூ. 260 இலட்சங்கள் ஆகும்.

இவ்வாகனத்தின் தொழில் நுட்பம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விவரங்களை (Equipment specification and Safety features) இறுதி செய்வதற்கு கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து, அதன் பின் ஒப்பம் கோரலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

01. மேற்பார்வை பொறியாளர் (சா (ம) பா) தலைமையிடம்,
02. மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) தலைமையிடம்,
03. மேற்பார்வை பொறியாளர் (திகமே/இ/வரைபடம்) வடக்கு,
04. மேற்பார்வை பொறியாளர் (திகமே/இ/வரைபடம்) மத்தியம்,
05. மேற்பார்வை பொறியாளர் (திகமே/இ/வரைபடம்) தெற்கு,

இக்கொள்முதலுக்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறைக்கான மூலதன ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012–13ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள அறிவிப்பின்படி மின்துறைக்கென 7 மீட்டர் உயரமுள்ள தெருவிளக்குகள் பழுதுபார்க்கும் பணிக்காக 15 எண்ணிக்கையில் வாகனங்களின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் இயங்கும் ஏணிவண்டிகள் 4 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடிய ரூ.830 இலட்சங்கள் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இக்கொள்முதலுக்கான செலவீனத்தை 2014–15ம் ஆண்டிற்கான இயந்திரப்பொறியியல் துறைக்கான ஒதுக்கப்பட்டுள்ள மூலதன நிதி ஒதுக்கீட்டில் இருந்து மேற்கொள்ளவும்,
3. இவ்வாகனத்தின் தொழில் நுட்பம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விவரங்களை (Equipment specification and Safety features) இறுதி செய்வதற்கு மேற்கண்ட 5 பேர் கொண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து, அதன் பின் ஒப்பம் கோரவும்.

எனவே, மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மானஎண்.426/2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.09.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.09.2014 அன்று தீர்மான எண்.435/2014ன்படி நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/26376/2014.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.540/2014 **பொருள் எண்.67**

**மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் –**

**01.07.2014 ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்க –மன்றத்தின் ஒப்புதல் பெற அனுமதி**

சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கு 01.07.2014ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | மண்டல அலுவலர் |
| 2 | மைய நாள் | 01.07.2014 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.15600 –39100 + தர ஊதியம் ரூ.7600 |
| 4 | ஊட்ட பதவியில் பெயர் மற்றும் தகுதிகள் | **ஏற்கனவே அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிவிதிகள்:–**<br>(1) கூடுதல் வருவாய் அலுவலர் பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலம், தலைமை கணக்கு அலுவலர் பதவி உயர்வு மூலம்,<br>(2) கூடுதல் சுகாதார அலுவலர் பதவி உயர்வு மூலம்,<br>(3) செயற் பொறியாளர், கோட்ட மின் பொறியாளர்,<br>பொதுப் பிரிவு / சுகாதாரப் பிரிவு / பொறியியல் பிரிவில் 3 : 2 : 5 என்ற விகிதாசார அடிப்படையில் இப்பதவியினை நிரப்ப வேண்டும்.<br>(Promotion to the post shall be made on the grounds of merit and ability, seniority being considered where merit and ability are approximately equal).<br>(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம்.<br>(ஆ) வளர்நிலைப் பதவியில் 3 ஆண்டுகள் பணி தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>(இ) சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–1 அல்லது செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>**தற்போது மாற்றம் செய்ய உத்தேசிக்ககப்பட்டுள்ள பணிவிதிகள்:–**<br>**METHOD OF APPOINTMENT:-**<br>1. By appointment of Junior I.A.S., Officers or District Revenue Officers on deputation; or<br>2. By appointment of Municipal Commissioners of Special Grade and above from Tamil Nadu Municipal Commissioner Service on deputation; or<br>3. By appointment of officers from any other State Service on deputation; or<br>4. By transfer from the holders of the post of Additional Revenue Officers and by promotion from the holders of the post of Chief accounts Officer and personal Assistant to Commissioner; or<br>5. By promotion from the holders of the post of Additional Health Officer; or<br>6. **By promotion from the holders of the post of Executive Engineer and Divisional Electrical Engineer and the ratio between the officers in items Nos (iv), (v) and (vi) shall be**<br>**Addl. R.O. - 1 :**<br>**C.A.O. - 1 :**<br>**Addl. C.H.O.- 1 :**<br>**D.E.E. - 2 :**<br>**E.E. - 10 :**<br>**In case of non- availability of officers in any one of the above said categories, the posts will be filled up from available officers from other category. In case 2 or more people compete for** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **the vacancy, the senior most officer (based on the date of joining in Corporation service) will be included in the panel.**<br>**Explanation**: Promotion to the post shall be made on the grounds of merit and ability, seniority being considered where merit and ability are approximately equal.<br>**QUALIFICATION:-**<br>1. Graduate of any recognized University<br>2. **Must have worked atleast for period of 1 year in the category from which they are selected by promotion.**<br>3. Must have passed Account Test for Subordinate Officers part-I or Account Test for Executive Officers. | | |
| 5 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | – | 15 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | – | 07 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | – | 08 |
| | | 2. அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடம் | – | 15 |
| | | 3. தற்பொது மண்டல அலுவலராக பணிபுரிபவர்கள் | – | 10 |
| | | 4. அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்ட பணியிடம் | – | 08 |
| | | 5. பதவி உயர்வு மூலம் நிரப்பட்ட பணியிடம் | – | 02 |
| | | 6. மைய நாளில் ஏற்பட்ட காலிப்பணியிடம் | – | 05 |
| | | 7. 01.07.2014 முதல் 30.06.2015 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 00 |
| | | 8. பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 02 |
| | | 9. 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் | – | 00 |
| | | **மொத்த காலிப்பணியிடம்** | **–** | **07** |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம். | | | –ஆம்– |

மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு 2014–2015ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் மேற்கண்டவாறு 7 காலிப்பணியிடங்களுக்கு தயாரிக்கப்படவேண்டும். எனினும் சென்னை மாநகராட்சியில் மாவட்ட வருவாய் அலுவலர்கள்/நகராட்சி ஆணையர்கள் அயற்பணி அடிப்படையில் 8 நபர்கள் பணிபுரிந்துவருகிறார்கள். இவர்கள் அவ்வப்போது பணியிட மாற்றத்தாலும் பதவி உயர்வாலும் சென்னை மாநகராட்சி பணியிலிலிருந்து மாற்றுபணியாளரின்றி விடுவிக்கப்படுவதால் மண்டல அலுவலர் பதவியில் காலிப்பணியிடங்கள் ஏற்படுகிறது இதனால் சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவியில் வாளயமாக தினந்தோறும் நடைபெறும் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே நிர்வாக நலன் கருதி சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட 15 பணியிடங்களுக்கும் தெரிவுப்பட்டியல் தயாரிக்க வேண்டிய அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றம் வசம் உள்ளது.

மண்டல அலுவலர் பணியிடங்களை நிரப்புவதற்காக தகுதியுள்ள நபர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு துறை தலைவர்கள்/மண்டல அலுவலர்களிடம் கோரப்பட்டு, வரப்பெற்ற விவரங்களின்படி சென்னை மாநகராட்சி பொதுப்பணி பிரிவின் கீழ்வரும் கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் உள்ள திரு.ஜே.கே.பட்டாபிராமன் அவர்கள் தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளார். இதன்படி இவருக்கு 3 வருட காலங்களுக்கு மண்டல அலுவலர் பதவி வழங்க இயலாது என்பதால் இக்காலிப்பணியிடத்தை நிரப்ப தகுதியான நபர் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சென்னை மாநகராட்சி பொதுப்பணி பிரிவின் கீழ்வரும் தலைமை கணக்கு அலுவலர் பதவியில் உள்ளவர்கள் எவரும் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கான தகுதிகள் பெற்றிருக்கவில்லை என தெரிவித்து மத்திய கணக்கு குழுமத்தில்" **இன்மை அறிக்கை"** அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இக்காலிப்பணியிடத்தை நிரப்ப தகுதியான நபர் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சென்னை மாநகராட்சி சுகாதார பணிப்பிரிவின் கீழ்வரும் மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் உள்ள டாக்டர். இ.சரஸ்வதி, அவர்கள் மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ளார். ஆனால் தனியர் ஊட்டப்பதவியான கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் 06.11.2013 அன்று பணியில் சேர்ந்து 1 வருடகாலத்திற்கும் குறைவாக அதாவது 01.07.2014 தேதி வரை 7 மாதங்கள் மட்டுமே பணிபுரிந்துள்ளார் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு ஊட்டப்பதவியில் 1 ஆண்டு பணிக்காலம் நிர்ணயிக்க அரசின் ஆணை கோர உள்ளதாலும் இவரது பெயரையும் இத்தெரிவுப்பட்டியல் சேர்த்து அரசின் பரிசீலனைக்கு பரிந்துரைக்கப்படவேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சி மின்துறைக்கு ஒதுக்கப்பட்ட 2 பணியிடத்திற்கு ஒருவர் மட்டும் விருப்பம் தெரிவித்துள்ளார் மற்றவர் மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பமின்மை தெரிவித்துள்ளார். எனவே இக்காலிப்பணியிடத்தை நிரப்ப நபர் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**<u>மண்டல அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட பணியிடம்</u>**

| வ.எண் | பதவியின் பெயர் | ஒதுக்கப்பட்ட பணியிடம் மற்றும் பதவி உயர்வால் நிரபப்ட வேண்டிய பணியிடம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | கூடுதல் வருவாய் அலுவலர் | 1 | விருப்பமின்மை |
| 2 | தலைமை கணக்கு அலுவலர் | 1 | நபர் இல்லை |
| 3 | கூடுதல் சுகாதார அலுவலர் | 1 | 1 நபர் விருப்பம் தெரிவித்துள்ளார் |
| 4 | கோட்ட மின் பொறியாளர் | 2 | 1 நபர் விருப்பம் தெரிவித்துள்ளார் |
| 5 | செயற்பொறியாளர் | 10 | 13 நபர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். |
| **மொத்தம்** | | **15** | |

மண்டல அலுவர் பதவிக்கு தற்போது திருத்தப்பட்ட பணிவிதிகள் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது அதில் **பணிநியமன முறை** என்ற தலைப்பில் வரிசை எண்.6ல் "**In case of non-availability of officers in any one of the above said categories, the posts will be filled up from available officers from other category. In case 2 or more people compete for the vacancy, the senior most officer (based on the date of joining in Corporation service) will be included in the panel".** என வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஊட்டப்பதவியில் ஊட்டபதவியான கூடுதல் வருவாய் அலவலர், தலைமை கணக்கு அலுவலர் மற்றும் கோட்ட மின் பொறியாளர் பதவிகளில் தகுதியான நபர்கள் இல்லாததால் இப்பணியிடங்களை மற்ற ஊட்டப்பதவியான செயற்பொறியாளர் பதவியில் இருக்கும் தகுதியான நபர்களைக்கொண்டு நிரப்பிட பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், கோட்ட மின் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் பதவியில் பணிபுரியும் அலுவலர்களின் முதுநிலை பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | செயற் பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் | மூன்று ஆண்டு பணி முடிக்கும் காலம் | மைய நாளில் செயற் பொறியாளர் பதவியில் தற்போது வரை பணிபுரிந்து ள்ள காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | கூடுதல் வருவாய் அலுவலர் பணியிடம் | – | – | – | திரு.ஜே.கே.பட்டாபிராமன் அவர்கள் தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 02 | தலைமை கணக்கு அலுவலர் பணியிடம் | – | – | – | தகுதியான நபர் எவரும் இல்லை. |
| 03 | டாக்டர்.இ.சரஸ்வதி மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்). | 06.11.2013 | 06.11.2016 | 7 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 04 | எம்.பரந்தாமன், கோட்ட மின்பொறியாளர், மின்துறை. | 03.08.2012 | 03.08.2015 | 1 வருடம் 10 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 05 | ஆர்.விஜயலக்ஷ்மி, கோட்ட மின்பொறியாளர், மின்துறை. | 03.08.2012 | 03.08.2015 | 1 வருடம் 10 மாதங்கள் | தனியர் தனக்கு தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு விருப்பமில்லை என கடிதம் அளித்துள்ளார். |
| 06 | எல்.ரட்சகர், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள், வட்டார துணை ஆணையர்(மத்தியம்) அலுவலகம். | 19.11.2010 | 19.11.2013 | 3 வருடம் 7 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. |
| 07 | எஸ்.இளஞ்செழியன், செயற்பொறியாளர், கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம் துறை, வட்டார துணை ஆணையர்(தெற்கு). | 01.03.2011 | 01.03.2014 | 3 வருடம் 4 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(a)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கையில் வழங்கப்பட்ட தண்டனை 01.07.2014 முதல் 31.10.2014 வரை நடப்பில் உள்ளது. மேலும் தண்டனையை எதிர்த்து அரசிடம் செய்த தனியரின் மேல்முறையீடு மனு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 08 | ப்பி.ட்டி.ராமன், செயற்பொறியாளர், மண்டலம்–11. | 09.04.2012 | 09.04.2015 | 2 வருடம் 3 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. |
| 09 | எஸ்.காளிமுத்து, செயற்பொறியாளர், மண்டலம்–08. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 10 | சி.பிரதாப், செயற்பொறியாளர், மண்டலம்–15. | 17.01.2013 | 17.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 11 | ஆர்.ரங்கநாதன், செயற்பொறயாளர், மண்டலம்–10. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | கே.சின்னசாமி, செயற்பொறியாளர், மண்டலம்–11. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 13 | எல்.நந்தகுமார், செயற்பொறியாளர், தரக்கட்டுப்பாடு (தெற்கு), தலைமையிடம்,. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 14 | எம்.முருகன், செயற்பொறியாளர், மண்டலம்–09. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 15 | ஆர்.துரைசாமி, செயற்பொறியாளர், மண்டலம்–05. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 16 | எஸ்.சக்திமணிகண்டன், செயற்பொறியாளர், மண்டலம்–01. | 26.12.2013 (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள்:11.01.2013) | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 17 | டி.கே.மோகன், செயற்பொறியாளர், கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம், வட்டார துணை ஆணையர் அலுவலகம்(மத்தியம்) | 11.01.213 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 18 | எஸ்.பி.பாலசுப்பரமணியன் செயற்பொறியாளர், மண்டலம்–14. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 19 | எஸ்.நடராஜன், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை, வட்டார துணை ஆணையர் அலுவலகம் (வடக்கு) | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 20 | ஆர்.பாலசுப்பரமணியன், செயற்பொறியாளர், மண்டலம்–05. | 25.07.2014 (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள் 11.01.213) | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 21 | பி.ராஜேந்திரன், செயற்பொறியாளர், மழைநீர் வடிகால் துறை. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 22 | ஜி.விரப்பன், செயற்பொறியாளர், கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம்,வட்டார துணை ஆணையர் அலுவலகம்(வடக்கு). | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | கே.சம்பத்குமார்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–13. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 24 | கே.விஜயகுமார்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–07. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 25 | எஸ்.சங்கர்,<br>செயற்பொறியாளர்,<br>திடக்கழிவு மேலாண்மை மற்றும் இயந்திரம்,<br>வட்டார துணை ஆணையர் அலுவலகம்(வடக்கு) | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 26 | பி.கே.விஜயா,<br>செயற்பொறியாளர்,<br>நகரமைப்பு,<br>வட்டார துணை ஆணையர் அலுவலகம்(வடக்கு) | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |

மேற்கண்ட முதுநிலை பட்டியலில் கண்டுள்ள மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், கோட்ட மின் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்களில் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி துறை தேர்வுகளில் தேர்ச்சி பெற்று மண்டல அலுவலர் பதவிக்கு தகுதி பெற்றுள்ளவர்களில் மூன்றாண்டு காலம் பணி தகுதியினை எவரும் பெற்றிருக்கவில்லை.

மண்டல அலுவலர் பதவிக்கு மேலே தெரிவித்தவாறு பணிவிதிகளை மாற்றம் செய்ய உத்தேசித்து மன்ற தீர்மானம் எண்.706/2013, நாள்:31.10.2013ல் தீர்மானிக்கப்பட்டு அரசாணை கோரி அரசுக்கு பிரேரனை அனுப்பப்பட்டது.

எனினும் மண்டல அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் 3 ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து 1 ஆண்டு பணிநிறைவு செய்த செயற்பொறியாளர்களைக் கொண்டு மண்டல அலுவலர் பணியிடத்தை 2013–2014ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் மூலம் நிரப்புவதற்கு அரசாணை(ப) எண்.14, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3) துறை, நாள்:20.01.2014ல் ஆணையிடப்பட்டிருந்ததின் அடிப்படையில் சென்ற ஆண்டு பணிக்கால தகுதியை தளர்வு செய்து தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மண்டல அலுவலர் பதவி முக்கியத்துவம் வாய்ந்த பதவி என்பதாலும், இப்பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட பணிகள் 10–லிருந்து 15–ஆக கூடுதலாக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவியில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப நிர்வாக நலன் கருதி சென்ற ஆண்டை போல பணிக்காலத் தகுதியை தளர்வு செய்து தெரிவுப்பட்டியல் தயாரித்து அரசின் ஆணை கோரலாம்.

மேற்கண்ட விவரங்களின்படி 1 ஆண்டு பணிநிறைவு செய்த செயற் பொறியாளர்கள் மற்றும் கோட்ட மின் பொறியாளர் மற்றும் 1 ஆண்டு பணி நிறைவு செய்யாத மாநகர கூடுதல் சுகாதார அலுவலரை கொண்டு 2014–2015ஆம் ஆண்டிற்கான மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் பட்சத்தில் செயற்பொறியாளர் மற்றும் கோட்ட மின் பொறியாளர் பதவியில் மூப்பு நிலையின் படி மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்த நபர்களின் பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | செயற் பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் | தெரிவுப் பட்டியலில் சேர்க்கலாமா | தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம்(ஆட்சேபணை ஏதேனும் இருப்பின்) |
|---|---|---|---|---|
| 01 | கூடுதல் வருவாய் அலுவலர் பணியிடம் | – | – | நபர் இல்லை |
| 02 | தலைமை கணக்கு அலுவலர் பணியிடம் | – | – | நபர் இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | டாக்டர்.இ.சரஸ்வதி<br>கூடுதல் சுகாதார<br>அலுவலர்,<br>வட்டார துணை<br>ஆணையர்<br>அலுவலகம்(மத்தியம்). | **06.11.2013** | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் மாநகர சுகாதார கூடுதல் அலுவலர் பதவியில் 01.07.2014 தேதியில் 7 மாதங்கள் மட்டுமே பணி புரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து **அரசின் தளர்வாணைக்குட்பட்டு இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம்.** |
| 04 | எம்.பரந்தாமன்,<br>கோட்ட மின் பொறியாளர்,<br>மின்துறை. | **03.08.2012** | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 10 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 05 | ஆர்.விஜயலக்ஷ்மி,<br>கோட்ட மின் பொறியாளர்,<br>மின்துறை. | **03.08.2012** | இல்லை | தனியர் தனக்கு தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 06 | எல்.ரட்சகர்,<br>செயற்பொறியாளர்,<br>பேருந்து சாலைகள்,<br>வட்டார துணை<br>ஆணையர்(மத்தியம்)<br>அலுவலகம். | **19.11.2010** | இல்லை | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 07 | எஸ்.இளஞ்செழியன்,<br>செயற்பொறியாளர்,<br>கட்டடம், பூங்கா மற்றும்<br>அரங்கம் துறை,<br>வட்டார துணை<br>ஆணையர்(தெற்கு). | **01.03.2011** | இல்லை | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(a)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கையில் வழங்கப்பட்ட தண்டனை 01.07.2014 முதல் 31.10.2014 வரை நடப்பில் உள்ளது. மேலும் தண்டனையை எதிர்த்து அரசிடம் செய்த தனியரின் மேல்முறையீடு மனு அரசின் பரிசீலனையில் உள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 08 | ப்பி.ட்டி.ராமன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–11. | **09.04.2012** | இல்லை | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | எஸ்.காளிமுத்து, செயற்பொறியாளர், மண்டலம்–08. | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியாரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 10 | சி.பிரதாப், செயற்பொறியாளர், மண்டலம்–15. | 17.01.2013 | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை யென்பதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 11 | ஆர்.ரங்கநாதன், செயற்பொறயாளர், மண்டலம்–10. | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்ற விவரம் இணையதளம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தேர்வில் தனியர் தேர்ச்சி பெற்ற விவரம் அரசு செய்தி வெளியீட்டில் (Govt.Gazette) அறிவிக்கப்படும் முடிவுக்கு உட்பட்டு தனது பெயரை தெரிவுப்பட்டியலிலிருந்து நீக்கும் நிலை ஏற்படின் இதனை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியர் கடிதம் அளித்துள்ளதாலும், இக்கடிதத்தில் துறை தலைவர் பரிந்துரை செய்து உள்ளதாலும், இவர் செயற் பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதாலும். **இத்தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 12 | கே.சின்னசாமி, செயற்பொறியாளர், மண்டலம்–11. | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 13 | எல்.நந்தகுமார், செயற்பொறியாளர், தரக்கட்டுப்பாடு (தெற்கு), தலைமையிடம்,. | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்ற விவரம் இணையதளம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தேர்வில் தனியர் தேர்ச்சி பெற்ற விவரம் அரசு செய்தி வெளியீட்டில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | (Govt.Gazette ) அறிவிக்கப்படும் முடிவுக்கு உட்பட்டு தனது பெயரை தெரிவுப்பட்டியலிலிருந்து நீக்கும் நிலை ஏற்படின் இதனை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்து தனியர் கடிதம் அளித்துள்ளதாலும், இக்கடிதத்தில் துறை தலைவர் பரிந்துரை செய்து உள்ளதாலும், இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதாலும். **இத்தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 14 | எம்.முருகன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–09. | **11.01.2013** | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 15 | ஆர்.துரைசாமி,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–05. | **11.01.2013** | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லையென்பதால் இத்தெரிவுப் பட்டியலில் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 16 | எஸ்.சக்திமணிகண்டன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–01. | **26.12.2013** (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள்:11.01.2013) | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதால் இத்தெரிவுப் பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 17 | டி.கே.மோகன்,<br>செயற்பொறியாளர்,<br>கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம்,<br>வட்டார துணை ஆணையர் அலுவலகம்(மத்தியம்) | **11.01.213** | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்ற விவரம் இணையதளம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தேர்வில் தனியர் தேர்ச்சி பெற்ற விவரம் அரசு செய்தி வெளியீட்டில் (Govt.Gazette) அறிவிக்கப்படும் முடிவுக்கு உட்பட்டு தனது பெயரை தெரிவுப்பட்டியலிலிருந்து நீக்கும் நிலை ஏற்படின் இதனை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியர் கடிதம் அளித்து உள்ளதாலும், இக்கடிதத்தில் துறை தலைவர் பரிந்துரை செய்து உள்ளதாலும், இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதாலும். **இத்தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | எஸ்.பி.பாலசுப்பரமணியன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–14. | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 19 | எஸ்.நடராஜன்,<br>செயற்பொறியாளர்,<br>பேருந்து சாலைகள் துறை,<br>வட்டார துணை ஆணையர்அலுவலகம் (வடக்கு) | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 20 | ஆர்.பாலசுப்பரமணியன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–05. | 25.07.2014 (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள் 11.01.213) | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 21 | பி.ராஜேந்திரன்,<br>செயற்பொறியாளர்,<br>மழைநீர் வடிகால் துறை. | 11.01.2013 | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லையென்பதால் இத்தெரிவுப் பட்டியலில் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 22 | ஜி.விரப்பன்,<br>செயற்பொறியாளர்,<br>கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம்,<br>வட்டார துணை ஆணையர் அலுவலகம்(வடக்கு). | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 23 | கே.சம்பத்குமார்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–13. | 11.01.2013 | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை யென்பதால் இத்தெரிவுப் பட்டியலில் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 24 | கே.விஜயகுமார்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–07. | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்து உள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | எஸ்.சங்கர்,<br>செயற்பொறியாளர்,<br>திடக்கழிவு மேலாண்மை<br>மற்றும் இயந்திரம்,<br>வட்டார துணை<br>ஆணையர்<br>அலுவலகம்(வடக்கு) | 11.01.2013 | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி செயல் அலுவலர் களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை யென்பதால் இத்தெரிவுப் பட்டியலில் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 26 | பி.கே.விஜயா,<br>செயற்பொறியாளர்,<br>நகரமைப்பு,<br>வட்டார துணை<br>ஆணையர்<br>அலுவலகம்(வடக்கு) | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |

எனவே,

1. மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு 2014–2015ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் மேற்கண்டவாறு 7 காலிப்பணியிடங்களுக்கு தயாரிக்கப்படவேண்டியிருந்தாலும், சென்னை மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்துவரும் மாவட்ட வருவாய் அலுவலர்கள்/நகராட்சி ஆணையர்கள் அவ்வப்போது பணியிட மாற்றத்தாலும் பதவி உயர்வாலும் சென்னை மாநகராட்சி பணியிலிலிருந்து மாற்றுபணியாளரின்றி விடுவிக்கப்படும் நேர்வில் திடீரென மண்டல அலுவலர் பதவியில் காலிப்பணியிடங்கள் ஏற்படுகிறதால் சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவியில் வாளயமாக நடைபெறும் பணிகள் தொய்வின்றி நடைப்பெற சென்னை மாநகராட்சியின் நிர்வாக நலன் கருதி மண்டல அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட 15 பணியிடங்களில் தற்போது மண்டல அலுவலராக பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ள அலுவலர்களில் ஊட்டப்பதவியில் ஒராண்டு பணி நிறைவு செய்தவர்கள் மற்றும் ஒராண்டு பணிநிறைவு செய்யாதவர்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட 15 நபர்களைக்கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு விதிமுறைகளிலிருந்து விலக்களித்து அரசின் ஒப்புதல் வேண்டியும்,
2. மண்டல அலுவலர் பதவிக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப் பட்ட பணிவிதியின்படி ஊட்டப்பதவியில் 3 ஆண்டு பணிபுரிந்திருக்க வேண்டு என்பதிலிருந்து 3 ஆண்டுகளுக்கு குறைவாக ஆனால் 1 ஆண்டிற்கு மேல் பணிபுரிந்துள்ள கோட்ட மின் பொறியாளர்/செயற்பொறியாளர்கள் ஆகியோர்களைக் கொண்டும், 1 ஆண்டிற்கும் குறைவாக பணிபுரிந்துள்ள மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் அவர்களின் பெயரைக்கொண்டும் மண்டல அலுவலர் பதவிக்கு தயாரிக்கப்பட்டுள்ள இத்தெரிவுப்பட்டியலில் கீழ்கண்ட நபர்களின் பெயர்களை சேர்ப்பதற்கும்,

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | கூடுதல் சுகாதார அலுவலர்/செயற்பொறியாளர்/ கோட்ட மின் பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | டாக்டர்.இ.சரஸ்வதி<br>மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்,<br>வட்டார துணை ஆணையர் அலுவலகம்(மத்தியம்). | 06.11.2013 |
| 02 | எம்.பரந்தாமன்,<br>கோட்ட மின் பொறியாளர், மின்துறை. | 03.08.2012 |
| 03 | எஸ்.காளிமுத்து,<br>செயற்பொறியாளர், மண்டலம்–08. | 11.01.2013 |
| 04 | ஆர்.ரங்கநாதன்,<br>செயற்பொறியாளர், மண்டலம்–10. | 11.01.2013 |
| 05 | கே.சின்னசாமி,<br>செயற்பொறியாளர், மண்டலம்–11. | 11.01.2013 |
| 06 | எல்.நந்தகுமார்,<br>செயற்பொறியாளர், தரக்கட்டுப்பாடு (தெற்கு),<br>தலைமையிடம். | 11.01.2013 |

| | | |
|---|---|---|
| 07 | எம்.முருகன்,<br>செயற்பொறியாளர், மண்டலம்–09. | 11.01.2013 |
| 08 | எஸ்.சக்திமணிகண்டன்,<br>செயற்பொறியாளர், மண்டலம்–01. | 26.12.2013<br>(கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள்:11.01.2013) |
| 09 | டி.கே.மோகன்,<br>செயற்பொறியாளர்,<br>கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம்,<br>வட்டார துணை ஆணையர் அலுவலகம்(மத்தியம்) | 11.01.213 |
| 10 | எஸ்.பி.பாலசுப்பரமணியன்,<br>செயற்பொறியாளர், மண்டலம்–14. | 11.01.2013 |
| 11 | எஸ்.நடராஜன்,<br>செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை,<br>வட்டார துணை ஆணையர்அலுவலகம்(வடக்கு) | 11.01.2013 |
| 12 | ஆர்.பாலசுப்பரமணியன்,<br>செயற்பொறியாளர், மண்டலம்–05. | 25.07.2014 (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள் 11.01.213) |
| 13 | ஜி.விரப்பன்,<br>செயற்பொறியாளர்,கட்டடம், பூங்கா மற்றும் அரங்கம்,<br>வட்டார துணை ஆணையர் அலுவலகம்(வடக்கு). | 11.01.2013 |
| 14 | கே.விஜயகுமார்,<br>செயற்பொறியாளர், மண்டலம்–07. | 11.01.2013 |
| 15 | பி.கே.விஜயா,<br>செயற்பொறியாளர், நகரமைப்பு,<br>வட்டார துணை ஆணையர் அலுவலகம்(வடக்கு) | 11.01.2013 |

3. மேற்படி தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு தெரிவுப்பட்டியலில் கண்டுள்ள மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்/செயற்பொறியாளர்கள்/கோட்ட மின் பொறியாளர் ஆகியோர்கள் மந்தன அறிக்கையை சமர்ப்பிக்காததால் இவர்களின் மந்தன அறிக்கைகள் பெறப்பட்டபின் பதவி உயர்வு வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன், அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள /மைய நாளுக்கு பின்பு ஏற்படவுள்ள மற்றும் அயற்பணியில் பணிபுரியும் மண்டல அலுவலர்கள் பணியிடம் மாறுதலால் ஏற்படும் காலிப்பணியிடங்களில் தேர்ந்த இப்பெயர் பட்டியலிருந்து ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.7600 என்ற ஊதிய விகிதத்தில் மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்க அரசின் ஆணை பெறுவதற்கும்,
4. மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.4, 6 மற்றும் 9ல் இடம்பெற்றுள்ள திரு.ஆர்.ரங்கநாதன், செயற்பொறியாளர், திரு.எல்.நந்தகுமார், செயற்பொறியாளர் மற்றும் திரு.டி.கே.மோகன், செயற்பொறியாளர் ஆகியோர்கள் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்ற விவரம் இணையதளம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தேர்வில் தனியர் தேர்ச்சி பெற்ற விவரம் அரசு செய்தி வெளியீட்டில் (Govt.Gazette) அறிவிக்கப்படும் முடிவுக்கு உட்பட்டு அவர்களது பெயர்களை தெரிவுப்பட்டியலிலிருந்து நீக்கும் நிலை ஏற்படின், இதனை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியர்கள் கடிதம் அளித்துள்ளதாலும், இக்கடிதத்தில் துறை தலைவர் பரிந்துரை செய்துள்ளதாலும், இத்தேர்வில் இவர்கள் தேர்ச்சி பெற்ற விவரம் அரசு செய்தி வெளியீட்டில் (Govt.Gazette ) அறிவிக்கப்படும் முடிவுக்கு உட்பட்டு இவர்களுக்கு ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.7600 என்ற ஊதிய விகிதத்தில் மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்க அரசின் ஆணை பெறுவதற்கும்,
5. மன்ற தீர்மானம் எண்.706/2013, நாள்:31.10.2013ல் மண்டல அலுவலர் பதவிக்கு மேலே தெரிவித்தவாறு பணிவிதிகளை மாற்றம் செய்ய உத்தேசித்து பணிவிதிகளுக்கு திருத்தம் கோரி அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரனை அரசின் பரிசீலனையில் உள்ளதால் அரசின் ஒப்புதலுக்குட்பட்டு தயாரிக்கப்பட்ட இத்தெரிவுப்பட்டியலுக்கு,

நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>சு.து(ம)ந.க.எண்.எம்.1/696/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.541/2014 **பொருள் எண்.68**

**<u>தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்</u>**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவில் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பதவியின் பெயர் | தலைமை பூச்சி தடுப்பு அலுவலர், வகுப்பு –1 பி |
| 2 | மைய நாள் | 01.04.2014 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.15600–39100+6600 தர ஊதியம் |
| 4 | ஊட்ட பதவியின் பெயர் மற்றும் தகுதிகள்<br>Method of ·Appointment<br><br>Qualification | முதுநிலை பூச்சியியலாளர்<br><br>By promotion from the cadre of senior Entomolgist in catogory-4 class – II Service<br>Bachelors Degree in Zoology of University or Institution recognized by the University grants Commission or equalivent qualifications in Medical Entomology |
| 5 | காலிப்பணியிடம் விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 01<br>(அ) தற்காலிக பணியிடம் – 00<br>(ஆ) நிரந்தர பணியிடம் – 01<br>2. மைய நாளிலுள்ள காலிப்பணியிடம் – 00<br>3. 01.04.2014 முதல் 31.03.2015 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 01<br>4. பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 00<br>5. 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் – 00<br>6. மொத்தம் காலிப்பணியிடம் – 01 |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா இல்லையெனில் காரணம். | தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு முழுமையாக பயன்படுத்தப்பட்டது. |

**7. பணிமூப்பின்படி முதுநிலை பூச்சியியலர்களின் விவரம்**

| வ. எண் | பெயர்/ திருவாளர்கள் | தற்போது உள்ள பதவியின் பெயர் | தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் | தெரிவுப் பட்டியலில் சேர்க்க லாமா | மந்தன அறிக்கை விவரம் | தெரிவுப் பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற் கான காரணம் (ஆட்சேபணை ஏதேனும் இருப்பின்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருமதி. A.சாமுண்டீஸ்வரி | முதுநிலை பூச்சியியலர் | 23.10.2007 | ஆம் | 25.09.2008முதல் 19.11.2008வரை (நன்று)<br>09.04.2009 முதல் 30.09.2010 வரை (நன்று)<br>30.9.2010 முதல் 15.11.2010(நன்று) | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 15.11.2010 முதல் 06.06.2011வரை (நுன்று) 27.07.2011 முதல் 09.04.2012வரை (நுன்று) 14.04.2012 முதல் 24.05.2012 (நுன்று) 24.05.2012 முதல் 15.10.2012 வரை (நுன்று) 16.10.2012 முதல் 01.07.2013வரை (மிக நன்று) 03.07.2013 முதல் 07.08.2014 வரை (நுன்று) | |
| 2 | திரு. S.செல்வகுமார் | முதுநிலை பூச்சியியலர் | 08.09.2012 | ஆம் | இல்லை | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணி விதிகளின்படி முழு தகுதிகள் பெற்றுள்ள தால் இவரது பெயரை தெரிவுப் பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம் |

அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள் 06.10.2009ல் சென்னை மாநகராட்சியில் வகுப்பு –1Bன் கீழ்வரும் பதவிகளை பணி நியமனம் செய்துக் கொள்ள சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவி உயர்வுக்கு ஊட்டப்பதவியான முதுநிலை பூச்சியியலர் பதவியில் மொத்தமுள்ள ஐந்து பணியிடங்களில் முன்று நபர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இந்த மூன்று நபர்களில் முதுநிலையில் உள்ள திருமதி. A. சாமூண்டிஸ்வரி, திரு.S.செல்வகுமார் ஆகியோர்கள் மீது எந்த விதமான ஒழுங்கு நடவடிக்கையோ தண்டனைகளோ நிலுவையில் இல்லை என்பதால் இவர்களது பெயரினை பதவி உயர்வுக்கு பரிந்துறை செய்யப்படுகிறது.

எனவே,

1. 01.04.2014ஐ மைய நாளாக கொண்டு திருமதி. A. சாமூண்டிஸ்வரி மற்றும் திரு.S.செல்வகுமார் ஆகியோர்களின் பெயர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,
2. மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்–1ல் கண்டுள்ள திருமதி.A.சாமூண்டிஸ்வரி, முதுநிலை பூச்சியியலர் அவர்களுக்கு தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவியில் ரூ.15600–39100+6600 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் மைய நாளில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்தவும்,

3. மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்–2ல் கண்டுள்ள திரு.S.செல்வகுமார் அவர்களின் மந்தன அறிக்கை வரப்பெறாததால் மந்தன அறிக்கை பெற்றுக் கொண்டு ரூ.15600–39100+6600தர ஊதியம் என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் மைய நாளுக்கு பின்பு ஏற்படவுள்ள காலி பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்தவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ9/3429/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.542/2014 **பொருள் எண்.69**

**நிலம் மற்றும் உடைமைத்துறை, மண்டலம் –5, வார்டு–53, மூலக்கொத்தளம், இடுகாடு/சுடுகாடு நிலம் – தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி**

மண்டலம்–5, வார்டு–53, மூலக்கொத்தளம், இடுகாடு/ சுடுகாடு, தண்டையார் பேட்டை கிராமம், புல எண்.1802/1–ல் மயான வகைப்பாடு கொண்ட மொத்த பரப்பளவு 19 காணி 13 மனை 2356 ச.அடி நிலம் உள்ளது. 19.08.2014 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மேற்படி நிலத்தை நேரில் ஆய்வு செய்து, இந்நிலத்தில் ஏழை எளிய மக்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு தேவைப்படும் நிலத்தை நிலம் மாற்றம் செய்வதற்கு நடைவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இதன் அடிப்படையில் 5–வது மண்டலம் அலுவலரிடமிருந்து இடுகாட்டிற்கு பயன்படுத்தாமல் உள்ள காலி நிலங்கள் அடங்கிய வரைப்படத்தை 29.09.2014 அன்று இத்துறையில் பெறப்பட்டது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தை மயான வகைப்பாட்டில் இருந்து குடியிருப்பு வகைப்பாடு பயன்பாட்டிற்கு அரசு ஒப்பதலுடன் மாற்றம் செய்த பின்னரே நிலம் மாற்றம் மற்றும் முன்நுழைவு அனுமதி வழங்க இயலும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புல எண்.1802/1–ல் உள்ள மொத்த பரப்பளவு 19 காணி 13 மனை 2356 ச.அடி நிலம் தற்போது மயான வகைப்பாட்டில் உள்ளது. தற்போது இந்நிலத்தின் பல பகுதிகள் இடுகாட்டிற்கு பயன்படுத்தாமல் காலியாக உள்ளன. இவ்வாறு காலியாக உள்ள நிலத்தில் மேற்படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆய்வு செய்து அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தேவையான நிலம் இருப்பது கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் கோரிக்கை கடிதம் அளித்துள்ளதன்படி மயான பயன்பாட்டில் உள்ள இந்நிலத்தை குடியிருப்பு பயன்பாட்டிற்கு வகைப்பாடு மாற்றம் செய்வதற்கும், அரசு நிர்ணயிக்கும் நில கிரயம் அடிப்படையில் நிலம் மாற்றம் செய்வதற்கும் அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நிமஉ துநகஎண்.எல்இ8/3430/ 2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.513/2014 **பொருள் எண்.70**

**சென்னைமாநகராட்சி திறந்தவெளிநிலங்கள் முறைப்படுத்துவதற்கு அனுமதி**

சென்னை மாநகர எல்லைக்குள்ளான பகுதிகளில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்ட அனுமதி வழங்கும் இனங்களில் உள்ள திறந்தவெளி நிலங்களை உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்ட அனுமதி கோருபவரிடம் திட்டப் பகுதியில் உள்ள திறந்தவெளி நிலங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் பெயரில் தானமாக பெற்று திட்ட அனுமதி வழங்கி வருகிறது. அவ்வாறு தானமாக பெற்ற நிலங்களை சென்னை மாநகராட்சியிடம் முறையாக ஒப்படைப்பது இல்லை. கடந்த 2002ஆம் ஆண்டு முதல் அவ்வாறு தானமாக பெற்ற நிலங்கள் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்காமல் இருப்பது தெரியவருகிறது. இதனால் சென்னை மாநகராட்சியால் திறந்தவெளி நிலங்களை முறையாக பராமரிக்க இயலாமல் உள்ள சூழல் இருந்து வருகிறது.

எனவே

1. இதுவரை சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால் தானமாக பெறப்பட்ட நிலங்களை உடனடியாக சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்குமாறு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. இனி வரும் காலங்களில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்படும் இனங்களில் சென்னை மாநகாட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திட்ட அனுமதி கோரும் நபர்கள் நேரடியாக திறந்தவெளி நிலங்களை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படை செய்து, அந்நிலங்களை சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட ஆவணங்களை சரிபார்த்து, கையகப்படுத்திய பின்னர் மன்றத்தின் அனுமதி பெற்று அதற்கான அத்தாட்சி வழங்கும்பட்சத்திலேயே சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு மாதமும் அந்த மாதத்தில் தானமாக பெறப்படும் திறந்தவெளி நிலங்களை முறையாக ஆய்வு செய்து கையகப்படுத்தி அந்தந்த மாத மன்றக்கூட்டத்திலேயே ஒப்புதல் பெற சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நிலம் மற்றும் உடைமைத்துறைக்கு இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/3215/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.09.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.544/2014 **பொருள் எண்.71**

**<u>மண்டலம் 1 முதல் 15 வரை சாலைகள் மற்றும் தெருக்களின் பெயர் பலகைகளில் தனி நபர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தால் உடனடியாக அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியின் சாலைகள் மற்றும் தெருக்களின் பெயர் பலகைகள் அமைக்கும்போது சாலைகள் மற்றும் தெருக்களின் பெயர்கள் மட்டுமே எழுதப்பட வேண்டும். வேறு எந்த தனிப்பட்ட நபரின் பெயரோ, வணக்கத்திற்குரிய மேயர், நிலைக்குழுத் தலைவர்கள், வார்டுகுழுத் தலைவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் பெயர்களோ பெயர் பலகைகளில் எழுதப்படக்கூடாது.

எனவே,

1. ஏற்கனவே சாலைகள் மற்றும் தெருக்களின் பெயர் பலகைகளில் தனி நபர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தால் உடனடியாக அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
2. இனிவருங்காலங்களில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சாலை மற்றும் தெருக்களின் பெயர் பலகைகளில் வேறு எந்த தனிப்பட்ட நபரின் பெயரோ, வணக்கத்திற்குரிய மேயர், நிலைக்குழுத் தலைவர்கள், வார்டுகுழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்களின் பெயர்களோ மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களோ எழுதப்படக்கூடாது
3. இதனை அனைத்து மண்டல அலுவலர்களும் நடைமுறைப்படுத்த கேட்டுக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******